ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஷு சித்திரை-மீ 3-உ (15—4—1934) | மலர் 21.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,

ஈரோடு.

3 அணா வெளியீடுகள்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:—இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| சிதம்பர ரகசியம் | ... | 0—8—0 |
| சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | | 0—4—0 |
| மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | | 0—8—0 |
| பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | | 0—6—0 |
| மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் | ... | 2—0—0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை | ... | 0—6—0 |
| சுயராஜ்யம் யாருக்கு | ... | 0—1—0 |
| சாமிகளின் அடிமைகள் | ... | 0—12—0 |
| சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் | ... | 2—0—0 |
| பகுத்தறிவு கீதம் | ... | 0—1—0 |
| காந்தி கிட்டு | ... | 0—1—0 |

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:— புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## வெளிவந்து விட்டது!

# சோஷியலிசம்.

உலகானுபவப் போ... ...gent womans guide to Socialism" என்ற ... ...ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

## நமது புதிய பி...

### சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

### போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# வருமான வரிகளும் மற்றவரிகளும்.

காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்கள் எழுதியது:—

சென்ற சுமார் ஐம்பது வருடங்களாக பல தேசங்களில் வரிச்சுமையை வகுக்கும் விதம் வெகு வேகமாக மாறி வருகின்றது. முன் காலங்களில் பெரும்பாலும் வரி பூமியைச் சாகுபடி செய்பவன் மீதும், சாமான்களை விற்பவன் மீதும் போடப்பட்டது. தற்பொழுதோ வரிகள் மேலும் மேலும் ஏழைகள் மீது போடப்படாமல் செல்வந்தர்கள் மீது விதிக்கப்படுகின்றது. வரி விதிக்கும் தத்துவமே சமீப காலத்தில் வெகு விரைவாக மாறியதே அதற்குக் காரணம். முதன் முதல் வரி பணக்காரர்கள் மீதும் ஏழைகள் மீதும் ஒரே மாதிரியாகப் போடப்பட்டது. அதற்குப் பெயர் தலைவரி. அம்மாதிரி வரி இன்னும் இந்தியாவில் பர்மாவில் போடப்பட்டு வருகிறது. ஆனால் சென்ற ஐம்பது வருடங்களாக இந்த தலைவரி நியாயமான வரியல்லவென்று நிபுணர்கள் அபிப்பிராயப்பட ஆரம்பித்தனர். ஏழை மீதும் தனவந்தர்மீதும் தலைக்கு இவ்வளவு ரூபாய் என்று போடுவது ஏழையை அதிகமாக பாதிக்குமென்பதில் ஐயமில்லை. ஆகையால் பல தேசங்களில் இந்த தலைவரியை கைவிட்டுவிட்டு வருமான வரியைப் பிடித்துக்கொண்டனர்.

வருமான வரிதான் நியாயமான வரியென்பதற்குச் சற்றும் ஐயமில்லை. முதலாவது பணக்காரனை அதிகமாக, தேசத்தை நடத்துவதற்கு கொடுக்கச் சொல்லுவது நியாயம். ஏழைக்கு தேசத்தில் கலவரம் ஏற்பட்டால் அவனுக்கு ஒன்றும் நஷ்டமில்லை. பணக்காரனுக்கு அவன் சொத்து போய் விடலாம். இரண்டாவதாக ஏழையை வரி கொடுக்கச் சொன்னால் அவன் ஏற்கனவே உடலையும் ஆவியையும் சேர்த்து வைக்க கஷ்டப்படுகையில் அவன் உணவுப் பொருள்களை வாங்க முடியாமல் அவனுடைய சொல்ப வருமானத்தைப் பிடுங்கிக்கொள்வது நாகரீகமல்ல. மூன்றாவதாகப் பணக்காரனிடம் வரி வசூல் செய்வது சுலபம். அவனுக்குக் குறைந்த கஷ்டத்தை விளைவித்து அவனிடம் வசூலிக்கலாம். மேலும் வரி வசூலிக்கும் செலவும் குறையும். இருபது ஏழைகளிடம் போய் கொஞ்சம் கொஞ்சமாக வரி வசூலிப்பதைப் பார்க்கிலும், ஒரு பணக்காரனிடம் வரி வசூலிப்பதில் செலவு குறையுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் பணக்காரனிடம் வருமான வரியையே மேலும் மேலும் வாங்குவதே நலமென்று கருதப்படுகிறது.

வருமானவரி துறைமுக வரிகளைவிட நல்ல வரியென்பதற்குச் சந்தேகமில்லை. துறைமுக வரி போடுவதால் வியாபாரிகள் தங்களுடைய சாமான்களின் விலைகளை உயர்த்துகிறார்கள். மேலும் அத்யாவசியமான சாமான்களின்மேல் துறைமுக வரிகளை விதித்தால் அத்துறைமுக வரிகளைக் கொடுப்பது ஏழைகளே. சாதாரணமாக எல்லா ஏழைகள் சாப்பிடும் உணவுப் பொருள்களின் மேல் வரி விதிக்கப்பட்டால் அது ஏழைகளைப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இங்கிலாந்தில் சமீப காலம் வரையில் உணவுப்பொருள்களின் மீது வரி போடுவது கலவரத்தைக்கூட ஏற்படுத்துமென்று பயப்படப்பட்டது. ஏனெனில் இங்கிலாந்தில் பெரும்பாலோர் வெளிநாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் கோதுமை, மாவு, டீ, கோகோ இன்னும் மற்ற சாமான்களைப் புசித்தே வாழவேண்டியிருக்கிறது. துறைமுக வரிகள் பணக்காரர்கள் உபயோகிக்கும் பண்டங்களின் மீதும் சுதேசி சாமான்களை அன்னியப் போட்டியிலிருந்து தடுப்பதற்குமே உபயோகிக்கப்படவேண்டுமென்று பலர் கருதுகின்றனர். சிலர் தேச சம்ரக்ஷணைக்காக வேண்டிய சில தொழில்களை சம்ரக்ஷிப்பதற்கும் விதிக்கப்படுவது நியாயமெனக் கருதுகின்றனர்.

வருமானவரி உள்நாட்டு எக்ஸைஸ் வரியைவிடவும் நல்ல வரியென்று நாம் சொல்லவேண்டியதில்லை. உள்நாட்டு எக்ஸைஸ்வரி பொதுஜனங்களுக்கு வேண்டிய உப்பு, நெருப்புப்பெட்டி இவைகளில் விதிக்கப்பட்டால் ஏழை மக்கள் தான் கொடுக்கின்றனர் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் கள், கஞ்சா, லாஹிரி வஸ்துக்கள் மீது விதிக்கவேண்டியது அவசியம். இவற்றை ஏழைகள் புசிப்பதால் கெடுதிதான் ஏற்படக்கூடுமேயன்றி நன்மை ஏற்பட முடியாது. ஆனால் கெடுதிதான் ஏற்படும் என்று பட்டவர்த்தனமாக தெரிந்திருக்கும் பொழுது அவற்றை வரி மட்டும் போட்டுத் தடுத்தால் போதாது. ஒன்று வெகு உயர்ந்த வரி போட்டுத் தடுக்கவேண்டும். டாக்டர் பரஞ்சபே சொன்னது போல் லாகிரி வஸ்துக்கள் அதிகமாகச்செலவழிய செலவழிய வரி மேலும் மேலும் உயர்த்திக்கொண்டு போவதுதான் உத்தமம். இப்பொழுது போல் ஒரு வருடத்துக்கு ஏலத்தில் விட்டு விட்டு வருடம் முழுவதும் கையைக்கட்டிக்கொண்டிருந்தால் ஒருநாளும் குடி போகப் போவதில்லை. கள்ளு புட்டிகள் அதிகமாகச் செலவழியசெலவழிய வரியை உயர்த்தினால் கள்ளுக்காரன் தன் லாபத்தையெல்லாம் கவர்ன்மெண்டு பெறுவதைக் கண்டவுடன் குடிப்பவர்களை மேலும் மேலும் குடிக்கத் தூண்டமாட்டான்.

வருமான வரியை எவ்விதம் விதிப்பது என்பது மிகவும் விவாதிக்கப்பட்ட கேள்வியாகும். ரூ 100 வருமானம் வருபவனுக்கு வருடம் 5 ரூ. வரி போடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுவோம். ரூ. 1000 வருபவனுக்கு 50 ரூ. போடுவது போதுமா? ரூ. 10000 வருபவனுக்கு 500 ரூ. போடுவது போதுமா? 100 ரூ. வருமானத்தில் 5 ரூ. வரி கொடுப்பவன் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் கொடுக்கவேண்டும். அவன் இந்த 5 ரூ. வரி கொடுப்பதால் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களோ துணிமணிகளோ இல்லாமல் கஷ்டப்படுகிறான் என்பதில் ஐயமில்லை. வருடத்தில் 1000 ரூ. வருமானமுள்ளவனுக்கு 50 ரூ. ஒரு பெரிதல்ல. அதைவிட 10000 ரூ. வருமானமுள்ளவனுக்கு 500 ரூ. மிகவும் சிறிய தொகை. ஏனெனில் ஒரு ஏழை ஒரு ரூபாயை எவ்விதமாக நினைக்கின்றான்? நான்குபடி அரிசி, அல்லது 3 படி பருப்பு என்று தான் எண்ணுவான். 10000 ரூ. வருமானமுள்ளவனுக்கு ஒரு ரூபாய் விலை உயர்ந்த சிகரெட்டின் விலையோ, அல்லது காலையில் அம்பட்டனுக்குக் கொடுக்கும் கூலியோதானல்லவா? ஆகையால் வருமானவரி போகப் போக உயர்த்தப்படவேண்டுமென்பதற்குச் சிறிதும் சந்தேகமும் கிடையாது. 100 ரூ. வருமானமுள்ளவன், வருடத்தில் 5 ரூ. வரி கொடுத்தால் 1000 ரூ. வருமானமுள்ளவன் 100 ரூபாயும், 10000 ரூ. வருமானமுள்ளவன் 2000 ரூபாய் வரி கொடுப்பதும் தான் நியாயம்.

வருமானவரி விதிக்கப்படுமுன்னர் வரி கொடுப்பவரின் அத்தியாவசியமான சௌகரியங்களுக்காக சிறு தொகையை கழித்துக்கொண்டுதான் பின்பு வரி விதிக்கப்படவேண்டும். ஏனெனில் பல தேசங்களில் தேச நன்மைக்காக எல்லா ஜனங்களும் குறைந்த ஓர் அளவு சௌக்கியத்தைப் பெறவேண்டுமென்றும், இவ்வளவு சௌக்கியத்துக்கு வருமானம் போதாமலிருக்கும் பொழுது அவ்வருமானத்தின்மீது வரி செலுத்துவது நியாயமல்லவென்றும் கருதப்படுகிறது. இத்தத்துவம் கையாண்டுவரும் தேசங்களில் ரூ. 100 வருமானமுள்ளவன் வரியே கொடுக்காமலிருக்கின்றான் என்று வைத்துக்கொள்ள முடியாது. அவன் வாங்கும் சாமான்கள் மீது துறைமுக வரிகளாலும், எக்ஸைஸ் வரிகளாலும் அவன் ராஜீய பொக்கிஷத்தின் வருமானத்தை அதிகப்படுத்துகிறான்.

தவிரவும் பல தேசங்களில் வருமானத்தை இரண்டு பாகங்களாக பிரித்திருக்கின்றனர். முதல் பாகம் தானாகக் கஷ்டப்பட்டு சம்பாதித்திருக்கும் பணம். இரண்டாம் பாகம் வட்டி வாங்கியோ, பெரும் தொழிற்சாலைகளில் ஷேர்கள் எடுத்தோ, பாங்கி ஷேர்களாலோ, கஷ்டப்படாமல் ஏற்படும் பணம். முன் சொன்னபடி சம்பாதிக்கப்படும் பணத்துக்கு ஒரு தாழ்ந்த விகிதமும், பின் சொன்ன வருமானத்துக்கு சற்று உயர்ந்த விகிதம் பல தேசங்களில் கையாளப்படுகிறது. இந்த தத்துவம் நியாயத்திற்கு ஒத்து இருக்கிறது என்பதற்குச் சந்தேகமில்லை.

சில தேசங்களில் வரி கொடுப்பவர் குடும்பச்செலவையும் கவனிக்கின்றனர். பெண் ஜாதிக்கு ஒரு அலெவென்ஸ் மைனர் குழ

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# மகாத்மாவின் முன்னுக்குப்பின் முரணான பதில்கள்.

(சென்னை தோழர் கே. எஸ். நாதன்)

ஒரு ஆதிதிராவிட சகோதரர் தோழர் காந்தியாரை வினவிய சில பகுத்தறிவு வினாக்களுக்கு அவர் அளித்துள்ள பதில்கள் இவ்வாரத்திய 6-4-34 ஹரிஜன் பத்திரிகையில் வெளிப்படுத்தியிருப்பது எவ்வளவு தூரம் முன்னுக்கு பின் முரணாயிருக்கிறதென்பதை, அதை வாசிக்கும் பகுத்தறிவு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுவர். நம் நண்பர் கேட்ட கேள்விகளும், அதன் பதிலும்.

1. ஹரிஜனங்களின் முன்னேற்றத்தில் தங்களுக்கு உண்மையில் சிறத்தையுண்டா? இல்லையேல் இந்துக்களின் ஜனத்தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற ஒரே மனப்பான்மையின் பேரில் தாங்கள் ஹரிஜன இயக்கத்தைக் கொண்டிருக்கின்றீர்களா?

2. தீண்டாதார் உண்மையில் இந்துக்களின் ஒரு பிரிவினரென தாங்கள் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், இந்துக்களால் புனிதமென்னக் கருதப்படும் மனுஸ்மிருதியின் கீழ்க்கண்ட சுலோகங்களின் அர்த்தங்களை விளக்குவீர்களா?

1. ஒரு பஞ்சமன் ஏதாவதொரு வியாபாரத்திலீடுபட்டு பணக்காரனானால் அவனுடைய சொத்துக்களை பறிமுதல் செய்து அவனை தேசத்தினின்றும் வெளியில் விரட்ட வேண்டும். (மனு 10-96)

2. ஒரு சூத்திரருக்குகல்வி கற்பிப்பவர் சூத்திரருடன் நரகத்திற்குப் போவார். எந்த சூத்திரனாவது பிராமணருக்கு மத சம்பந்தமான போதனையை கற்பிப்பாராகில் அந்த சூத்திருடையவாயிலும் காதுகளிலும் கொதிக்குமெண்ணையை ஊற்றுவது தான்சரியான தண்டனையாகும். (மனு 18-89)

3. பெருத்த குரலில் பேசும் சூத்திருக்கு பழுக்கக்காய்ச்ச இரும்பு கம்பிகளால் சூடு போடவேண்டும். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் முதலியவர்களுடன் சூத்திரன் சமமாக உட்காரும் பக்ஷத்தில் அவரை பழுக்க காய்ந்த இரும்பால் எரிய வைக்க வேண்டும் (8-276)

மேற்கூறிய கட்டளைகள் அடங்கிய புத்தகத்தை தெய்வீகமாக கருதும்படி ஹிந்துக்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்த புத்தகம் தெய்வீக தன்மை யற்றதென தாங்கள் கருதும் பட்சத்தில் அதை வெளிப்படுத்தி, பிறகு 'காந்தி ஸ்மிருதி' என தங்களுடைய கட்டளை களடங்கிய ஓர் புத்தகத்தை வெளியிடக் கூடாதா?

ஆரிய சமாஜ கோஷ்டியைச் சார்ந்தார்களும் தீண்டாமையை அகற்றுகின்றனர். அவர்களுடைய கருத்தின்படி தீண்டாமையை ஒழிப்பதென்பது 'சுத்தி' சடங்கு செய்வதாகும். பிறகு தீண்டாதார்களை அவர்கள் இந்து மதத்தில் சேர்க்கின்றனர். தீண்டாதார்கள் உண்மையில் இந்துக்களாக விருக்கும் பட்சத்தில் மேற்கூறிய சடங்கு செய்வதின் அவசியமென்ன? இதை தாங்கள் அங்கீகரிக்கின்றீர்களா? என்பவைகளாகும்.

இவைகளுக்குதோழர்காந்தியாரின் பதிலாவது. ஷை நண்பர் தம்மை ஒரு ஆதிதிராவிடரென கூறுகின்றார். என்னுடைய நோக்கங்களை குறித்து சந்தேகிக்க அவருக்குப் பூரணஉரிமையுண்டு. அவர் கேட்டுள்ள முதல் கேள்விக்கு சிறந்த பதில் என்னவென்றால் முடிவாக ஒரு தீர்மானம் செய்ய நான் இறக்கும் வரை அவர் காத்திருக்க வேண்டுமென்பதேயாகும். இதற்குள் அவர்எமது வார்த்தைகளை அங்கீகரிக்க தயாராயிருக்கும் பட்சத்தில் நான் ஓர் உறுதிமொழி கூறுகின்றேன். அதாவது இந்துக்களின் தொகை அதிகரிக்க வேண்டுமென்பதை நான் பொருட்படுத்த வில்லை. தீண்டாமையாகிய பாபத்தை போக்கி இந்து மதத்தை சுத்தம் செய்ய வேண்டுமென்பதே நான் செய்துவரும் ஹரிஜன இயக்கத்தின் அந்தரங்க நோக்கமாகும். அப்படி செய்வதன் மூலம் தீண்டாமை ஒழிந்து இந்துமதத்தில்ஒரு ஒரே இந்து இருப்பதானால் கூடநான்பச்சாதாபப்படமாட்டேன். அதற்கு மாறாக இந்து மதம் சாகாமலிருப்பதைக் குறித்து நான் சந்தோஷமடைவேன் என்பதாகும். நம் நண்பர் முதல் வினாவுக்குக் காந்தியார்கொடுத்துள்ள விடை எவ்வளவு பகுத்தறிவு தன்மை வாய்ந்ததாக இருக்கிறது என்பதை நாம் சற்று கவனிப்போம். ஒரு நண்பர் ஒருவரிடத்தில் சந்தேகங்கொண்டு (அவர் சந்தேகிக்கத் தகுந்த முறையில் நடப்பதால்) கேள்வியைக் கேட்கும்போது, தமது அந்தரங்கமாக உள்ள அபிப்பிராயத்தை வெட்ட வெளிச்சப்படுத்துவது மனிதத்தர்மமாகும். அதன்றி நான் இறக்கும் வரையில் காத்துக்கொண்டிருக்க என்றால் இதன் உண்மையான நோக்கமென்ன? ஒரு சமயம் நம் நண்பரே இவருக்கு முன் இறக்க நேரிடின் அவர் இவருடைய கருத்தை எவ்வாறு அறிந்து கொள்வது? இந்துக்களின் தொகை பெருகுவதற்காக இவர் ஹரிஜனஇயக்கத்தைத்துவக்கவில்லை என்கிறார். பிறகு தீண்டாமை என்பதை இந்து மதத்தினின்றும் ஏன் போக்கவேண்டும். இது வரையிலும் மக்கள் இந்த 'இந்துமதத்தை' கட்டி அழுதுகொண்டே வாழ வில்லையா? தோழர் காந்தியார் அவர்கள் தீண்டாமை என்கிற பாபத்தைப் போக்கிஇந்துமதத்தைச்சுத்தி செய்ய வேண்டும் என்ற தாராள சிந்தனையின் பேரிலே ஹரிஜன இயக்கத்தைத்துவக்கினர் என்றால் தீண்டாதார் என அழைக்கப்படுபவர்களை தொட்டுவிட்டால் இந்துமதம் புனிதமாய் விடுமா? இன்னும் உயர்ந்த ஜாதியாரென கூறிக்கொள்ளும் முதலியார், நாயுடு, செட்டியார் போன்ற இந்துக்களுக்குள்ளே 'தீண்டாமையும்' 'தொடாமையும்' தாண்டவமாடுகின்றதே! இவர்களின் கதி என்ன! இவர்களைப் புறக்கணித்து இந்து மதத்தைப் புனிதப்படுத்த நினைக்கின்றீரா? இத்தனைஊழல்களுக்குக் கிடையில் தாங்கள் எவ்வாறு இந்து மதத்தைமாத்திரம் புனிதப்படுத்துவீர். ஒரு இந்துவாக இருந்த போதிலும் இந்துமதத்தைப்புனிதப்படுத்த'ஹரிஜன' இயக்கத்தை துவக்கி யிருக்கிறேன் எனக்கூறும் இவர் அவரை அணுகி தலைவரெனக்கொண்டுள்ள மகமதிய, கிறிஸ்துவ சகோதரர்களுக்கு என்ன கூறுகிறீர்? அவர்களுக்குள்ளும் தீண்டாமையும், தொடாமையும் இல்லையா? தாங்கள் இந்துவாகவே இருக்க விரும்புவதால் அந்த மதத்திலுள்ள அனுசாரங்களைப்போக்க தங்களைப்போன்ற ஒரு "மகாத்மா" உடனே பிறப்பாரா? நிற்க நம் நண்பரின் இரண்டாவது வினாவிற்கு பதிலாவது:- இவர் 'ஹரிஜன' பத்திரிகையை விடாது படித்துக்கொண்டு வந்திருப்பாராயின் அவர் அந்த கேள்வியைக்கேட்டிருக்க மாட்டார். அவர் அவற்றினின்றுமே சாஸ்திரங்களைக் குறித்த எமது திட்டமான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டிருப்பார். மனுஸ்மிருதி சாஸ்திரங்களின் ஒருஅம்சமென்பதுஎமது அபிப்பிராயம் மனுஸ்மிருதி என்ற பெயருடன் வெளிவந்திருக்கும் புத்தகத்திலிருக்கும் சகலஸ்லோகங்களையும் நான் ஆதரிக்கின்றேன் என நினைக்கலாகாது. அச்சடித்த மனுஸ்மிருதி புத்தகத்தில் எவ்வளவோ முரண்பாடுகள் இருக்கின்றன. அதிலுள்ள ஒரு பாகத்தை நீங்கள் ஒப்புக்கொண்டால் அதற்கு வேறுபட்ட மற்ற பாகங்களை நீங்கள் நிராகரித்து விடவேண்டியது கடமையாகும். மனுஸ்மிருதி மதசம்பந்தமான நூல் என்பதே எமது கருத்து. அதில்உயர்ந்த உபதேசங்கள் அடங்கியிருக்கின்றன. ஆனால் நண்பர் எடுத்து கூறியுள்ள சுலோகங்கள் மனுஸ் மிருதியின் முக்கிய நோக்கத்திற்கு முரண்பாடானவைகளாகும். மனுஸ்மிருதியின் மூல புத்தகம் ஒருவரிடமாவது இல்லை என்பதை நிருபர் உணர வேண்டும். மனு என்ற பெயருடைய ரிஷி இருந்தார் என்பதற்குக் கூட ஆதாரமில்லை. இந்து மதத்தின் உண்மை உபதேசங்களை போதித்தவர்களெல்லாம் மறைந்து விட்டனர். எனவே சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்பவர்கள் ஓர் விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது சகல மதங்களுக்கும் உண்மையான அஸ்திவாரம் சத்தியமும், அஹிம்சையுமாகும். எனவே அவைகளுக்கு முரணான சகல விஷயங்களையும் நிராகரித்து விடவேண்டும். என்பதாகும் தோழர் காந்தியாரின் இரண்டாவது பதிலை உற்று வாசிக்கும் நண்பர்கள் அனைவரும் அவர் கூறியிருப்பதிலிருந்தே அவருக்கு உண்மையில் மத நம்பிக்கை உண்டா எனச் சந்தேகிப்பர். உண்மையில் நம்பிக்கையிருக்குமாயின் கீழ்காணும் ஐயப்பாடுகளை நாம் விளக்குமாறு கேட்க வேண்டியவர்களாயிருக்கிறோம். எங்கெங்கோ புத்தகங்கள் ஒருங்கு சேர்ந்தது நமது சாஸ்திரம்? அச்சடிக்கப்பட்ட மனுஸ்மிருதியில் முரண்பாடான விஷயங்கள் இருப்பதாலும், உண்மையான மனுஸ்மிருதி எவரிடத்திலும் இல்லாததாலும் மக்கள் எதை நம்பி நடப்பது? அல்லது ஏமாற்றமடைவது? முரண்பாடான கருத்துக்களை நீக்கிமற்றவைகளைக் கொண்டு மக்கள்நடக்க வேண்டுமாயின் இதைவிட மக்களுக்கு பயனளிக்கக் கூடிய மிக அருமையான புத்தகங்களின்படிநாம்ஏன்ஒழுகக்கூடாது? தற்போது அப்படிப்பட்ட புத்தகங்கள் ஏராளமாக பிரசுரிக்கப்பட வில்லையா? பிறகு ஏன் தப்பெண்ணத்தை கொடுக்கக் கூடிய புத்தகங்களைக் கொண்டு மக்கள் ஒழுகல் வேண்டும்? மனுஸ்மிருதி மத சம்பந்தமான நூல் என்பதற்கு அத்தாட்சி என்ன? நம் நண்பர் எடுத்துக்காட்டியுள்ள சுலோகங்கள் 'மனுஸ்மிருதி'யின் முக்கிய நோக்கத்திற்குமுரண்பாடான தென்றால் மனுஸ்மிருதியின் முக்கிய நோக்கமென்ன? மனு என்ற பெயருடைய ஒரு ரிஷி இருந்தாரா? என்பதற்கே ஆதாரமில்லை யென்றால் 'மனுஸ்மிருதி' என்ற நூலுக்கு என்ன ஆதாரமிருக்கின்றது? சகல மதங்களுக்கும் அஸ்திவாரம் சத்தியமும் அஹிம்சையு மென்றால் மனுஸ்மிருதி,பகவத் கீதை போன்ற நூல்களுக்கு மதத்தில் என்ன ஆதாரமிருக்கின்றது. இவைகள நிராகரிக்க வேண்டிய நூற்களல்லவா? இவைகளை தாங்கள் ஏன் இன்னும் நம்புகின்றீர்கள்? இவைகளில் நல்ல விஷயங்களைத்தான் தாங்கள் நம்புகின்றீர்களென்றால் நல்லவற்றை ஒருங்கு சேர்த்து, மற்றவைகளை வேறு

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா

# அரசியல் இயக்கங்களின் வரலாறு.

## இந்தியாவுக்குத் தேவை எது?

(திருச்சி தோழர் ஆர். ரெங்கராஜன்,

மக்கள் ஒன்றிவாழும் கலைக்கு (Art of living) அரசியல் (Politics) எனப் பெயர். இத்திராவிட இந்தியாவின் அரசியலைப் பல வகுப்பினர் பல காலும் கைப்பற்றினார்களெனினும் சிறப்பாக 12-ம் நூற்றாண்டுவரை இந்து என்போரும், 18-வரை முகம்மதியர்களும் பின்னர் ஆங்கிலேயர்களும் அரசு செலுத்தினார்கள். செலுத்துகிறார்கள். மக்கட்குச் சுதந்திர உணர்ச்சி உண்டானதின் பயனாக அரசியலின் குறைகளை நிவர்த்திக்க மற்றைய நாடுகளைப்போன்று இவண் தேசியமகாசபை (National congress) 1885-ம் வருடம் தோன்றிற்று. அக்கால அரசியல் தலைவர்கள் ஆளுவோரிடம் நம்பிக்கை பூண்டு மெமோராண்டம் மூலம் தமது குறைகளைக் கேட்டார்கள். அக்கால யுவர்களின் தேசாபிமானம் கல்வி அரசியலைப் பற்றிமட்டும் இருந்தது. ஆனால் அவ்விதத். தேசாபிமானத்தை தற்பொழுது மனமாற்றத்தையுண்டாக்கும் பொதுவுடைமைச் சமதர்மம் எதிர்க்கிறது. ஏன்? தேசியம் என்பது ஓர் வெறும் மனோவெண்ணந்தான். அது கீழ்தர மக்களின் நிலையை எட்டிப் பார்ப்பதில்லை. அது கற்றோர் சிலரையே நாடுகிறது. ஆனால் சமதர்மப் பொதுவுடைமையோ ஊழிகாலமாக உழைக்கும் மக்கள் வாழ்க்கையின் பொருளாதார உண்மை நிலையை இறுகப்பிடிக்கிறது. (Nationalism i; very idealistic and hence it can rarely touch the lower strata of society. Communism and socialism grapple with the naked realities of life from which the masses of all countries have been suffering for ages.)

ஆகவே பறிக்கப்பட்ட மக்களின் திரண்ட ஆதரவைச் சமதர்மம் பெறுவதுடன் மனிதாபிமானிகளின் மனதையும் கவருகிறது, ஆகவே தற்கால மத கலை, அரசாட்சி முதலியவை பொருளாதார நிலையில் ஒரு சிலரைக் கொழுக்க வைப்பதாகக் கருதும் யுவர்களின் கூட்டம் மல்கினறன. கடந்த காலம் கடந்தாலும் அது வழிகாட்டியாகவிருப்பதால் அக்கால சரிதையைப் புரட்டுவாம். அந் நாளில் Caste guilds, Banker guilds முதலிய சங்கங்களின் மூலமாய் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் நடைபெற்றது. இத் திட்டமானது ஈஸ்ட் இந்தியக் கம்பெனி வரும்வரையில் நிலைபெற்றிருந்தது. ஆனால் இத் திட்டத்தின் கெடுதல்கள் விஞ்ஞான அறிவின்மையும், சங்கங்களின் ஐக்கிய தலைமைச் சங்கமின்மையுமாம். இவ்விதக் கட்டுப்பாடற்றதால் இத் திட்டம் ஜமீன்தாரர்களையும், நடுத்தர மனிதர்களையும், இராஜாக்களையும் (அங்கிபர்வயப்பட்ட) தம் வசப்படுத்த இயலவில்லை.

ஒவ்வொரு காரியத்தையும் செய்யப் புகுங்கால் ஜீவியத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்தல் வேண்டும். சிந்தனையாளர்களால் அத் தத்துவம் மக்களிடையே சொல்லப்பட்டு பின்னர் பிரசாரஞ் செய்யப்பட்டு தகுந்தவாறு மக்களின் மனம் பண்படுத்தப்பட்ட பிறகு கிரியாம்சையில் இறங்குவது என்பதே உலக இயக்க சரிதம் புகட்டுகிறது. இதுவே இத்தாலி, ஜெர்மனி, அயர்லாந்து, ஜப்பான் நாட்டின் தேசிய இயக்கத்தினுடையதும் பிரெஞ்சு புரட்சியின் ருஷிய விவசாய புரட்சியின் சரிதமுமாம். ஆனால் இவ்வித நிலை நமது தேசியத்தில் இன்மையால் நமது எதிர்ப்புக்காளாக நேரிடுகிறது. இத்தகைய தத்துவம் மக்களின் வருங்கால வாழ்க்கைக்கு ஒத்ததாக இருத்தல்வேண்டும். பழங்காலத்தை நினைப்பதில் பயனில்லை. (The older days were days of blind faith, unquestioning faith. This is an age of doubt, uncertainty and questions. As in the days of Socrates, we live in an age of questioning but that questioning is not confined to a city like Athens; it is world wide—Jahawarlal.) என்று கூறியதை நினையுங்கள். நாம் இன்று நினைப்பது நாளைப் பிரபஞ்ச தேவையாகிவிடும். இஞ்ஞான்று எத் தேயமும் தனிவாழ்வு வாழவியலா. (No nation can live an isolated life) ஆகவே நற்காலமாக மானுஷிய நல்லெண்ணம் நம் நாட்டிடைப்பரவுவதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எதற்கெடுப்பினும் மேலை நாட்டை நோக்கும் நிலையை நாம் பெற்றிருப்பதால் ஐரோப்பாவைச் சற்று காணுவோம். அம் மக்களின் கொள்கைகள் தேசாபிமானம், கைத்தொழில்முறை, சமதர்மம், பொதுவுடைமை, பாசிசம் நாசிசம் முதலியவற்றால் காணப்படுகிறது.

மேல்நாடுகள் நாடு பிடிக்கும் ஆசையால் தேசாபிமானமானது இயற்கையாகவே பொருளாதார ஏகாதிபத்திபத்தை (Economic Imperialism) உண்டாக்கியது. இவ்வேகாதிபத்தியத்தால் மேலைநாட்டிற்கு பலனுண்டா. கிடையாது. அறிஞர் பெர்னார்ட்ஷா:- மற்ற மக்களிடமிருந்து பறிக்கப்படும் பத்தில் ஒன்பது பங்கு இங்கிலாந்து ஜனத் தொகையில் பத்தில் ஒருவரால்தான் அனுபவிக்கப்படுகிறதெனக் கூறியுள்ளதால் ஒரு தேசத்தில் பொருள் எவ்வாறு தூர்வினியோகிக்கப்படுகிறதென்பது விளங்கும். இதுவே மற்ற ஐரோப்பிய நாட்டின் நிலையாம். இவ்வாறு ஒரு சிலர் கையில் பொருள் குவிவதால் சமதர்மம் (Syndicalism guild socialism and Anarchist communism) முளைத்திருக்கின்றன. சிலர் தனித்த முதலாளித்துவமின்றி அரசாங்க முதலாளித்துவத்திற்கு (State capitalism) பாடுபடுகிறார்கள். சிலர் முதலாளித்துவப்பை நசித்து கைத்தொழில் ஜனநாயக ஆட்சியில் தொழிலாளிக்கு உன்னத நிலைகொடுக்கப் பாடுபடுகிறார்கள்- Industrial Democracy)

பொதுவாக ஆங்கு உண்மை ஜனநாயக ஆட்சி நடைபெறாததால் அவ்வாட்சிமுறையும் வீண் கலாட்டா, பார்லிமெண்டும்வெகுவாகக் கண்டிக்கப்பட்டும், வீழ்த்தப்பட்டும் வருவதின் காரணமாக சர்வாதிகாரமே தலைதூக்க ஆரம்பித்துவிட்டன். பல அறிஞர்கள் அதை ஆமோதித்து விட்டனர். இதன் அறிகுறியே பாசிசம் நாசிசம் ஆகும். பாசிசம் என்பது ஓர் பகுத்தறிவற்ற இயக்கம் என்றே கூறலாம். இம் மக்கள் மதநோய் பட்டுள்ளார்கள். நானூறு வருடங்கட்குமுன்னுள்ள மாக்வெலியின் மத சித்தாந்தத்தை இதன் வீரர் முசோலினி கைப்பற்றுகிறார். பாரமார்த்திகத்திற்கன்றி அரசியல் விஷயங்களில் மக்களை அடக்கி நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவே மதம் அவசியமென மாக்வெலி கூறினார். இதனால் மக்களின் சுதந்திர உணர்ச்சியை உணரலாம். அந்நாட்டு விவசாயின் நிலை வேறு. நான் எனது குடும்பத்திற்கு உழைக்கிறேன். நமது வாழ்க்கையில் ஒருவனும் தலையிடவில்லை என்று நினைத்து ஒருவேளைக் கஞ்சியைக் குடிக்கிறான். அவன் மனைவி சர்ச்சுக்குப் போகிறாள். முழங்கால்படியிட்டுக் கண்ணீர்வடித் தொழுகிறாள் சிவில் விவாதத்தைவிட தேவாலய மணமே பெரிதென நினைக்கின்றார்கள். பல மத விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

ஆனால் அவ்வியக்கம் முதலாளித்துவம் அற்றதாகச் சொல்லப்படுவதுடன், போல்ஷ்விக்கை துரத்த அது கையாளப்பட்டதாகவும் upper class மேல் வகுப்பாரும் ஒழிந்ததாகவும் சொன்னாலும் அவ்வியக்கம் மதக்கோட்பாடுள்ளதும் சுதந்திர உணர்ச்சியற்றதும் பூரண தொழிலாளி ஆட்சி அற்றதும் சமதர்ம விரோத முற்றதுமாகுமென்பதோடு, அந்நாட்டு விவசாயிகள் அரசாங்கத்தின், மக்களின் பொருப்பை ஏற்க தைரியமற்றிருந்ததால் பாசிசம் உண்டாக நேரிட்டது எனலாம்.

இவ்வியக்கம் தற்காலம் இங்கிலாந்தில் மாஸ்லி தலைமையிலும் அயர்லாந்தில் காஸ்க்ரேவ் தலைமையிலும், ஜப்பானிலும் இந்தியாவில் சில இடங்களிலும் காணப்படுகிறது. ஆனால் இங்கிலாந்தில் Strafford Gripps முதலிய சமதர்மிகள் தொழிலாளர் ஆட்சிக்கு ஆதரவு தேடுவதால் சிறு அங்கத்தினர்களைக் கொண்ட பாசிசம் வெற்றியடையா. இவ்வியக்கம் முதலாளி வர்க்கத்தின் சூழ்ச்சியால் நடைபெறுகிறது. ரோதர்மீரும் அதற்காதரவளித்தார். அயர்லாந்தில் டிவேலரா அதை விரட்டுகிறார்.

நாசிஸத்தைப்பற்றி வாசகர்கள் உணர்ந்தது. அது சமதர்மத்திற்குப் பெரும் விரோதி. மதக்கிறுககுள்ளது. பழமை பெருமை

தொடர்ச்சி 16ம் பககம் பார்கக.

# சத்திய வேத பைபிளும் கத்தோலிக்கர்களும்.

(நாகை தோழர் இருதயராஜ—)

இப்பரந்த உலகின்கண் மானிடராய் ஜெனனமெடுத்த எவரும், விரிந்தஞானமும், கனிந்த அன்பும் அருளும் கூடிய பரந்த நோக்கத்துடன், தாராளசிந்தை, பிரர்சிநேகம், பச்சாத்தாபம், சமத்துவம் சகோதரத்துவம் முதலான பரந்த நோக்கத்துடன், அவரவர்களின் பகுத்தறிவைக்கொண்டு எக்காரியங்களையும் நீதியென்ற சீர்தூக்கும் கருவியை, ஞாயமென்ற கையில் தாங்கி, நன்மை தின்மையெனும் தட்டுகளிடையில் பகுத்தறிவைக்கொண்டு சீர்தூக்கிப்பார்த்து, அதில் நன்மையென வகுக்கப்படுவதை மாத்திரம் ஆராய்ச்சி முறையில் கையாள வேண்டுமே தவிர, புத்திக்கும் அறிவிர்க்கும் எட்டாத எப்பொருளையும் நம்பிக்கையால் விசுவசிப்பதானது ஞாய விரோதமாகுமென்பதில் ஐயமில்லை. பகுத்தறிவை கொண்ட எந்த மனிதனும் ஆராய்ச்சியில் யீடுபடாமல் கண்டதை யெல்லாம் விசுவசிப்பானானல் அப்பேர்ப்பட்ட எவனையும் அறிவிருந்தும் அனுபவிக்காதவனென்றும், உழுதும் பயிரிடாதவனென்றும் ஒரு வகையில் சொல்லலாம். ஆனதால் சத்தியவேதத்தின் மூலாதாரமான சுவிசேஷத்தின் கட்டளைகளுக்கும் கத்தோலிக்கர்களின் நடத்தைகளுக்கும் ஏதாவது பொருத்தமிருக்கிரதாவென்று சற்று ஆழ்ந்து யோசிப்போமானல் முன்னுக்கு பின்முறணாகவும் எட்டிச்சு போட்டியாகவும் தான் காணப்படுகின்றதே யல்லாமல் பைபிளின் கற்பனை பிரகாரம் கத்தோலிக்கர்கள் பின்பற்றுவதாக எள்ளளவேனும் காணமுடியாது. அவ்வாறு பைபிளின்படி நடந்துகாண்பிக்காத ஒரு கூட்டத்தார்களை எவ்வாறு கத்தோலிக்கர்களென்று அழைக்க பொருத்தமேற்படுமென்றுதான் நான் கருதுகிறேன். ஒரு அநாகரீகமுடைய மனிதனுக்கு அழகன் என பெயரிட்டழைப்பதால் அவன் எப்படி அழகுடையவனாகமாட்டானோ, அதுபோல் சத்தியவேத மென்றால் ஒருபோதும் உண்மை மதமாகாதென்பது திண்ணம். ஆனல் சத்தியவேதம் என்ற சொல்லிற்கு பல கபடங்கள் நிறைந்த ஒரு சபையென பொருந்தலாம். இப்பேர்ப்பட்ட பொருத்தமற்ற அறிகுறிகளை வைத்துக்கொண்டு, கத்தோலிக்கர்கள் தாங்கள் தான் எல்லாம் தெரிந்த ஞானிகளென்றும், இதர மதஸ்த்தர்கள் அஞ்ஞானியென்றும் பதித மதஸ்த்தர்களென்றும் வாய்கூசாது அழைத்தும் வருகிருர்கள்.

தோழர் மார்டீன் லூதர் சத்திய வேதமென்னும் கத்தோலிக்கத் திருச்சபையை (Protest) புரோட்டஸ்ட்டு செய்துவிட்டு வேறுசபையை ஏற்படுத்தியிருப்பதை யோசித்துப் பார்த்தால்—பாவமன்னிப்பு சீட்டு விற்று மக்களின் காசை பகற்கொள்ளை யடித்து வந்ததும், வேதத்திற்கு விரோதமான (Idol Worship) விக்ரக ஆராதனையுமே காரணமென்பதை எவரும் மறுக்க முடியாது. இப்பேர்பட்ட போலிச் சபையை நன்கு ஆழ்ந்து புனராலோசனை செய்து பார்த்தார்களே யானல், மிக கீழான வேதான் பல அறிவாளிகள் கருதிவிடுவார்கள். ஆனதால் கத்தோலிக்கர்கள் இந்த திருச்சபையை வெகுவாய் மெச்சிக்கொண்டு, தங்கள் பைபிளின் மகுத்துவத்தையும் வெகு பிரமாதமாய் தர்ப்புகழ் படுத்திக்கொள்கிறார்கள். அறிவாளிகளோ! ஜன சமூக முன்னேற்றத்திற்கும், முக்கியமாய் பெண்களின் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாயிருப்பது கிறிஸ்துவ சபயிளே, என்று உரக்ககத்துவர். நானும் பலவருடங்கள் அறியாமையால் கத்தோலிக்கனுமாயிருந்து வந்திருக்கின்றேன் என்று பயிங்கர முறையில் வெளியிட வேண்டிய நிலமையில்தான் வந்துவிட்டேன். ஆனதால் யான் அறியாமையை கைகொண்டு அனுஷ்டித்து வந்தவரையிலும், என் சிறு புத்திச்கு எட்டிய வரையிலும் திருச்சபையின் ஆசாரப்படி நடந்துவரும் விஷயத்தை சத்தியவேத பைபிளும் கத்தோலிக்கர்களும் என்ற தலைப்பின் கீழ் சிலவற்றை எழுதுகிறேன்.

### கடவுள்.

பிறப்பும்—இறப்புமில்லாத, ஊண் உழைப்புமில்லாத, யாருக்கும் எப்புலனுக்கும் எட்டாத—கிட்டாத—அங்கும், இங்கும் எங்கும் காணப்படாத—அது, இது எது வென்றில்லாத—ஆணும், பெண்ணும் அலியுமில்லாத ஒருவர் இருக்கிருர். அவர் யார் தெரியுமா? அவர்தான் கடவுள்.

தாமாயிருக்கிருர், அநாதியாயிருக்கிருர், சரீரமில்லாமலிருக்கிருர், எங்கும் வியாபித்திருக்கிருர், எல்லாத்திற்கும் ஆதிகாரணருமாயிருக்கிருர் அவன் யார் தெரியுமா? அவர்தான் கடவுள். (மதப் பற்றுதலுள்ளவன்)

சரீரமற்ற, கந்தமற்ற, தோற்றமற்ற, பரிசமற்ற, ரூபமற்ற சப்தமற்ற, ரேகை பிரதிமையற்ற, பொறுப்பற்ற, பொறுத்தமற்ற, ரோசமற்ற நீதியற்ற, சூடு சொரணையற்ற, இரக்கமற்ற, திறமையற்ற, சமதர்ம மற்ற சுயமரியாதையற்ற ஒருவர்யிருக்கிருர் அவர் யார் தெரியுமா? அவர்தான் கடவுள். (மதப்பற்றுதலற்றவன்)

இவ்வாறு கடவுளுடைய லக்ஷணங்களை பல அறிவாளிகளும் (analysis) அலசிப்பார்த்து அறிஞர்கள் முடிவுகட்டிவிட்ட இக்காலத்திலும் கத்தோலிக்க நண்பர்களோ ஜப்பான், ஜெர்மன் பிரான்ஸ் முதலானவைகளைத் தேர்ந்த வேலைக்காரர்களால் செதுக்கி எடுத்து பச்சை, மஞ்சள், சிகப்பு, கருப்பு முதலான பலவித வர்ணங்களால் பூசப்பட்டு அங்கி முதலானதுகள் தறித்து பளிங்குக் கற்களால் கண்கள் அமைக்கப்பட்ட பல பொம்மைகளைப் போல் ஆடாமல் அசையாமல், பேசாமல் புளங்காமல், மூச்சுவிடாமல், எடுக்காமல், பார்த்தகண் மூடாமல், உண்ணமல், உறங்காமல் மாடத்திலும் பீடத்திலும் நின்று கொண்டிருப்பவர் யார் தெரியுமா? அவர்தான் கடவுள் என்று மனப்பால் குடித்து வருகின்றதோடு அந்த விக்ரகங்களின் மேல் மதிப்பு கொண்டு தேவனுக்கு பணிவிடைசெய்வதாக எண்ணி தூப தீப ஆராதனை செய்து வருவதைப்பார்த்தால் எனக்கு வியப்பைத் தருவதோடு அன்னவர்களை என்னென்றழைப்பது என்ற முடிவிற்கு வந்துவிட்டேன்.

புது ஏற்பாடு 339-பக்கம் அப். நட. 17-அ. 29-வசனத்தில் என்ன சொல்லுகிறதென்றால் "நாம் சர்வேஸ்சரனுடைய வம்சமாயிருக்கக் கொள்ள மனுஷனுடைய வேலையினுலும் உறுவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் இவைகளைப்போல் தெய்வ தத்துவம் இருக்கும் என்று நினைக்கலாகாது." என்று வறையப்பட்டிருப்பதை கத்தோலிக்கர்கள் இன்னும் வாசித்ததில்லையோ? அதுவுமல்லாமல் 436 பக்கம் 1. கொரி 10. அதி 14&15 வசனத்தில் "ஆகலால் எனக்கு மிகவும் பிரியமானவர்களே, விக்ரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள். உங்களை விவேகிகளென்று எண்ணிப் பேசுகிறேன் நான் சொல்லுகிறதை நீங்கள் நிதானித்து பாருங்கள்" என்றும் வற்புறுத்துவது தங்களின் கபட போதனைகள் கேட்ட காதல் கேட்கவும், கண்ணல் பார்க்கவுமில்லையோ? இவ்வாறு பைபிள் வற்புறுத்திக் கண்டித்தும் எனது தோழர்கள் இன்னும் அறியாமையை கைகொண்டு மூட நம்பிக்கையில் (Ignorant Belief) இருந்து வருவதானது வியப்பைத்தருகிறது. அறிஞர்களாலும் மத ஆராய்ச்சிகாரர்களாலும் கடவுள் என்பது அர்த்தமற்ற வார்த்தை என்று கண்டுபிடித்திருக்க, இன்னும் விக்ரக ஆராதனை செய்து வருவதானது அறியாமை யாகும். இந்த விக்ரக ஆராதனையைப் பற்றி பைபிளை கையில் வைத்துக்கொண்டு எந்த பாதிரி மார்களையும் போய் பதில் கேட்பீர்களானல் பாவம் பேந்தபேந்தவென்று முழிப்பார்கள். அவர்கள் என்ன செய்வார்கள் வயிற்றுப்பிழைப்பு அப்படி யிருக்கிறது. ஐயோ! பாவம்.

### ஆலயம்.

ஆலய மென்பது தேவனுடைய பரம வீடு என்று நம்பியும் விசுவசித்தும் வருகிருர்கள். ஆனல் ஆலய மென்பது கூட கோபுர வாசல்களமைந்த ஒரு தனியிடமும், பீங்கான் சிலைகளும், கருங்காலி மரத்தின் கிராதிகளும், ஜப்பான் சைனு குளோப்பர்கள் நிறைய தொங்க விட்டு, பெரிய மணி சின்னமணி கட்டி வெள்ளி, செம்புகளால் செதுக்கி எடுக்கப்பட்ட கத்திரிச்சால் களால் பீடத்தை அலங்காரித்து, சலவைக்கற்களால் தரைகளை செப்பனிட்டு, மார்ப்பிள் ஸ்டோன்களால் பீடங்களமைத்து மெல்லிய பட்டுத்துயில்களால் அலங்கரித்து பலவித வர்ணங்களால் சித்திர வேலைகளமைத்து பார்ப்போர்கள் கண்ணை பரவச மாக்கும்படியான ஒரு கட்டிடத்தில், நவ நாகரீக பாதிரியார்களும், சீஷனும், வனுந்தரத்தில் பூத்த மலர்களை யொதத கன்னியாஸ்திரிகளும், பல மங்கையர்களும், குடும்பத்திலீடுபட்ட பல தாய்மார்களும், தகப்பன் சாமிகளும் சங்கீதம் பாடும் பெண் மணிகளும், பியானோ வாத்தியங்களும், சோபா, நாற்காலிகளுடன் பல துரைமார்களும், பகுத்தறிவை வெகு தூரத்திற்கு பயணம் அனுப்பிவிட்டு வெரும் புஸ்தக பிரேதங்களாய் அமர்ந்திருக்கும் படிப்பாளிகளும் நிறைந்து ஏகமனதாய் பரமனை துதிக்கும் பிடமாயிருப்பதற்குத்தான் தேவ ஆலயம என்று கத்தோலிகர் நம்பியிருக்கிறீர்கள். அப்பேர்ப்பட்ட ஒரு இடத்தை பல அறிவாளிகள் ஜவுளிக்கடைக்குச் சமமாய் கருதி விடுகிருர்கள். ஆனல் கத்தோலிக்க பைபிளோ! அந்த கோவில் என்று நீங்கள் நம்பி வரும் தேவ ஆலயங்களில் தேவன் வசிப்பதில்லை என்று போதிப்பதும் இந்த கத்தோலிக்க குஞ்சுகளுக்கு விளங்கவில்லை போலும்! கேவலம் பாமரர்களும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய இவ்விஷயங்களை அவர்கள்கள் அறியாமைக்குயான்வருந்தாது என் செய்வது (புது. ஏற் 339-பக்கம் அப் நட. 17- அ-24 வசனம் "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்த கடவுளானவர் பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் ஆண்டவராயிருக்கிறபடியினலே கையினல் கட்டப்பட்ட ஆலயங்களிலே வசிப்பதில்லை" என்று தெளத்தெளிய வரையப்பட்டிருப்பதை பார்க்காமல் கும்மாளம் அடிப்பது நீதியோ? ஆனதால் அவரவர்கள்மனதே ஒவ்வொரு ஆலயமாக பாவித்து அம்மனதிலிருக்கும் பல கபடங்களையும், பல துரோகங்களையும் விட்டு விரட்டி அந்த மனமான ஆலயத்தை

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க,

ரோஜா முத்தையா

# காந்தியின் :: :: கடைசி காலம்.

(நமது அரசியல் நிபுணர்)

பிரசித்திபெற்ற ஏப்ரல் மாதத்தில்தான் தோழர் காந்தி அன்று தோன்றினார். இன்று பதினைந்து வருடங்களுக்கு முன்பு அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்களுள் கடையராக இருந்த காந்தி, அகில இந்தியத் தலைவராகத்தோன்ற ஆரம்பித்தது ஏப்ரல் மாதச் சத்தியாக்கிரக வாரம் என்பதில்தான். அதே ஏப்ரல் மாதத்தில் மீண்டும் காந்தி இந் நாட்டின் விடுதலைக்குக் காது ஒடிந்த ஊசிக்கும் பயனில்லை. என்று சொல்லத்தக்க நிலைக்கு வந்துவிட்டார். ஆனால் வழக்கம்போல் காந்தியின் கடவுள் அவருக்குத் தோன்றித் தனி மனிதரின் சட்டமறுப்பை நிறுத்து என்று சொன்னதாக சொல்லுகிறார் அத்துடன் மட்டுமல்ல, இதுவரையில் இந்திய நாட்டில் அவரின் "சத்தியாக்கிரகத்தின்" முறையை, தத்துவத்தை, உணர்ந்தவர், அனுஷ்டிக்கக்கூடியவர் ஒருவர் கூட இல்லையென்றும் ஒப்புக்கொண்டுவிட்டார். பதினைந்து வருடங்களுள் மூன்றுமுறை ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, ஓய்ந்த காந்தியடிகளையும், மகாஅவரது சத்தியத்தையும்,அவரது சொந்தக் கடவுளையும்போற்றுவிட்டாலும் தூற்றுமலாவது இருப்போமாக!காந்தியடிகளின்கடைசி தோல்விக்குப்பின்பு அவர்நீண்டகாலமாக விரும்பும் ஹிமய உச்சிக்குச் செல்ல நாம் ஆசைப்படுகிறோம். அவரது நாட்டையும் அங்கு செல்வதாக.

இன்று பதினைந்து வருடங்களுக்கு முன்பு காந்திக்குக் கடவுள் தோன்றி கூறியது எதற்கெனில்.- ரௌலட் சட்டம் ஒழியவேண்டும். கிலாபத் அநீதிக்குப் பரிகாரம் தேடவேண்டுமென்பதாகும். எந்தக் கடவுள் காந்திக்கு இச் செய்தியைக் கூறியதோ அப்பொழுதே காந்தி அக் கடவுளை நோக்கி 33 கோடி மக்களும் இவ்விரண்டு தீங்குகளும் மறையப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றார். இப் பிரார்த்தனைக்கு ஜ. லியன் வாலா பாக்கில் கடவுள் தக்க கூலியைப் பக்தர்களுக்குக் கொடுத்தார்.

நாம் புத்திசாலிகளாக இருந்திருந்தால் அன்றே காந்தியை இவ்வுலகில் கடவுள் பிரார்த்தனையால் மாறுதல் அடைந்த நாடுகளோ, பிரார்த்தனையால் பாதுகாக்கப்பட்ட தேசங்களோ, பிரார்த்தனையால் சுகமடைந்த சமூகமோ உண்டா என்று கேட்டிருக்கவேண்டும். ஆனால் பிரார்த்தனையினால் கஷ்டமடைந்த தேசத்தையும், பிரார்த்தனையென்ற மூட நம்பிக்கையில் சிக்கி முழு முட்டாள்களான நாடுகளையும் நாம் பார்த்திருக்கிறோம் அதற்கு அத்தாட்சி வேண்டுமானால் நாமும் நமது நாடும் முதன்மையானதாகவே எடுத்துக்கொள்ளலாம்.

ஐரோப்பிய நோயாளி என்ற துருக்கி, பிரார்த்தனையையும், பிரார்த்தனையின் தலைவனை கலிபாவையும் அடியோடு விரட்டியடித்தபின்பு தான் உலகிலேயே முதன்மையான நாடுகளுடன் ஒன்றாக இன்று விளங்க ஆரம்பித்தது. புராதன நாகரீகம் பெற்ற ரோம்தலைநகருடைய இத்தா உலகக் கிறிஸ்தவர்களின் குருவான போப் அரசரை அடக்கி உட்காரவைத்தபின்புதான் ஐரோப்பிய வல்லரசுகளில் பலம் பொருந்தியவைகளுள் ஒன்றாக மாற ஆரம்பித்தது.

வைசூரி, காலரா, மலேரியா இத்தகைய பிணிகளுக்குத் தனித் தனியாக வணங்கும் தெய்வக் கோவில்களை இடித்தெறிந்து அந்தந்த இடங்களில் அந்தந்தத் தெய்வங்கள் பாதுகாத்துவந்ததாகக் கருதப்பட்ட பிணிகளுக்குத் தக்க மருந்துகளைக் கொண்ட வைத்தியசாலையை ஏற்படுத்திய பின்புதான் அமெரிக்காவும், கண்டு அஞ்சும் நிலைமைக்கு ஜப்பான் வர ஏதுவாயிற்று. இதைப் போன்ற நாடுகள் பல உண்டு. ஆனால் எந்த நாடும் தெய்வ வழிபாட்டினால் ஓர் சிறிது பலனையாவது அடைந்ததை நாம் அனுபவத்தில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு காந்தியாரோ, கிலாபத் அநீதிக்கும், ரௌலட் சட்டத்துக்கும் பிரார்த்தனை செய்யச் சொன்னார். ஸ்மர்ன நிதிக்கு உதவச் சொன்னார். அங்கோரா கஷ்டத்துக்குப் பரிகாரம் தேடச்சொன்னார்.நாம் தோழர்காந்திசொன்னதுக்கெல்லாம் பிரார்த்தனைகளைச் செய்தோம் நம்மில் ஒருவருக்காவது முதலில் நாம் பிரார்த்தித்துக்கொண்ட "கலிபா" பின்பு நம்மால் கொண்டாடப்பட்டதும், பிரார்த்தனை செய்யப்பட்டதுமான அங்கோராவினால் தூக்கி எறியப்பட்டதைக் கண்டிக்க மனம் வரவில்லை 40 கோடி முஸ்லீம்களின் "மதகுரு" என்று பெயர்படைத்த கலிபாவை வெள்ளைக்காரர்கள் அலக்ஷியப்படுத்தினார்கள் என்று வெள்ளைக்காரரைக் கண்டித்தோம். ஆனால் பின்னால் நம்மால் கொண்டாடப்பட்ட அங்கோராவால் "கலிபா" தூக்கி எரியப்பட்ட காலத்தில் "கலிபா" கடலில் விழாமல் இங்கிலாந்தில் காப்பாற்றப்பட்டதிற்காக இங்கிலாந்தை போற்றவுமில்லை. இதைசெய்ய அங்கோராவின் அதிபரும், நமது முஸ்தபா கமால் பாஷாவை கண்டிக்கவும் இல்லை. இவை எல்லாம் எதை காட்டுகிறது நமது இந்திய மக்களின் முட்டாள்தனத்தையும், மூடநம்பிக்கையுமே காட்டுகிறது.

காந்தி தனது மகத்தான தவறை உணர்ந்து அதற்கு தக்கபடி அறிக்கை வெளியிட வில்லை. தனது தோல்வியையும், ஏமாற்றத்தையும், கண்ணியமாக எடுத்துச்சொல்லி, தன்னை நம்பிய நாட்டையும், நாட்டு மக்களையும் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்கிய பெரும் குற்றத்தை அவர் ஒப்புக்கொள்ள வில்லை. ஆனால் எதிர்காலத்திலும் இந்நாட்டு மக்களை நிரந்தரமாக மூடராக்கும் எண்ணத்திலேயே ஏதேதோ, வியாக்யானங்கள் கூறி, சட்டமறுப்பை நிறுத்திவிட்டதாக கூறுகிறார். நிறுத்தி விட்டேன் என்றால், இதுவரையில் நடந்து வந்ததுதான் என்ன என்பதை பகுத்தறிவுள்ள மக்கள் யோசிக்காமல்போகார்.

ஐரோப்பிய யுத்தத்துக்குபின் உலகில் சகல தேசங்களும் மகத்தான மாறுதல்களை அடைந்து விட்டது. புதுமாறுதலை அடைந்த தேசங்கள் அதன்பின் தோன்றிய கஷ்ட நஷ்டங்களையும் நிவர்த்திசெய்து நல்ல நிலைமையை அடைந்து வருகிறது. ஆனால் தெய்வீகத்தை நம்பிய நமது நாட்டிலோ ஐரோப்பிய யுத்தத்துக்கு முன்பு ஏற்பட்ட துயரக்குரல் ஓயாது இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

காந்தி சட்டமறுப்பை நிறுத்தி விட்டார். இதற்கு முன்பே டெல்லியில் நமது திருவல்லிக்கேணி சாஸ்திரியும், அவர் அண்ணன் டாக்டர் அன்சாரியும், கனிமண் மாளவியாவும் சட்டமறுப்பை நிறுத்தி சட்டசபைபோக முடிவுசெய்து விட்டார்கள். புதிதாக உயிர் கொடுக்கப்பட்ட சுயராஜ்ய கக்ஷிக்கு காந்தியும் ஆசிர்வாதம் செய்து விடடார்.

இனி நாம், சுயராஜ்யக் கக்ஷியின் பேரால் இந்நாட்டில் தோன்றவிருக்கும் ஏமாற்றங்களை களைந்தெரிய வேண்டிய வேலையை மேல்போட்டுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.இன்று கடவுள் சொன்னதின் பேரால் சட்டமறுப்பை விட்டு விட்டேன் என்பதற்குப் பதிலாக,கவர்ன்மெண்டார் தலை எடுக்க விடாமல் செய்துவிட்டதால் சட்டமறுப்பை விட்டு விட்டேன் என்று காந்தி சொல்லி இருந்தால் அது நாணயமாக இருந்திருக்கும்.

காந்தி தனது சிஷ்யர்களில் யாரோ ஒருவர், எவரோ ஒருவர், செய்ததாகச் சொன்ன செய்கையை ஆதாரமாகக் கொண்டு, சட்டமறுப்புகளை எல்லாம் விட்டு விட்டேன், எனது குருட்டுத்தனத்தை உணர்ந்தேன் என்பதற்குப் பதிலாக, எனது சிஷ்யர்களில் முட்டாள்கள் போக எஞ்சியவர்கள் சட்டசபைக்கு போக முடிவுசெய்து விட்டதால் தான் சட்ட மறுப்புகளை நிறுத்தி விட்டேன் என்று சொல்லியிருக்கலாம். யாரோ பெயர் சொல்ல முடியாத ஒருவர் எவரோ, பெயர் சொல்லக்கூடாத ஒருவரின் செய்கைக்காகத்தான், தனது போர்வாளை உரையில் போட்டேன் என்பது நியாய மனமுடையவனுக்குச்சரியாகத்தான் தோன்றமுடியுமா?வீச்சுகின்றதற்குக் காரணம்வீச்சுக்குஇடமில்லைஎன்றும், வாள் உரையில் போனதற்குக் காரணம் வீசச்சொன்ன (முதலாளி) காங்கிரஸ் பணக்காரர்களே! என்பதும் இன்று பொதுமக்கள் நன்குணர ஆரம்பித்துவிட்டார்கள். ஆதலால் காந்தியோ, அவர் சிஷ்யர்களோ, இன்னும் நாட்டை ஏமாற்ற எண்ணுவது, இவர்களுக்குத் தீங்காகும் என்று அஞ்சுகிறோம்.

சட்டமறுப்புகளில் தீவிரமாக பலமுறை சிறைசென்றவர்களுள், சட்டமறுப்பை முதல்படியாக வைத்து இந்நாட்டில் மிக பிரம்மாண்டமானதும், பயங்கரமானதுமான பொருளாதார புரட்சியை உண்டாக்க ஓர் கூட்டம் வேலைசெய்கிறது என்பதை சர்க்கார் முன்பே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் பயங்கரமான கொள்ளையையும், கொலைகளையும், தொடர்ந்து செய்வதையும் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். இதை உணர்ந்த காங்கிரஸ் பிரபுக்களோ, முதலில் அலக்ஷியமாக இல்லாவிட்டாலும், எப்படியாவது வெள்ளைக்காரன் பயந்து, இந்தியநாட்டு மில்கார முதலாளிகளுக்கும், காங்கிரஸ் பிரபுக்களுக்கும் சலுகைகாட்டட்டும் ; கிடைத்தவரையில் லாபம் வரட்டும் என்று முதலில் எண்ணினார்கள். ஆனால் இவர்கள் பணத்தைக்கொண்டு இந்நாட்டில் தோன்றிய சட்டமறுப்பு இயக்கம், இச்செல்வாக்கைக் கொண்டே ,எதிர்காலத்தில் பயங்கரப் புரட்சியை உண்டாக்கி தங்களுக்கே தீங்கிழைக்கப் போவதாகச் சந்தேகித்ததும் பிரபுக்கள் தங்கள் பாதுகாப்பாளரான காந்தியடிகளிடம் கூறினார்கள். உடனே காந்தி சட்டமறுப்பை நிறுத்தி அவ்வாளை உறையில் போட்டுவிட்டார். இப்பதினைந்து வருடங்களில் மூன்று நான்குமுறை, பதினாயிரக்கணக்கான ஆண், பெண்கள் செய்த தியாகம் (முட்டாள் தனமானது) பயனற்றது. இத்தனை லக்ஷம் சட்ட மறுப்புக்காரர்களில் ஒருவர்கூட அதன் தத்துவத்தை உணரவில்லைஎன்றும்கர்வமாகக்கூறுகிறார். முதலில் தானே சட்டமறுப்பை கண்டுபிடித்ததால் தானே அதற்கு சர்வாதிகாரி என்னைவிட நன்கு தெ

தொடர்ச்சி 14ம் பக்கம்

ரோஜா. முத்தையா

# சமதர்மத்திற்கு

## பெண்கள் விடுதலை அவசியம்.

(கொழும்பு தோழர் எம். கே. எம். காதர்)

இன்று நம் நாட்டிலுள்ள பெண் மக்கள் எந்த நிலையிலிருக்கின்றார்கள். அது பண்டைய நிலைமையிலேயே கிஞ்சித்தும் மாறுதலில்லாது இருக்கின்றனவென்பதில் யாது சந்தேகமுளது! இதற்குக் காரணம் என்ன? பெண் மக்கள் கொண்ட மதப்பித்தமும், கடவுள் வெறியுமே. இவ்விதப் பாமர நிலைமையைக் கண்டமையாலேயே மதப் பித்துக்கொண்ட சுய நல பித்தர்கள் பெண்களை எவ்வித முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளாத வாறு தடை செய்து வருகின்றார்கள். நமது நாட்டுப் பெண்கள் ரஷிய தேசத்துப் பெண்மணிகள் போன்று உணர்ச்சி மிக்க புரட்சி செய்வார்களே யாகில் நிச்சயம் சுதந்திர மணிகளாகவே திகழ்வார்கள். ரஷியப் புரட்சிக்கு முன் அங்குள்ள பெண்மணிகளும் நமது பெண்களிலும் மிகக் கேவல நிலையையே எய்தியிருந்தனர். ஆனால் இன்று அவர்களின் நிலை என்ன?

டெஸ்மோய்னஸ் ரெஜிஸ்டர் (Des Moines Register) என்னும் சஞ்சிகையில் தோழர் புரொப்ஸர் எ. ஜெ. பியர்சன் Prof. A. I. Pearson என்னும் அறிஞர் எழுதிய "Role of Fairsexin Soviet Russia" என்னும் தலைப்பின் கீழ் விளக்கியவையில் சிலவற்றை தருகின்றேன்:-

"ரஷியாவின் பொதுஉடமைப்புரட்சியானது, அந் நாட்டு பெண்மணிகளின் வாழ்க்கையிலும், சுதந்திரத்திலும் ஆச்சரியப்படக்கூடிய தோர் மாற்றத்தைச் சிருஷ்டித்துள்ளன. முன்னர் சுதந்திரம் என்பதே இன்னதென்றறியாமலிருந்த அவ் வணங்கியர்கள் புரட்சி முற்றுப்பெற்ற அக்கணமே தாங்கள் புதியதோர் சுதந்திர உலகின் கண் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாய் எண்ணலுற்றனர். புரட்சி கர்த்தா லெனினோ, அன்றி அவரின் குழுவினர்களோ பெண்களின் துரித முற்போக்கைக் கண்டு (நம் நாட்டு சுயநலப்பித்தர்கள் நடுங்குவதுபோன்று) பீதி கொள்ளாது, அன்னவர்களுக்கு, ராஜிய, தேசிய" சமுதாய, பொருளாதாரமாகிய சகல துறைகளிலும் எல்லா வித சுதந்திரங்களையும் மனமொப்பி நல்கிவிடவே முயன்றனர்-அவ்விதமே செய்துமுள்ளனர்.

### நிர்வாகப் பொறுப்பு.

தற்பொழுது, ரஷியாவின் நிர்வாகக் கழகத்தில் 150000 சுதந்திர பெண்ணணங்குகள் அங்கம் வகிக்கின்றனர்கள். 30லக்ஷம் அங்கத்தினர்களாகக் கொண்ட 'பொதுவுடமை, கோஷ்டியில் 15 லக்ஷம் பெண் மணிகள் இடம் பெற்றுள்ளனர்கள். 1923 வருஷம் 404200 ஸ்திரிரெத்தினங்களே தொழிற்சாலைகளிலும் வியாபார ஸ்தலங்களிலும் காணப்பட்டனர். ஆனால் 1932ல், அத்தொகை 17,20,700க்கு மேல் அதிகரித்துள்ளன. இதினின்றும் ரஷியப் பெண் சமூகம் சகல பொறுப்புகளிலும் எவ்வளவு தூரம் விருத்தி பெற்று வருகின்றது என்பது புலனாகின்றதன்றோ! (இதற்கெல்லாம் அன்னவர்களின் புரட்சியும் சம உரிமை எழுச்சியுமே காரணம், என்பதில் யாது சந்தேகம்? எமது நாட்டுயுவதிகாள்! என்று நீங்கள் இந் நிலையை எய்தப்போகின்றீர்கள்?) ரஷியப் பெண்கள் ஒன்று இரண்டு தொழில்களில் மாத்திரம் பிரீதி கொள்கின்றார்களென்று எண்ணற்க அன்னவர்கள் ஆண்கள் கூட செய்வதற்கஞ்சும் அவ்வளவு கடூர கடுமையான வேலைகளை எல்லாம் மிகத் துணிவு கொண்டு ஆட்டிவைப்பதற்கு தீரத்துடன் முன் வந்த வண்ணமே இருக்கின்றார்கள். ரசாயனம், இயந்திர அமைப்பு தொழிற்சாலை உழைப்பு, சுரங்கத் தொழில், விமான மோட்டும் சாரதித் தொழில், யுத்தப் பயிர்சி, பீரங்கிகளை இயக்கும் வேலை, மற்று மனேக தொழில்களிலும் சிறப்புற்று விளங்குகின்றனர்.

### தொழிற் பாடசாலை.

சண்டைக்குப் பின்னர், கைத்தொழில் பள்ளிக்கூடங்களெல்லாம் ஆண்களின் கையிலே இருந்தன. பின் பெண் சமூகத்திற்கு எவ்வித த்தடங்கலுமன்னியில் பூர்ணஉரிமை அழிக்கப்பட்டன. இதைக் கண்டதும் காரிகைகள், அளவிலா ஆனந்தமடைந்து, இதை பிற்கால வாழ்விற்கோர் அரும் சந்தர்ப்பமாக ஆக்கிக்கொண்டனர். 1925ல் அப் பள்ளிக்கூடங்களில் 800 பெண்களே தொழிற் பழகலாயினர். 1932ல் 272800 வரை அதிகரிக்கலாயினர். 1932-ம் வருஷத்திய கவர்ன்மெண்ட் அறிக்கையின் பிரகாரம் 80,00,000 படிப்பில்லா பெண்கள் எழுதவும், வாசிக்கவும் நன்குகற்றுக் கொண்டனர், 1000,000 பெண்கள் பொது க்ஷேமவேலையில் உழைத்து வருகின்றார்கள்"

முன்கூறிய தோழர் பியர்சனின் கட்டுரைப் பிரகாரம் ரஷியப் பெண்கள் எழுச்சி யெவ்வளவு துரிதவித்தியடைந்து வருகின்றதென்பது மிக தெள்ளிதில் புலனாகின்றன். இவ்விதத் திடுக்கிடும் முன்னேற்றம் அன்னவர்கள் அடைந்தமைக்குக் காரணமில்லாமலுமில்லை. அது என்னவெனில், அன்னவர்கள் மிகப் பொறுப்பான நிறுவாகங்களில் சம அந்தஸ்து பெற்றமையாலும், அன்னவர்களின் சம உணர்ச்சி எழுச்சியாலும், பல பெண்சுதந்திர "தினசரி"களினாலும், "மாசிகை"களினாலும், தங்களின் எழுச்சியை பஹிரங்கப்படுத்தி தம் சகோதரிகளை தட்டிஎழுப்பி வந்தமையாலேயே--ஆனால் இன்று நம்நாட்டு பெண்களைத்தட்டி எழுப்புவதற்கும், சுயஉணர்ச்சியை கிளப்புவதற்கும், தங்களின் சுயமரியாதையை உணர்த்துவதற்கும் எத்தனை தினசரிகள், எத்தனை மாசிகைகள் அல்லது எத்தனைபேர்கள் பொறுப்பான நிறுவாகங்களில் அங்கம் வகித்து வருகின்றவர்கள் என்று ஆராய போவார்களேயாயின் தலை குனிய வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். தப்பித்தவிரி இரண்டொரு பத்திரிகைகள் அங்குமிங்குமாய் உலாவுவதாயிருப்பினும் அது மூற்றும்புராணக்குப்பைகளும், அடிமைத் தனத்தைப் பலப்படுத்தும் நோக்கங் கொண்டதாயும் இருக்குமேயன்றி வேறில்லை. இவ்விதமான கேடுகளை எல்லாம் துணிவு கொண்டு தகர்த்தெறிய, என்றுதான் நம் தாய்நாட்டு பெண்குழாம் என்றியம்பும் நீங்கள் வீரகேசரிபோன்று கர்ஜனைசெய்து எழுவீர்களோ அன்றுளே நாட்டின் நன்னாளாகக் கொள்வோம்!

### கோஷாவை அனுஷ்டிப்போர் கவனிக்க.

பண்டையப் பழக்க வழக்கங்களிலெல்லாம் மிக சாபக்கேடானது கோஷா வழக்கமென்பது இதன் கொடுமைகளையும் இதனால் விளையும் கேட்டையும் புத்துணர்ச்சிபெற்ற ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாடும் நன்குணர்ந்து அதை அடியோடு நாட்டைவிட்டுத்துரத்தமிகத் தீவிரமாய்க் கிளப்பியுள்ளார்கள்என்பதுஉலகறிந்த விஷயம். இக்கொடுமையை நாட்டைவிட்டு கட்டுடன் களையும் நோக்குடன், துருக்கி ரக்ஷகனும் முஸ்தபா கமால் தீவிர நோக்கங் கொண்ட சட்டத்தைத் தன் ராஜ்யத்தில் சிருஷ்டித்துள்ளார். அது எவ்விதமெனில் "முதல் தண்டனையாக கோஷா அனுஷ்டிப்பார்கள். சிறை செல்வார், மீண்டும் கொள்வார்களேயாயின் தண்டனையுடன் அபராதம். பின்னரும் மேற்கொள்வார்களேயாயின், அன்னவர்களுடன் கோஷாவும் எமனுலகிற் செல்லும் யாத்திரை சித்திபெறச் செய்யும் தூக்குத்தண்டனையே" என்னும் கடுஞ்சட்டமியற்றியுள்ளார். இதுவுமல்லாது ஹைதராபாத் சமஸ்தான உத்யோக அறிக்கையில் வெளிப்பட்டோர் செய்தி என்னவென்றியம்புகின்றனவெனில் "நீண்டநாட்களாய் பணக்கார சமூகம் அனுஷ்டித்துவந்த பாழும்கோஷாவழக்கம்--பழக்கத்தின் காரணமாய் ஏழைகளையும்தொத்தலாயின இத்துர் அதிஷ்டபழக்கத்தால் அன்னவர்களின் வாழ்க்கை மிகசீவ்ஷ்டூரம் நிறைந்தனவாய் வந்து முடிந்தன. இக்கொடிய பழக்கத்தை நம் இளவரசிகள் மிக போற்றக்கூடிய முறையில் தொலைக்க முன்வந்தது, பெண் சமூகத்தினருக்கே மிக நன்மையை பயக்கக்கூடியனவாய் இருக்குகின்றன. இதனைப் பின்பற்றி ஏனையபணக்காரக் கூட்டத்தினர்களும் முன்வந்தால் ஏழைகளுக்கு மிக நன்மை செய்தவர்களாவார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை" என்று இயம்பி இருக்கின்றது.

இது நிற்க, சென்ற ஜனவரி-மீ லாகூரிலுள்ள ஓர் கல்லூரியில் வாசித்துவரும் 15 வயதினையுடைய ஓர் பார்விபெண் ஏதோ காரணத்தையொட்டி காணாதுபோனதை சென்னையிலிருந்து 27-1-34ல் வெளிவந்த ஓர் பத்திரிகை மிக பிரமாதப்படுத்தி ஓர் குறிப்பு எழுதிருக்குகின்றன. அதாவது "இவைகளெல்லாம் யௌவனப்பெண்கள் கோஷாமுறையை அனுஷ்டிக்காது வாலிபர்களுடன் தன்னந்தனியே பாடசாலைக்கு அனுப்புவதால் இத்தகைய சம்பவங்கள் மலிந்துகாணப்படுவதைக்கண்ட பின்னேனும் பெற்றோர்கள் கோஷாமுறையைப் பின்பற்றுவார்களா" என்று இயம்புகின்றது. இன்னாரின் அறியாமைக்குசிரிப்பதா அல்லது அன்னவரின் பரிதாபகரமான நிலைமைக்கு இரக்கங்கொள்வதா? என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்!

ஆனால் இன்னவர் கடந்த ஜனவரி 15உ களில் நம் தாய்நாட்டில் ஏற்பட்ட பிரமாண்டப் பூகம்பத்தின் போது பீகார் மாகாணத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கவனித்திருந்தால். அவர் ஒருக்காலும் இவ்வித அபிப்பிராயத்திற்கு வந்திருக்கமாட்டார் என்பது துணிபு. அப் பூகம்ப நிகழ்ச்சியை நேரில் கண்டவர்களின் சில முக்கிய குறிப்பைக் கீழே தருகின்றேன்.

### பூகம்பத்திற்குப் பலியான கோஷாப் பெண்கள்.

இதன் கீழ்தருவது பத்திரிகை நிருபர்களுடையனவும், நேரில் கண்டவர்களுடையனவுமாகும். "பீகாரில் தற்சமயம் நிகழ்வுற்ற பூகம்பத்தால் பர்தாவை அனுஷ்டிப்பதாலும், பெண்களை அறிவற்ற தன்மையதாகிய வீட்டினுள் அடைத்து வைப்பதனாலும் ஏற்படும் கொடுமையை விளக்கக்கூடியனவாய் இருக்கின்றன, பழமை பொருந்திய பட்டணமாகிய மூஷாபர்பூரில் உண்டாகிய அதிர்ச்சியால், வீடுகள்வீழ்ந்து சாம்பலாயின. அதனுள்ளிருந்தவர்கள் அதில் அகப்பட்டு புதையுண்டனர். ஆனால் இவ்வித கதியைப்பெற்றவர்கள் பெரும்பாலும் பெண்களும், குழவிகளுமே!

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க

# நமது ஆசாரங்களும் சாஸ்திரமும்.

(தோழர் சே. தெ. நாயகம்.)

ஆரிய தர்மம் 25-1-34ல் வெளியிட்டதாக, 5-4-34ல் வெளிவந்தலோகோபகாரியில் மேற்படி தலைப்பின் கீழ், பூரி என்னும் வடநாட்டு ஊரிலுள்ள சில சொத்துகளுக்கு ஆட்சி உரிமை பெற்று சங்கராச்சாரிஎன்னும் புனைப்பெயர் இடப்பட்டவர், (அவர் துறவி உடை வெளியார் தெரியக்கட்டும்வழக்கத்திற்கு ஆளாகும் முன் அவருடன் நெருங்கிப்பழகிய ஒருவரும், அக்காலத்து அவருக்குத் தனிமையில் மருத்துவம் செய்த இன்னொருவரும் அவரைப் பற்றிய பல செய்திகள் சொன்ன பொழுது, அவருடைய பழைய பெயரையும்சில நாட்களுக்கு முன் எனக்குச் சொல்லியிருந்தார்கள். அதை இப்பொழுது மறந்திட்டேன்.) மதுரையில் மக்கள் கூட்டத்தில் வெளியிட்டதாகச்சொல்லும் சில செய்திகளைப் படித்தேன். அவைகளை அறிவால் அலசிப்பார்ப்போம்.

### வெற்றிலை.

நம்நாட்டுக் குழந்தைகள் கூட வெற்றிலைக் காம்பையும் நுனியையும் கிள்ளி எறிந்து விட்டு மற்றதைத் தான் மெல்லுகின்றனவாம். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் கலைஞராயிருந்த ஹெண்டர்சன் அக்காம்பிலும், நுனியிலும் நஞ்சு இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறாராம். இக்கலைஞர் சொல்வதில் புதிதொன்றும் இல்லையாம். இது நமக்குப்பல தலை முறைகளுக்கு முன்னாலேயே தெரிந்தது தானாம். வெள்ளாடுகண்ட இலைகளை எல்லாம் தின்னும் வாய்ப்புள்ளது. அது கூடத்தின்னாத சில செடிகளும் உண்டு. ஆடு தொடா இலை அவற்றுள் ஒன்று. ஏன் அதை ஆடுதின்னவில்லை என மக்கள்யாரும் ஆராய்ந்து தெரிவித்ததாக இதுவரை நான் கேட்கவில்லை. அப்படி ஆராய்ந்தால், வெற்றிலைக் காம்பிலும், நுனியிலும் இருந்து மக்களுக்கு கேடு செய்யும நஞ்சைப்போல் ஆட்டுக்குக்கேடு செயயும் நஞ்சு அதில் இருப்பதாக வெளியாகும். வெறும் இலையை மென்னும் மக்களுக்கு உதவாத நஞ்சு அதன் காம்பிலும், நுனியிலும் இருப்பதாகக் கண்டு அறிவித்த கலைஞராவது, அதைப் பொட்டணம் கட்டிக் கொண்டு ஊரூராய்ப் போய்ச்சொல்லும் பூரியாராவது ஆடு தொடா இலையில் ஆட்டுக்குக் கேடு செய்யும் நஞ்சு இருப்பதாகக் கண்டு வெளியிட்டதாக வைத்துக் கொள்வோம். நிலச் சொத்து வைத்திருப்போருக்கு உதவி செய்யும்பொருட்டு அவர்களுடைய கொல்லைகளிலுள்ள இலைதழைகளைத் தின்று வயிறு வளர்த்துக் கொழுத்த ஒரு வெள்ளாடு இடையன் கீழ் வாழும் ஆடுகளின் மந்தைக்குப்போய் அங்குள்ள வெள்ளாட்டுக் கூட்டங்களைப் பார்த்து "ஓ, வெள்ளாடுமார்களே, ஆடு தொடா இலை என மனிதர்கள் பெயரிட்ட இலையில், நமக்கும் கேடு செய்யும் நஞ்சு இருப்பதாகத்தான் கண்டு பிடித்து விட்டதாக இடையன் ஒருவன் பெருமை பேசிக் கொள்கிறான். இதில் ஒரு புதுமையும் இல்லை- நாம் உலகில் தோன்றினது முதல் இந்த உண்மை நமக்குத் தெரியும். பால் முடிமாறாத நமது குட்டிகள் கூட அவ்விலையைத் தொடா. அது காரணமாகவே, இச்சிற்றறிவுள்ள ஆட்கள் அதற்கு ஆடு தொடா இலை எனப் பெயருமிட்டிருக்கிறார்கள். இதை மறந்து விட்டுத் தாங்கள் ஏதோ புதிதாகக்கண்டு பிடித்து விட்டதாக அவர்கள் பெருமை பேசிக் கொள்வது அவர்கள் மடமையை வெளியிடும்" என்றுசொல்ல, அதைக்கேட்ட பெரும்பாலான மற்ற ஆடுகள் உடலை உலுப்பிக் காதை ஆட்டித்தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டது போலாகும், பூரியார் மதுரைக்கூட்டத்தில் சொன்னதும் அதைக் கேட்டோரிற் பலர் பூரிப்படைந்ததும். தலைமுறை தலைமுறையாக வெறும் இலையைத்தின்று கொண்டிருந்தநம்மில் பெரும் பாலார் காம்பையும் நுனியையும் விலக்கி விட்டிருந்தும், நுனியையாவது, நரம்பையாவது விலக்காமல் முழு இலையையும் மெல்லுவோரும் பலர் உளர். ஆடு மாதிரி அதன் காரணந்தெரிய ஆற்றலில்லாதவர்களா யிருந்திருக்க, ஒரு சில ஆண்டுகளாக நம் நாட்டில் வேறு தொழிலுக்காக வந்திருந்த பிற நாட்டுக் கலைஞர் ஒருவர் அக்காரணங் கண்டு தெரிவித்ததற்காக அவருடைய அறிவை மெச்சி நமது மடமைக்குத் தலை குனிவது நமக்குள்ள சிறு அறிவையாவது காட்டும். அச் சிறு அறிவுகூட நமக்கு இல்லாதபடி செய்கிறார் இப் பூரியார். அவருடைய செயல் நமது அறிவைக் கூர்மைப் படுத்துகிறதா? மழுங்க வைக்கிறதா என ஆராயுங்கள். அவருடைய செயலுக்குக் காரணமுங் கண்டு பிடியுங்கள். வெறும் பச்சையிலையின் ஒரு நுனியைத் தின்னமல் விலக்கினதற்கு அதில் நஞ்சிருப்பதாகப் பிறர் சொல்லக் கேட்டுப்பூரிப்படைந்த பூரியார் போன்றோர் ஆடு- மாடு, கழுதை தொடாத காய்ந்த புகையிலையை மென்று விழித்திருக்கிற நேரமெல்லாம் வாயில் ஒதுக்கிக்கொண்டிருக்கிற, நம் மக்களின் அரிய செய்கைக்குக்காரணங்கண்டார்களா? உடலுக்கு உறுதி பயக்கும் ஒருவகைச்சாறு புகையிலையிலிருந்து வாயில் ஊறுகிறதா என வெற்றிலைக்காம்பிலுள்ள நஞ்சைக் கண்டு பிடித்து நமக்குப் பூரிப்பைத் தந்த மருத்துவக் கலைஞர் ஹெண்டர்சனை கேட்டால் தெரியும்.

### கங்கை நீர்

மற்ற நீரிலுள்ள நச்சுப் பூச்சிகளால் வாந்தி வருவது போல் கங்கை நீரைக் குடித்தால் வருவதில்லை என்றும் சாக்கடை நீர்அதில் போய் விழுந்தவுடன் தூய்மை பெற்று விடுகிறதென்று கல்லூரித் தலைவர் ரிச்சர்ட்சன் சொன்னாராம், இவ் விரண்டையும் உண்மையாகவே வைத்துக் கொள்வோம். வாந்திபேதி வந்தவர்களும் சாக்கடை நீரை நன்னீராக்க ஆராய்ச்சி செய்கிறவர்களுமா கெங்கையில் நீராடப்போகிறார்கள். வண்டி வண்டியாக நாள்தோறும் காசியில் இறங்கிக் கங்கையில் மூழ்கி வருபவர்களின் நோக்கம் என்ன? லைசால், பீனைல், முதலிய மருந்து நீர்களின் தன்மை கங்கை நீருக்கும் இருக்கின்றது என்ற உண்மையான மேன்மையை நோயாளிகளுக்கும், மருத்துவர்களுக்கும் எடுத்துச் சொல்வதல்லவா நேர்மையாகும். கங்கையில் மூழ்குவதால் ஆன்மா நற்கதியடையுமெனச் செல்வது பூரியார் சொல்லுகிறபடி, ஏமாற்று என்றல்லவா ஏற்படுகிறது. தலை முறை தலைமுறையாகக் கங்கையில் மூழ்கி எழுந்த மக்கள் அறியாதிருந்த நஞ்சைக் கொல்லும் தன்மை அந்நீருக்குஉள தென்பதை வெளி நாட்டார் தெரிந்து நமக்குச் சொன்ன பிறகாவது அவர்கள் அறிவையும் ஊக்கத்தையும் மெச்சாத, பூரியாரின் நன்றி கொன்ற செயலையும், நமது மடமைக்கு இரங்காத அவரது அறிவித் தடிப்பையும் உற்று நோக்குக.

### பஞ்ச கச்சம்

பஞ்ச கச்சம என்பது எட்டு முழத்திற்குக் குறையாத நீளமுள்ள வேட்டியை அழுத்தபடுத்தி இடுப்பில் செருகிப் பெருங்கோவணமாகக் கட்டிக் கொள்ளும் ஒரு முறை. இப்படிக் கட்டிக்கொள்வதால் தமோ குணம் நீங்குமென அக் கல்லூரித் தலைவர் அறிந்து சொன்னாராம். மக்கள் திரளாகக் கூடுங்கோயிலில் பிறருக்கு இல்லாத உரிமையுடன் நுழைகிறவர்கள் இவ்வாறு வேட்டி கட்டுகிறவர்கள்தான். கோயில் நகைகள் பகலிலேயே களவு போனதாக அடிக்கடி கேழ்விப்படுகிறோம். கோயிலில் தங்களுக்குள்ள உரிமைக்காக, அடிக்கடி கலகங்களுங் கொலைகளும் நடப்பதையும் கேள்விப் படுகிறோம். அச் செயல்களுக்கும் பெருங் கோவண உடைக்கும் தொடர்புண்டா என ஆராய்ந்தால் உண்மை எளிதில் வெளியாகும்.

### புடலங்காய்

புடங்காயில் ஒரு நஞ்சு இருப்பதாகவும், அதைத் தொடர்ந்தாற்போல் இருபது ஆண்டு சாப்பிட்டால் ஆயுளுக்குக் கேடு வருமெனவும், அதைச் சாப்பிட்ட பிறகு ஒன்றரை மணிநேரம் யோகத்தில் இருக்கவேண்டுமெனவும் ஹெண்டர்சன் கண்டுபிடித்தாராம். இதைப் பூரியார் கூட்டத்தில் சொன்னபொழுது கூட்டத்திலுள்ளவர்கள் எவ்வளவு அறிவாளிகள் என அவர் மதித்திருக்கவேண்டும் என்பதை நாம் ஒருவாறு உணரலாம். புடலங்காய் சாப்பிடாதவர்கள் தமிழ் நாட்டில் இரார்கள். அவர்கள் புடலங்காய் சாப்பிட்டபிறகு யோகத்தில் இருக்கிறார்களா, எவ்வளவு நேரம் இருக்கிறார்கள். இராமையால் நஞ்சினால் எவ்வளவு தூரம் கேடுறுகிறார்கள், எத்தனை மக்கள் அதினால் மரணமடைகிறார்கள், என்பனபோன்ற செய்திகளை பேசின பூரியாராவது கேட்டபிறர்களாவது எண்ணிப் பார்த்தார்களா? பெருந்திரளான மக்களிடமிருந்து பெற்ற சொத்தின் ஆட்சிக்கு உரியரானவரிடம் இருக்கவேண்டிய அறிவும், நோக்கமும் இவைதானா?

### மின்சாரம்.

பல ஆயிர ஆண்டுகட்கு முன் அரசதண்டனையால் காடு கடத்தப்பட்ட பாலகங்காதர திலகர் ஊரையும், இனத்தையும் சேர்ந்த, இருபிராமணர்கள் எகிப்து சென்று மின்சாரக்கருவிகள் செய்யும் விதத்தை அங்குள்ளார்க்குக் கற்றுக் கொடுத்தனர்களாம். அவர்கள் வெறும் பிராமணர்களா? கருவிகள் செய்யும் விசுவப் புராமணர்களா எனச் சொன்னாரில்லை. அவர் சொன்ன செய்தி உண்மையாக இருந்தால், அத்திறமையின் மச்சங்கூட இல்லாதபடி நம்நாடு மங்கலடைந்ததற்குக் காரணந்தேடி, அக்காரணத்தை நீக்க முயன்றிருப்பாராகில், அவர் நோக்கத்தை மெச்சியிருக்கலாம். நாட்டின் கேட்டிற்குப் பூரியார் போன்றோர் காரணஸ்தர்களல்லவா என ஆராய அறிவுள்ளமக்களை வேண்டுகிறேன்.

### மந்திரம்.

ஒரு ஐரோப்பியர் இந்தியா வந்து கோபால (இடைய) மந்திரத்தைக் கற்றுக் கொண்டு லண்டன் போய் மின்சாரக் கம்பி வழியாகச் சீமைச் சுண்ணாம்புக் கட்டியைக் கருப்புப் பலகையில் படச்செய்து, அம்மந்திரத்தை ஆயிரத்தெட்டுதடவை சொன்னவுடன் மாட்டுடனும், பெண்களுடனும் கோபாலன் உருவம் கருப்புப் பலகையில் விழுந்ததாம். இப்படி

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

புரட்சி

ஈரோடு 1934- ஏப்ரல்-மீ 15-வ

## காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி.

—:O:—

பழைய காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி, இவ்வருடத்தில், 'புனர் ஜன்மம்' எடுத்ததைப் பற்றி, சட்டசபை மோகம் பிடித்தவர்களுக்கு திருப்திகரமாயிருக்குமென்பதைப்பற்றி, யாரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை. காந்தியாரும், இந்த சுயராஜ்யக் கட்சியின் 'புனர் ஜன்மத்தை' வாழ்த்தி வரம் கொடுத்த விஷயத்தைக்குறித்தும், யாரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை. இவ்வித உபாயங்கள், முதலாளி தத்துவத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் உண்டு. இந்த அனுபவத்தை ஒட்டியே, சுயராஜ்யக்-கட்சியினர், திரும்பவும், தங்கள் கட்சியைப் புதுப்பிக்க ஆரம்பித்தனர்; காந்தியாரும், முதலாளித் தத்துவத்தில் சன்னது பெற்றவராதலால், சுயராஜ்யக்கட்சிக்கு மங்கள வாழ்த்தும் கூறினர். சுயராஜ்யக் கட்சி இன்று எடுத்த புனர் ஜன்மத்திலாகிலும், அல்லது, காந்தியார் அதன் மேல் பன்னீர் தெளித்ததனுலாகிலும், தேசத்தில் பெரும்பான்மையோருக்கு எவ்வித சுதந்திரமாகிலும், நன்மையாகிலும் யாரும் கோரவேண்டியதில்லை. தேசமும், தேசத்து மக்களும், பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காட்டால், பண்டை காலமுதல், கஷ்டப்பட்டு வந்ததைப்போல, இந்தப் 'புனர் ஜன்மத்தைப்'போன்ற ஆயிரமாயிரம் 'புனர் ஜன்மங்கள்' சுயராஜீயக் கட்சியார் எடுத்தபோதிலும், அவ்வித 'புனர் ஜன்மங்களை' யெல்லாம் காந்தியார் வாழ்த்தி வந்த போதிலும், தேசம் இந்நிலையிலிருந்து தாழ்வடையாமற் போனபோதிலும், இருக்கும் நிலையிலேயே இருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. எவ்வித துக்கமும் நிவர்த்தியாவதற்கு இடமில்லை. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், தேச விடுதலையை சதாகாலமும் எதிர்த்துவரும் "டெய்லிமெய்லை"ப் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள், சுயராஜ்யக்கட்சியின் 'புனர் ஜன்மத்தை' ஆவலுடன் வரவேற்று வருவதே போதும்.

"சரித்திரம் திரும்பத் திரும்ப தானே ஒப்பிக்கும்" என்று ஓர் ஆங்கிலப் பழமொழியுண்டு. அப்பழமொழியின்படி சில வேளையில் தேச சரித்திரம் தான் பாடிய பல்லவியையே பாடிக்கொண்டு வரும். ஜர்மனியில் ஏகாதிபத்திய சக்கிரவர்த்திக்குப் பின்னுல், ஏகாதிபத்திய ஹிட்லர் வந்தான். ரஷ்யாவிலும், ஜார் ஆட்சிக்குப் பதிலாக, கெரன்ஸ்கி ஆட்சி வந்தது. இட்டாலியில், அம்போல்ட் இருந்தவிடத்தில், முசோலனி வந்தான். ஆங்கில நாட்டிலும் கன்சர்வேடிவ் கட்சிக்குப் பதிலாக, நாஷனலிஸ்ட் கட்சி வந்தது. இம்மாறுதல்களில், சொல்—மாறுதல்களே ஒழிய, நாடு அடையும் பலன் ஒன்றுமில்லை. "அவன் தம்பி அங்குதன்" என்றவாறு, வெவ்வேறு பெயர்களைப் போத்திக்கொண்டு வந்த அரசாட்சிகளேயொழிய, முதலாளித் திட்டத்தின் மனப்பான்மையும் நோக்கமும், கோரிக்கையும் எதவிதத்திலும் மாற்றமடையவில்லை. எல்லாம் முதலாளி என்ற சாயத்தில் தோய்ந்தவைகளே. சுயராஜ்யக் கட்சி, இதற்கு மாறுபட்டதல்ல. நேற்று பயனற்ற சுயராஜ்யக் கட்சியே, இன்று 'புனர் ஜன்மம்' எடுத்திருக்கிறது. அந்த சுயராஜ்யக் கட்சியின் தலைவர்களே, இன்று 'புனர் ஜன்மம்' எடுத்த சுயராஜ்யக் கட்சியிலும் இருக்கின்றனர். அவர்களும் முதலாளி தத்துவத்திலிருந்து எதையும் விட்டுக் கொடுக்காதவர்கள். தற்கால சுயராஜ்யக் கட்சியினர்களாகிய இவர்களும், ஒன்றும் விட்டுக்கொடுக்கப்போவதில்லை. அந்த சுயராஜ்யக் கட்சியினர்களும் முதலாளிகள்தான்—இந்த சுயராஜ்யக்கட்சியினர்களும் முதலாளிகள்தான். தேசம் எவ்விதம் உருப்படப்போகிறது?

முதலில் ஒத்துழையாமையை எதிர்த்து சட்டசபைகளைக்கைப் பற்றி, சட்டசபைகளை நடக்காவண்ணம், முட்டுக்கட்டைகளைப் போட்டு 100ல் 98 தேச மக்களுக்கு விடுதலை கொண்டுவரப் போகிறேமென்று தொடை தட்டிய சுயராஜ்யக்கட்சியினர், கடைசியில் அரசாங்கத்து மெஜாரிட்டியினின்று விழும் எலும்புகளைத் தாவிப்பிடித்த அகோர நடபடிக்கைகளைய, தேசம் மறந்துவிடவில்லை. இக்கட்சிக்குத் தலைவரான், காலஞ்சென்ற தேசபந்து தாஸ், காந்தியாருக்கு விரோதமாகச் சட்டசபைப் பிரவேசத்தை 'ஞானஸ்நானம்' செய்வித்தபோது, அதனுல் 100க்கு 98 இந்திய மக்கள் சுபேக்ஷத்துக்காகவே சட்டசபைப் பிரவேசத்தை ஆரம்பித்தோமென்று, தேசமுழுமையும் திக்விஜயம் செய்துவந்தார். அவர் இறந்த இரண்டொரு வருடத்துக்குள்ளாகவே காலஞ்சென்ற மோதிலால் நேருவின் தலைமையில், சுயராஜ்யக் கட்சியினர் டாடா கம்பெனியில் வேலை செய்து வந்த பல்லாயிரம் தொழிலாளிகளில் ஒருவருக்கேனும், ஒரு பைசாகூட அவர்கள் கூலியில் உயர்த்த சம்மதிக்காமல், யாதொரு நிபந்தனையுமின்றி, பொதுமக்கள் உழைப்பின் பயனுக வந்த ஐம்பது லட்ச ரூபாயை, தாராளமாக டாடா கம்பெனியாருக்குத் தானமிட்டனர். தேசபந்துவின் தலைமையிலேயே நடந்த கயாகாங்கிரஸில், தொழிலாளர் கட்சி என்பதை 1922ல் ஸ்தாபித்து, அதற்குப் பிரபல அங்கத்தினர்களை ஏற்படுத்திய பிறகு அவர்களில் சிலர் வேலை செய்ய ஆரம்பித்ததும், அவர்கள் தலையில் தண்ணீரை ஊற்றி தணிக்கச் செய்ததும் அந்தச் சுயராஜ்யக்கட்சியினர்களே. அக்கட்சியினரே இப் 'புனர் ஜன்ம'மெடுத்த சுயராஜ்யக் கட்சியிலுமிருந்து வருகிறபடியால், தேச மக்களுக்கு எவ்வித நன்மையும் இப் 'புனர் ஜன்மத்தில்' கிடைக்கப் போவதில்லை.

எவ்வித நல்லெண்ணத்தோடும், எவ்வித இனிப்பான சொல்லோடும், பொது மக்களுக்கு தாங்கள் சுகப்பேற்றை நாட்டுக்குக் கொண்டுவருவதாகச் சொல்லிய போதிலும், காங்கிரஸ் திட்டம் இவர்களை எந்த நன்மையும், சட்டசபைக்குள்ளாகிலும், அல்லது, அதன் வெளியேயாகிலும் செய்துவிடப்போவதில்லை. காரச்சியின் காங்கிரஸ் திட்டம், சுயராஜ்யக்கட்சியினர்களின்கைகளையும், கால்களையும் விலங்கிட்டு ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது. தனிவுடமையை யாரும் அசைக்க முடியாது. பொதுவுடமையை யாரும் நினைக்கவும் கூடாது. மக்களின் மூட நம்பிக்கை இருந்தவாறே இருக்கவேண்டும். கோவில்களில், கல்லுக்கும் கட்டைக்கும் பஞ்சகாவ்யத்தால் (தேன், பால், பழம், தயிர், கோமயம்) அபிஷேகம் செய்து கொண்டேயிருக்கவேண்டும். முதலாளிகள் வியர்த்தங்களைத் தடுக்கப்படாது. தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளில், விவசாயிகள் தங்கள் நிலங்களில், யாதொரு பொதுச் சுதந்தரமுமின்றிக் கொடுத்த கூலியைப் பெற்று வாழவேண்டும். இவ்வித வரையறைகளில் கட்டுண்டு கிடக்கும் காங்கிரஸ் கட்சியினர், எந்தப் பேரை வைத்துக்கொண்டு அரசியலை நடத்த முன்வந்த போதிலும், நாட்டிற்கு எவ்வித நன்மையும் விளையப்போவதில்லை. மக்களுக்குப் பொதுவுடமையும், பொது ஆதிக்கமும், பொது உரிமையும் எந்த அரசியல் திட்டத்தில் அடையக்கூடுமோ, அந்தத்திட்டம் ஒன்றுதான் தேசத்தைச் சுகப்படுத்துமேயல்லாது, சுயராஜ்யக் கட்சியினர், காங்கிரஸ் பெயரை வகித்த போதிலும், வேறு எந்தக் கட்சியினரின் பெயரை வகித்தபோதிலும், சட்டசபைகளில் உள் நுழைந்து முட்டுக்கட்டை போட்டபோதிலும், அல்லது, வெளியிலிருந்து சத்யாக்கிரகம் செய்த போதிலும், மக்களுக்கு யாதொரு நன்மையும் விளைவிக்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

காந்தியார் சுயராஜ்யக் கட்சியினரை நேற்று வாழ்த்தியதாகப் பொதுவதந்தி ஒன்று நாட்டில் உலாவுகின்றது. இவர் எந்த ஸ்தாபனத்தைத்தான் வாழ்த்தாமலிருந்தார்? இவர் ஒத்துழைத்த ஸ்தாபனங்கள் யாவும், முடிவில் குட்டிச்சுவர்களாகத்தான் முடிந்தது. இவரை நம்பி ஆற்றிலிறங்கியவர்கள் யார் தான் கரை ஏறினார்கள்? இவர் ஆதரித்து வந்த எந்த இயக்கமும், சம்பூரணமாக முடிவடைந்ததாகச் சொல்வதற்கில்லை. ஆரம்பித்த ஒவ்வொரு இயக்கத்தையும் நடுவாற்றில் தியங்கவிட்டு, தான் ஒருவரே கரை ஏறினர். போயர் சண்டையை குருக்கரிடம் கலந்திருந்து கொண்டு போயர்களின் விரோதிகளுக்கே உதவிசெய்ய ஆரம்பித்தார். 1906ம் வருடத்தில், ஜுலுக்களை கிளப்பிவிட்டு, அவர்களை நாசமாக்க அவர்களின் விரோதிகட்கே உதவி புரிந்தார்!! 1918ம் வருடத்தில், சிம்லாவில் கூடிய மகாநாட்டில், மகாயுத்தத்தில் இந்தியர்களை படையினராக அனுப்ப, 'பகீரத'ப்பிரயத்தனம் செய்தார். மகாயுத்தம் முடிந்தபிறகு, தான் உதவி செய்த ஆங்கிலேயர்களையே இந்தியர்களைக் கொண்டு எதிர்க்கச்செய்தார்!!! இந்தக் கிளர்ச்சி ஆரம்பித்ததும், எங்கே பொதுமக்கள் தமது கட்டுக்கு அடங்காமல போகின்றார்களோவெனப்

பயந்து, அவ்வியக்கத்தை பர்டோலியில் நிறுத்திவிட்டார்!!!! உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து, "ஒன்று சுயராஜ்யம் வரவேண்டும், அல்லது என்துஉடல் நீரில் மிதக்கவேண்டும்" எனச்சபதமிட்டு, ஆயிரக்கணக்கான சத்தியாக்கிரகிகளை ஜெயிலில் அழுகச்செய்து, தான் மாத்திரம் உண்ணாவிரதத்தைப்பூண்டு விடுபட்டார்!!!!! நேற்று, வட்டமேஜை மகாநாட்டிலிருந்து திரும்பி, பயனற்ற சக்தியாக்கிரகத்தைத் திரும்பவும் ஆரம்பித்து, அதையும் கைவிட்டு, தீண்டாதாருக்கு 'வைகுண்டத்தை'த்திறந்து விடுவதாக ஊர் பிரதட்சணம் வந்து, அதையும் கைவிட்டுவிட்டு, பூகம்ப சேவையில் தலையிட்டுக்கொண்டார்!!!!!! நாளை அதையும் நடுத்தெருவில் விட்டுவிட்டு, இமயமலைக்குச் சென்று சந்யாசிவேடம் பூண்டு, தபசு புரிந்தாலும் புரிவார்!!!!!!! இவரை நம்பிய தேசம், அதோகதியடையுமென்பதற்கு என்ன சந்தேகம்.

காந்தியார் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்ததாக நாடெங்கும் முழங்குகின்றது. சட்டசபையில் நுழைந்து என்னசெய்யவேண்டுமென்பதைக் குறிப்பிட்டாரில்லை. இந்திய நாட்டு முப்பத்தைந்து கோடி மக்களில், இவர் ஒருவர்தான் சட்டசபையில் நுழையாத உண்மையான சத்தியாக்கிரகியாம்! இந்த வீரமொழியைக் கேட்டு நகைக்காத சிறுவர்கள் யாருமில்லை! இவருடைய ஆதரவின் பேரில் காங்கிரஸ் கட்சியினர்களும், சட்டசபையில் நுழைய உத்திரவு அளிக்கவேண்டுமென, அரசாங்கத்தாரைக் கைகூப்பி வணங்குகின்ற கேவல காட்சியைக்காண, இவ்வளவு கேவலத்திற்கு நமது சுயராஜ்யக் கட்சியினர் இறங்கிய நிலைமை பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது. இந்நிலைமைக்குக் கொண்டு வந்தவர் காந்தியார் ஒருவரே. இவர், நாட்டில் அரசியல் துறையில் தலைமை வகித்திருக்கும் வரை, இவர்பால், மூடமக்கள், மூடபக்தி வைத்திருக்கும்வரை, நாடு இன்னும் கேவல நிலைமைக்கு வருமென்பதற்கு ஐயமில்லை. இதனைத் தடுத்து, மக்களுக்குப் பகுத்தறிவை யூட்டி, இந்திய மக்களை அடிமைத் தளத்தினின்றும், மூட மத ஜாதி வித்தியாசத்தினின்றும், விடுவிப்பது சமதர்மிகள் கடமையாகும்.

---

# தடை உத்திரவு.

[தோழர் ப. ஜீவானந்தம்]

வடசேரி சித்திராவாசிப்புசாலையின் ஆண்டுவிழாவில் நாங்கள் பேசக்கூடாதென்று திருவனந்தபுரம் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டால் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டதென்பதைத் தோழர்கள் பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பீர்கள். தடை உத்திரவு போடப்பட்டது எனக்கும், தோழர்கள் அ. பொன்னம்பலம், அ. இரத்தினசபாபதி, சி. கே. குப்புசாமி ஆகியோருக்கும்; 15 தினங்கள் திருவனந்தபுரம் ஜில்லாவினுள் எந்தவிடத்திலும் நாங்கள் பேசக்கூடாதென்பது தடை உத்திரவின் அடக்கம். காரணம், நாங்கள், இந்துமத புராண சாஸ்திரங்களை வன்மையாகத்தாக்குவதோடு, நாஸ்திகத்தையும் பொதுவுடைமையையும் பிரசாரம்செய்கிறோமாம், இத்தகையபிரசாரம் பொது ஜனங்களில்பெரும்பாலாரின் மனத்தைப்புண்படுத்துவதால், அமைதிக்குப் பங்கம் விளைவித்து, குழப்பத்திற்கு ஏதுவாகின்றதாம். இது மாஜிட்ரேட்டின் மனந்துணிந்த சித்தாந்தம்.

°° °°

வடசேரியிலுள்ள 'பெரிய மனிசர்' என்ற திமிர்கொண்ட சிலர், பொறுமைக்கிரையாகி, சில்லறைப் புத்தியுடன் ஆண்டுவிழாவைத் தடுத்துவிட கஜகர்ணம் கோகர்ணம் அடித்துப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் பருப்பு சுயமரியாதைத் தண்ணீரில் வேகவில்லை. பின், நிகழ்ச்சிக்குறிப்பில் கண்ட, வரக்கூடுமென்று எதிர்பார்த்த, பிரசங்கிகள் மீது வாய்பூட்டுச் சட்டத்தைப் பிரயோகிக்கவேண்டுமென்று மாஜிஸ்ரேட் தேவதையிடம் சென்று மண்டியிட்டுக் குறையிரந்துவேண்டினார்கள். பார்ப்பார ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் புத்தியையும் பொறுப்பையும் ஒத்திவைத்துவிட்டு, பக்தர்களுக்குக் கருணை பாலித்தார். வரங்கேட்ட செல்வச்செருக்கும் பிற்போக்குப் பிடிவாதமும் கொண்ட 'தாசர்கள்' வயிறு நிறையத்திருப்தியடைந்து உள்ளங்குளிர்ந்து துள்ளிக்குதித்திருக்கவேண்டும். சந்தேக மிருந்தால் அவர்களிடம் சென்று கேளுங்கள்.

°° °°

நாங்கள் பிரசங்கம் புரியவில்லை. நாஞ்சி நாட்டுத் தோழர்களும் 15 தினங்கள் பொறுத்திருக்க முடிவுகட்டினார்கள். ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்று இனிது முடிந்தது. எங்களுக்குப் பதிலாக உபந்யசித்த தோழர்கள், மாஜிஸ்ட்ரேட் தடை உத்திரவு பிறப்பிக்கக்கூறிய காரணங்களை ஆடிக்காற்றில் ஊதிப் பறக்கடித்தார்கள். இந்து மதமும் சாஸ்திர புராணங்களும், பகுத்தறிவுப் பாணங்களால் சல்லடைக்கண்களாகத் துளைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டன. 'பச்சை' நாஸ்திக இடிமுழக்கம் செவிடுபடக் குமுறிற்று. பொதுவுடைமைப்பேரிகையையும் சொற்பொழிவாளர்கள் உலகதிரக்கொட்டினார்கள். அஞ்சாநெஞ்சமுடன் இளந்தோழர் ஆறுமுகப்பெருமாள், வரட்டுப் புத்தியுடைய மாஜிஸ்ட்ரேட்டுக்கும் வைதீக வயோதிகர்களுக்கும் கொடுத்த சூடு வெகு அற்புதம்.

°° °°

பசலியைக் கிள்ளினால் பலகவர் விடும். ரப்பர் பந்து அடிக்க அடிக்க எழும்பும். காலத்திற்கு இசைந்த உணர்ச்சி அடக்கப்படுந்தோறும் வீறு கொண்டெழும். சுயமரியாதை எழுச்சியை அடக்கி ஒடுக்க, வைதீகரின் வேண்டுகோளுக்கிணங்கி தடை உத்திரவு பிறப்பித்த "திவா பேஷ்கார்" பி. விஸ்வநாதய்யர் காட்டிய காரணங்கள் கரியாய்ப் போயின. மாஜிஸ்ட்ரேட் பிரயோகித்த வாய்ப்பூட்டுச் சட்டம் வாலிபர்களின் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த சுயமரியாதை உணர்ச்சிக்கு எண்ணெய் வார்த்தது. ஆண்டு விழாவில், உத்வேகமாக நாஸ்திகப பொதுவுடைமைப் பிரசாரம் செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் பிரசங்கத்தின் போது உற்சாகத்தோடும் உள்ளக்கிளர்ச்சியோடும் சொக்கியிருந்தது உண்மை நிகழ்ச்சி. ஒருவராவது பிரசங்கத்தால் மனம் புண்பட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவோ, குழப்பம் புரிந்ததாகவோ தெரியவில்லை. பின் தடை உத்திரவு ஏன்? திருவாங்கூர் பார்ப்பனக் கோட்டை. ஆகையால் வைதீகத்தைத் தக்காக்கும் பார்ப்பனப் 'பேய்', பொறுப்பு வாய்ந்த மாஜிஸ்ட்ரேட் பதவியிலுங்கூட நுழைந்து கொண்டுஅட்டகாசம்செய்கிறது. அவ்வளவு தான்.

°° °°

இரட்சண்யசேனை பிரசாரம் இன்றும், ஞாயிற்றுக்கிழமைகளில் திருவாங்கூரின் பல பாகங்களிலும்நடந்துகொண்டிருக்கிறது. திருவாங்கூரில் சுமார் 18 லட்சம் கிறிஸ்துவர்கள்வாழ்கிறார்கள். மதம்வேண்டாமென்று தீர்மானித்துவிட்ட நமது ஆருயிர்த்தோழர்களான ஈழுவர்கள் லட்சக்கணக்காக அங்கு உண்டு. விக்ரக ஆராதனையையும் பௌராணிக மதத்தையும் கடுமையாகத்தாக்கும் ஆரிய சமாஜிக்கும், இந்துக்களை 'காபிர்' என்னும் மகம்மதியனுக்கும் அங்கு இடமுண்டு. இவ்வளவையும் இமைகொட்டாமல் அனுதினமும் பார்த்துக்கொண்டிருக்கும் பத்மநாபதாஸராகிய விஸ்வநாத அய்யர், சுயமரியாதைக்காரர்களால் ஏற்படும் பேராபத்திலிருந்து இந்துமதத்தைக்காப்பாற்ற ரத, கஜ, துரக, பதாதிகளுடன் புறப்பட்டிருக்கிறார். சட்! மானக்கேடு

°° °°

சட்டத்தை மீறுவது எங்கள் வேலையல்ல. மனிதவர்க்கத்தின் ஜீவாதார உரிமைகளைப் பறிமுதல் செய்யும் எந்தச்சட்டத்தையும் மீறுவது எங்கள் கடமை. இன்றைய சமூகம் முதலாளி சமூகம். இன்று வாழ்க்கையின் சமூக, பொருளாதார, அரசியல், மதத்துறைகளில்காணப்படும் சட்டங்களெல்லாம் முதலாளிக்குச் சாதகமானவை என்பது சமதர்மிகளின முடிவு. முதலாளிகளின் கை ஆயுதமாகிய சட்டங்கள் அடிக்கடி சமதர்மிகளை அடக்குவதற்குப் பிரயோகிக்கப்படுமென்பதை மறைக்க முடியாது. வாழ்க்கை வளர்ச்சிக்கு உறுதுணை செய்யும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதும், வாழ்க்கை ஓட்டத்தைத் தடைசெய்யும் சட்டத்தை மீறிச் செல்லவேண்டியதும் மனிததர்மம். அய்யர் மாஜிஸ்ட்ரேட் பிரயோகித்த சட்டம் நியாயமற்றதென்றே கருதினோம். மீறவும் விரும்பினோம். தள்ளிவைக்க முடியாத சில அலுவல்களினாலும் தோழர்களோடு கலந்து முடிவு கட்ட வேண்டிய அவசியத்தை

# 144 படும்பாடு.

## கொலையும்—குறும்பும்.

(தோழர் எஸ். வி. லிங்கம்)

திருவையாறும், திருவனந்தபுரமும், ஹிந்துமதத்தின் புண்ணிய ஸ்தலங்களாகும். இவ்விரண்டு இடங்களிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் சிறப்புபெற்ற 144 தடையுத்திரவு பிரயோகிக்கப்பட்டது. இத்தடையுத்திரவு பிறப்பிக்க காரண பூதர்களான போலீஸ் அதிகாரி, மாஜிஸ்ட்திரேட், இவ்விருவர்களில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பார்ப்பனக் கனவான் இருந்திருக்கிறார். இவ்விரண்டு இடங்களிலும் தடையுத்திரவு பிறப்பித்ததற்குக் காரணம் வெவ்வேறு கூறப்பட்டது.

திருவனந்தபுரம் தடையுத்திரவோ ஹிந்துமதத்தின் பாதுகாப்புக்கு என்று சொல்லப்பட்டது. திருவையாறு தடையுத்திரவோ, ஹிந்துமத மூடநம்பிக்கையை யொழிப்பதற்கென்று சொல்லப்பட்டது. இவ்விரு இடங்களிலும் சுயமரியாதைக்காரர்கள் சம்பந்தம் சிறிதும், முழுதும் முறையே இருந்திருக்கிறது.

தஞ்சை சுயமரியாதைச் சங்கத்தார் மற்றவூர் சங்கத்தாரைப்போலவே மூடப் பழக்கவழக்கங்களை ஒழிக்க தீவிர வேலை செய்திருக்கிறார்கள். செடில் குத்தும் வழக்கத்தைத் தடுத்தால் மூடமக்கள் கிளர்ச்சி செய்வார்களென்று உத்தியோகஸ்தர்கள் எண்ணியிருந்தால் தடையுத்திரவை சார்வுசெய்திருக்கமாட்டார்கள். பொதுஜன ஆதரவு தங்களுக்குச் சாதகமாக இருக்கிறதென்ற முழு நம்பிக்கையிலேயே இதைச் செய்ததினால்தான் தடையுத்திரவு பிறப்பித்த ஸ்தலத்திற்குச் செல்லும்போது அலக்ஷியமாகச் சென்றிருக்கிறார்கள். அதனால்தான் இததிடுக்கிடக்கூடிய மூன்று கொலையும் பலரின் காயமும் ஏறபட்டிருக்க ஏதுவுண்டாயிற்று. இச் செய்கைக்குக் காரணஸ்தர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு தக்க பரிகாரம் தேடப்படவேண்டுமென்றுவேண்டுகிறோம்.

ஒருசிலஹிந்துமதத்துஷ்ட அயோக்கியர்களே இக் கொலைத் தொழிலில் இறங்கியிருக்கவேண்டும். அவர்களைக் கண்டு பரிகாரம் செய்யப்படுவதுடன், இப் பயங்கரக் கொலைக்கு உட்பட்ட மூன்று கனவான்களின் குடும்பத்துக்கும் தாராளமாகச் சர்க்கார் சன்மானம்செய்து இத்தகைய செய்கையில் எதிர் காலத்தில் அஞ்சாது தன் கடமையைச் செய்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு தைரியமளிக்குமாறு சர்க்காரையும் பொது ஜனங்களையும் நாம் வேண்டுகிறோம். இதைப்பற்றிய வழக்கு முடிந்தபின்பே, நமது அபிப்பிராயத்தைக்கூற வேண்டியவர்களாக இருப்பதால், ஹிந்து மதமென்பவர்களின் கொலைஞர்களால், கொலைசெய்யப்பட்ட மூன்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களுக்கு தமிழ் நாட்டார் சார்பாக நன்றியும், ஆறுதலும் கூறிக்கொள்ளுகிறோம்.

வடச்சேரி சித்திரவாசகசாலை வருடாந்திரக்கொண்டாட்டம் 6-4-34 தேதியில் நடைபெற்றது. திருவனந்தபுரம் ராஜ்ஜியத்தில் பரிபூரண செல்வாக்கும், பொதுஜன ஆதரவும், பெற்ற சுமார் பத்து கனவான்களில் மூன்று நான்கு கனவான்கள் இவ் வருடாந்திரகொண்டாட்டத்தில்முழு பொருப்பேற்றுஇருந்தார்கள். இதன் உபன்னியாசகராக சென்ற நமது சுயமரியாதை தலைவர்களான தோழர்கள் ரெத்தினசபாபதி, ப. ஜீவானந்தம், அ பொன்னம்பலம், நாஸ்திக குப்புசாமி, இவர்களை அக்கூட்டத்தில் பேசக்கூடாதென்று பத்மனுபன் ராஜ்யத்துப்பார்பனஉத்தியோகஸ்தர்கள் 144 போன்ற தடையுத்திரவைப்பிரயோகித்துவிட்டார்கள். இச்செய்கை மிகவெறுக்கக்கூடியது என்பதுடன் நாம் இதில் அலக்ஷியம் காட்ட இயலாதிருப்பதை திருவனந்தபுரம் சர்க்காருக்கு அறிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

திருவனந்தபுரத்திலுள்ள பொறுப்புள்ள சிலர் இத்தடையுத்திரவு விஷமத்தனமானதென்றும், இவை உடனே வாபீஸ் வாங்கிக்கொள்ள பத்மனுபன் ராஜ்ய சர்க்கார் முன்வரவேண்டு மன்றும் முயலுகிறார்களென அறிகிறோம். அவ்விதம் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படாமல் இருக்குமேயானுல், இம்மோசமான தடையுத்தரவை பிறப்பித்த பார்ப்பனர்கள்மீது தக்க நடவடிக்கைக எடுத்துக்கொள்ள திருவனந்தபுரம் சர்க்கார் தவறுமேயானுல் இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

சுயமரியாதைத் தலைவர்கள் உபந்நியாசம் செய்வதால் ஹிந்துமதஸ்தர்கள் மனம் புண்படுவதாக அத் தடையுத்திரவு கூறுகிறது.

திருவனந்தபுரம் ராஜ்யத்திலுள்ள பாரப்பனரல்லாதார் சொத்தைக் கொண்டு பரிபாலிக்கப்படும் பத்மனுபன் ராஜ்யத்தின் வருமானத்தில் முக்கால் பாகத்தை மதத்தின் பேராலும், உத்தயோகத்தின் பேராலும், பங்கெடுத்துத்தினும் பார்ப்பானுக்கு (ஹிந்து மதம்) மனம் புண்படுகிறது என்ற உண்மையை அத்தடையுத்திரவு கூறினுல் நமக்கு ஆக்ஷேபனை இல்லை. அப்படிக்கின்றி அந்த ராஜ்யத்தின் பொது மக்கள் பேரில் பழியைப் போட்டு அப்பலத்தில் திருவனந்தபுரத்து உத்தியோக பார்பனர்கள் தப்பித்து தங்கள் கருத்தை நிறைவேற்ற எண்ணுவது யோக்கியமானதாக இருக்க முடியாது. பத்மனுபன் பேரால் ஆளப்படும் திருவனந்தபுரம் ராஜ்யத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் என்றமூன்று மதஸ்தர்களும் இருக்கிறார்கள். இவர்களில், ஹிந்து மதஸ்தர்கள் ஆஷேபிப்பதால் என்று தடையுத்திரவு கூறுகிது.

அந்நாட்டில் உள்ள பெரும்பான்மையான ஜனங்கள் சுயமரியாதைப் பிரசாரத்தை எதிர்க்கிறார்கள் என்று சொல்லவில்லை.

இருப்பதில் மிக சொற்ப தொகையினரான ஹிந்துக்கள் எதிர்கிறார்கள் என்பதே தடையுத்திரவின் கருத்தாகும். இது உண்மைதானு! பார்ப்பன உத்தியோகஸ்தர்களின் குறும்புத்தனமானதா என்பதை சுயமரியாதை காரர்கள் உணர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தடையுத்திரவு ரத்து செய்யாவிட்டால் திருவனந்தபுரம் ராஜ்யம் முழுதும் பொது ஜன வாக்கெடுத்து, பார்த்து விட வேணடுமென்று சுயமரியாதைக்காரர்களுக்கு யோசனை கூறுகிறோம்.

திருவனந்தபுரம் ராஜாவுக்குச் சட்ட சம்மந்தமான யோசனைகளைக் கூறவேண்டிய சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் திருவனந்தபுரத்தில் இருக்கும்போதே இத்தகைய அநாகரீகமான முறையில் சட்டம் உபயோகிக்கப்படுவதானது மிக்க ஆச்சர்யத்தைக்கொடுக்கிறது. சென்னை மாகாணத்தில் ஒரேவாரத்தில் இரண்டு இடத்தில் ஒரே சட்டம் நன்மைக்கும், தீமைக்கும் உபயோகிக்கப்படுத்தப்படுவதை எடுத்துக் காட்டுவதற்காகவே இதைக் குறிப்பிட்டோம்.

சர்க்காரின் சட்ட நிபுணர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுள் ஒன்றான இ. பி. கோ. 144-வது சட்டமானது ஹிந்துமத மூடத்தனத்தை ஒழிப்பதற்கு யோக்கியமான முறையில் உபயோகப்படுத்தப்பட்டு அதன்பயனுச மூட வஞ்சக பாதகர்களால் மூன்று கனவான்களின் உயிரைப் பலியிடவும் ஏதுவாகயிருந்தது. இப் புகழிற்குரிய மூவர்களில் ஒரு கனவான் பிராமணர் என்பதற்காக அவரைப் பாராட்டாமல் இருப்பதற்கில்லை. முதலில் அவரையே பாராட்ட வேண்டியவர்களாவோம்.

ஆனுல் இதே 144 ஆனது திருவனந்தபுரத்தில் பஞ்சாங்கார பார்ப்பனர்களின் அற்பத்தனமான மனப்பான்மையுடன் உபயோகிக்கப்படுவதைக் கண்டு கண்டிக்காமல் இருக்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

---

உணர்ந்தமையாலும் வடசேரி ஆண்டுவிழாவில் நானும் எனது தோழர்களும் வாய்ப் பூட்டை உடைக்காதிருந்தோம். அந்த நிகழ்ச்சியைக்குறித்து எங்கள் மனம் இன்னும் உறுத்திக்கொண்டுதானிருக்கிறது. கூடிய சீக்கிரம், அவசியம் ஏற்பட்டால், சட்டத்தை மீறியும் சமதர்ம முழக்கம் செய்து, திருவனந்தபுரம் ஜில்லாவின் பொறுப்பு வாய்ந்த மாஜிஸ்ட்ரேட் பதவியினுள் புகுந்து கொண்டிருக்கும் பார்ப்பனீய விஷமத்தின் கொட்டத்தை அடக்குவோம்.

---

## உண்மை நாடுவோர் கழகம்
### புரசை வாக்கம்
### சென்னை.

நாளது 7-4-34 சனி தினம் மாலை 6மணிக்கு வாராந்திரக் கூட்டம் தோழர் பி. பி. பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் எம். ஈ. எஸ். தாஸன், இன்னுசி முத்து, பொன்னம்பலம், பச்சையப்பன், வ. நாராயன் முதலியோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். பிறகு தோழர் எம் ஈ. எஸ். தாஸன் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானங்கள் பின் வருமாறு:—

வாராந்திரக் கூட்டம் பிரதிவாரம் ஞாயிறு தினம் காலை 8மணிக்கு நடைபெறும்.

மகாஜனக் கூட்டம் மாதமொருமுறை நடைபெறும். பொதுக்கூட்டம் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நடைபெறும். சென்னை மத்திக் நிர்வாக சபைக்கு இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தபின்வந்தனேபசாரத்துடன் கூட்டம் இரவு 9மணிக்கு முடிவடைந்தது.

தலைவர்கள்:- பண்டிட் பி. பி. பெருமாள்.

உபதலைவர்:-தோழர் ஆர். பி. ஏழுமலை.

ஸ்தாபகர்கள்:-சன்முகம், பொன்னம்பலம்.

பொக்கிஷதார்:-சி. பச்சையப்பன்

காரியதரிசி:- எம். ஈ. எஸ். தாஸன்.

உபக் காரியதரிசி:- வி. நாராயன்

நிர்வாக அங்கத்தினர்கள்:- எஸ். எம். முருகேசன் டி. பொன்னுசாமி குப்புசாமி, எம். குப்புசாமி, ஜே. பி. பால், எம். முனுசாமி, எஸ். ரத்தினம்.

அங்கத்தினர்கள்:- முனுசாமி, நடராஜன், எம். முனுசாமி, முருகேசன் ஆறுமுகம் ஸ்டீபன்ஸன், எஸ். ரத்தினம், தங்கவேலு, எஸ். கே. குப்புசாமி.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

மின்சாரக்கம்பியில் மாட்டி மந்திரத்தைச் சொல்லவேண்டுமென யாராவது சொல்லிக் கொடுத்தார்களா, தப்பித் தவறி அவ்வழியில் சிக்கினரா, நுண்ணறிவால் தெரிந்து கொண்டனரா எனத் தெரியவில்லை. பிறகு அந்த ஐரோப்பியர் அமெரிக்க சென்று மந்திரந் தெரிந்த ஒரு பார்ப்பனரைத் தேடினராம். இது இமயமலையின் மேல் ஒட்டக வேட்டைக்குப் போன கதையாயிருக்கிறது. மந்திரத்தை எல்லாம் மறந்துவிட்ட ஒரு பார்ப்பனரை அமெரிக்காவில் கண்டு பிடித்தாராம். அவர் சங்கடப்பட்டு பைரவ (நாய்) மந்திரத்தைச் சொல்லிக்கொடுத்தாராம். பழையபடி சீமைச் சுண்ணாம்புக் கட்டியைக் கருப்புப் பலகையைத் தோடும்படி வைத்து மந்திரத்தைச் சொல்ல பயிரவர் (நாய்க்காரர்) உருவம் விழுந்ததாம். இதனால் பார்ப்பனரின் அரிய ஆற்றல் அவர்மனதில் பதிந்ததாம். பார்ப்பனரால் முடியாத, பார்ப்பனர் இதுவரை எண்ணியிராத, ஒருமுறையை ஐரோப்பியர் ஒருவர் செய்ததிலிருந்து, பார்ப்பனரின் ஆற்றல் பெரிதும் சிறுமைப்பட்டது எனப் பூரியாருக்குப் படவேதோ இல்லையோ? நிற்க மந்திரத்தின் ஆற்றலை உறுதி செய்ய ஐரோப்பியக் கதையையும், அமெரிக்கக் கதையையும் சொல்லுவதை விட பூரியாரே மாட்டுக்கார மந்திரத்தையோ, நாயக்கார மந்திரத்தையோ, பன்றி (வராக) மந்திரத்தையோ சொல்லி, கருப்புப பலகையில் உருவம் விழும்படி மதுரையிலாவது, மின்சாரத்தில் பெயர் பெற்றவரெனச் சொல்லும் சேஷசாயி இப்பொழுதுதான் மரித்த திருச்சிஞப்பள்ளியிலாவது, செய்துகாட்டலாகாதா? இனியேனும் இக்கதையை அவர் சொல்லும் பொழுது, அதனையே செய்து காட்டும்படியாக யாரேனும் சொல்வார்களாக அப்பொழுது மந்திர ஆற்றலின் உண்மை எல்லாருக்கும் எளிதில் வெளிபாகிவிடும்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

எனெனில், அதிகமான பாவையர், தங்கள் அரும்குழந்தைகளை காத்தில் கௌவிக்கொண்டு, அபாயவீட்டின் கண்ணே அங்கும், இங்குமாய் அங்கலாய்த்து திரிந்தனர்களேயன்றி, துணிவுகொண்டு கோஷாமுறையை உதறித்தள்ளிவிட்டு வெளிச்சென்று தங்களையும், குழந்தைகளையும் காப்பாற்றினர்களில்லை. இதுதான், அப்பட்டணத்தில் உயிர் நீத்தவர்களின் தொகையை அதிகப்படுத்தியது.”

“பண்டைய பாழும் பழக்கம் என்றியம்பும் கோஷாமுறையை துணிவு கொண்டு போக்க சற்று பயந்தமையால் தங்களின் அரும் உயிரைக்காப்பாற்றமுடியாது இடிந்துவிழும் வீட்டின்கண் அகப்பட்டு புதையுண்டனர். அவர்கள் இக்கோஷாமுறையால் நிர்பந்திக்கப் படாமலிருப்பார்களேயாயின் நிக்ஷயம் துணிவுகொண்டு எவ்வித கூச்சமுமின்றி தங்கள் தங்கள் பிராணனைக் காப்பாற்றவெளி சென்றிருப்பார்.”

மேலும் இந்திய சிகப்பு சிலுவை சங்கத்தின் காரியதரிசியாம் ஸ்ரீமதி நோரஹூவில், என்பவரின் அறிக்கையில் காணபடுபவையாவன (இன்னவர் நேரில் கண்டது) “பீகாரில் நிகழ்ந்தபூகம்பத்தில் கடும் உயிர்ச்சேதத்தில் ஆண்களைவிட பெண்களே அதிகம் என்பதற்கு போதிய ஆதாரமும், காரணமும் இருக்குகின்றன. கோஷாமுறையே மறக்கமுடியாமுக்கிய கொடுமையாகும், உலகத்தில் வெறுக்கும் பாழாய்ப்போன பண்டையவழக்கமே இவ்விதப்பரிதாபகரமாக அருமைப் பெண்மணிகள் தங்களின் இன்னுயிர்களைப் போக்கவழியையுண்டாக்கின.” இதுபோன்ற நூற்றுக்கணக்காக நேரில் கண்டவர்களின் அறிக்கை இருந்து கொண்டிருக்கிறது. விரிவிஞ்சி விடுகின்றேன்.

முடிவாக ஓர் வார்த்தை.

சோதரிகாள்! நீங்கள் இது போன்ற பாழும் அபாயகரமான கொடும்பழக்கவழக்கங்களுக்கு எவ்விதமும் அளாகாமல், உலக பெண்ணுலகு என்னிலையில், தங்களின் சுதந்திரத்தை ஈற்றுவான் வேண்டி எவ்வித முயற்சிகளை கைகொள்கின்றர்களென்பதை மிகத்தெள்ளிதில் ஆராய்ந்து உங்களின் சுதந்திரத்தைப்பெற அஞ்சாது முன்வாருங்கள். உங்களின் எழுச்சி இன்றேல் உலக முன்னேற்றமில்லை.

தோழர்காள்!

சமதர்ம லக்ஷியம் சித்திபெற, இந்நாட்டிலுள்ள நிலம், நீர், மற்றும் சுகபோகங்கள் எல்லாம் சமமாக யெய்தி பொதுவுடமை வாழ்வை நிலைநாட்ட பெண்களின் ஒத்தாசை மிக அவசியமானதாகையால் பொருளாதாரப் பரடசி செய்யுமுன்ன பெண்களின் அர்தல்தையுயர்த்தி கல்வியீய்ந்து கட்டுப்பாடுகளையுடைந்து உங்களோடு சகல துறைகளிலும் போட்டிபோட்டுக்கொணடு சமதர்ம லட்சியம் வெற்றிபெறஅவர்களைத்தயார் செய்யுங்கள். ஆணகளும், பெணகளும் கலந்துழைத்தாலன்றி வெற்றியை எழிதிற் காணமுடியாது. எனவே தோழர்களே! விரைவில் ஆவன புரிய முன்வருவீர்களாக.

புரட்சி நீடூழிவாழ்க! சமதர்ம ஓங்குக!! பெண்ணுலகு புகழ்பெற்றோங்குக!!! தனிவுடமைவீழ்க!!!! பொதுவுடமை வாழ்க!!!!!

## சமதர்ம இலவச வாசகசாலை சாக்கோட்டை.

1-4-34உ காலை 8மணிக்கு வாசகசாலையின் ஆரம்பத்திறப்புவிழா தோழர் சாமி சிதம்பரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் வாசகசாலையை (சோஷலிஸ்ட் பீரீடிங்ரூம்) ஆரம்பித்து வைத்து ஒருசொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்னர் வாசகசாலையின் நோக்கங்களையும், அநுசரிக்கவேண்டிய விதிகளையும், அமைப்பாளர் எஸ். ஆர். சாமி படித்தவுடன் தோழர் சி. சாமிநாதன் “சுயமரியாதை இயக்கம் சொல்வதென்ன”? என்பது பற்றியும், தோழர் கே. ஆர். சுப்பிரமணியம் “மக்களும் மதமும்” என்பது பற்றியும், தோழர் எஸ். ஆர். சாமி “சமதர்ம வாசகசாலையின் அவசியம்” என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தியவுடன் நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடந்தது. தோழர் டி கே. முகமது இப்ருகிம் தலைவராகவும், எல் வீரப்பா அவர்கள் உபதலைவராகவும், எஸ் ஆர். சாமி காரியதரிசியாகவும் ஜி கன்னையன் உபகாரியதரிசியாகவும், தேர்ந்தெடுக்கப் பட்டனர். கமிட்டி மெம்பர்கள் தோழர்களான எஸ். ஜி. கிருஷ்ணன், எஸ். ராமசாமி, ஆர். சௌரிராஜன், கே. கணபதி, ஆர். ராஜகோபாலன் முதலியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

---

## சுயமரியாதைச் சங்கம் நாகை.

1-4-34 ஞாயிற்றுக்கிழமை நடந்த சங்க நிர்வாகஸ்தர்கள் தேர்தல் கூட்டத்தில் கீழ்கண்டவர்களே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர் தோழர்:— எ. கே. பெருமாள்.

உபத் தலைவர் தோழர்: — டி எஸ். மணி

காரியதரிசி தோழர்:— என். சிவஞானம்.

உப காரியதரிசிகள்:— தோழர் எம். எ. கோவிந்தசாமி, எம்- கோவிந்தராஜ்

பொக்கிஷதார்: — தோழர் எஸ்.பி. கிருஷ்ணன்

நிர்வாக மெம்பர்கள் தோழர்கள் எ. கோவிந்தன், வி. சாமிநாதன், எஸ். நாராயணசாமி, எம். ஆர். பதி, எம். ரெங்கசாமி, ஆர் வி. கோபால், கே கோதண்டபாணி, கே. ராஜு, ஜான் மார்ஸல், கே. முஜிபுல்லா, என். குஞ்சு.

---

## சீர்திருத்தத் திருமணம்.

கரூர் தாலூகா பளைபட்டியைசேர்ந்த இணுங்கனூரில் 8-4-34-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு தோழர் கே. இராமசாமி, குப்பம்மாள் இவர்களின் திருமணம் மூடப்பழக்க வழக்கமான சடங்குகளையும், பார்ப்பன புரோகிதத்தையும ஒழித்து திருந்திய முறையில் நடைபெற்றது. தோழர்கள் என், கே. சுப்பய்யன், எம். ஆர். மத்திரன், ஆர். வீரப்பன் முதலியவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி குறிப்பிடத்தக்கது.

---

## கோயில் கலகம்.

கோட்டாறு மேற்றிராசனத்தைச் சேர்ந்த மணற்குடிப்பங்குக் கிறிஸ்துவர்களுக்குள், பங்கு சுவாமியாரைச் சேர்ந்ததோரு கட்சியும், அவருக்கு விரோதமான ஒரு கட்சியும் இருந்ததாகவும், சுவாமியாரால் சமீபத்தில் நியமிக்கப்பட்ட கோயில் கணக்குப் பிள்ளையின நியமனமற்றக் கட்சியாருக்குப் பிடிக்காமற் போனதால் அவ்விரு கட்சியாருக்குள் பெருங்கலகம் ஏற்பட்டு, அடிதடி, குத்துவெட்டுப் பழியாய் முடிய, அநேகர் படுகாயப்பட்டு ஆஸ்பத்திரியிற் கிடப்பதாகவும், போலீசார் வந்து, கலகத்தைப் பின்னும் வளராமல் தடுத்து, பங்கு சுவாமியார் வீட்டிற்குக் காவல் வைத்து, கலகத்திற்குக் காரணஸ்தர்களைப்பிடித்துச்சிறைப்படுத்தியிருப்பதாக சமாசாரம் எட்டியிருக்கின்றது, என் ஒரு கிறிஸ்தவ பத்திரிகை எழுதுகிறது.

## கோவை ஜில்லா சுற்றுப்பிரயாணம்.

தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் இம்மாதம் 16-உ முதல், மேமாதம் 14-5-34உ முடிய ஒரு மாதகாலத்திற்கு கோவை, புஞ்சைப்புளியம்பட்டி, குன்னத்தூர், அவிஞசி, கோபி, கவுந்தப்பாடி, மேட்டுப்பாளையம், அந்தியூர், பவானி, ஈரோடு, காங்கயம். தாராபுரம், கொடுவாய் முதலான இடங்களுக்குச் சென்று சமதர்மப் பிரசாரம் செய்வதோடு ஆங்காங்கே சமதர்மக் கிளைச்சங்கங்கள் நிறுவ ஏற்பாடுகள் செய்துவிட்டு 14-5-34உ காலை புறப்பட்டு நேரே பல்லடத்திற்குத்திரும்பிச்செல்வார்.

## திருச்செங்கோடு தாலூகா ஆதிதிராவிட ஆசிரியர் சங்கம்.

8-4-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு திருச்செங்கோடு போர்டு ஆதிதிராவிட பாடசாலைக் கட்டிடத்தில சேலம் தோழர் கே. வி சுப்ராவ் பி. ஏ. பி. எல்., அவர்கள் அக்ராசனத்தின் கீழ் கூட்டம் கூடியது. அன்று திருச்செங்கோடு ரேஞ்சு ஸ்கூல்களின் ஜூனியர்டெப்டி இன்ஸ்பெக்டர் தோழர் எ. மாரிமுத்து அவர்கள் இந்தரேஞ்சில்சுமார்4-வருஷகாலமாயிருந்து ஆதிதிராவிடர்களுக்குப்பெரிது உதவிபுரிந்து வந்தவாராதாலும் அவர் இந்த ரேஞ்சைவிட்டு நீண்டநாள்லீவில்போவதாலும் அன்னவர் பிரியும் சங்கதியைப்பற்றி அவருக்கு ஓர் பிரிவு உபச்சாரப் பத்திரம் ஷை சபையாரால் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு எஸ். ஆர். சேகன், வி. ஆறுமுகம், கே. எஸ். கந்தசாமி, கே. மாரிமுத்து, என் பழனிசாமி, டி. எ. சுந்தரம முதலியவர்கள் உபந்யாசம் செய்தார்கள். அன்று ஓர் போட்டோவும் எடுக்கப்பட்டது. தலைவருக்கு வந்தனோபசாரம் கூறிய பின்கூட்டம் இரவு 7-மணிக்கு இனிது கலைந்தது.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

ரித்தவர் எவருமில்லை என்கிருர்.

ஹிந்துமதம் சொல்லுகிறபடி ஒருவன் செய்து மோக்ஷத்துக்குப் போகிறேன் என்பதற்கும், ஒருவருடம் சத்தியாவர்தனம் செய்தால் பார்ப்பான் உயிருடன் ஆகாயத்தில் பறக்கலாம் என்பதற்கும், சட்டமறுப்புக்கு நானே சிருஷ்டிகர்த்தா அதை என்னசெய்வது என்பது எனக்குமட்டுந்தான் தெரியும் என்று காந்தி சொல்லுவதற்கும் நமக்கு வித்தியாசம் தெரியவில்லை. எதிர்காலத்தில் அந்த ராத்மா, காந்திக்கு சொல்லப்போவது இன்னும் என்னென்ன என்பது எவருக்கு தெரியும்?

ராயல் கமிஷனுக இருந்து சைமன் கமிஷனுக பெயர்பெற்ற கூட்டத்தில் இந்தியநாட்டு முதலாளிகாங்கிரஸ்காரர்களுக்கு இடமில்லை என்று சட்டமறுப்பு தோன்றியதும், சட்டமறுப்பு செய்ததும், அப்பொழுது தோல்வியை ஒப்பக்கொள்ள பயந்து காந்தி இர்வின் ஒப்பந்தம் என்ற ஏமாற்று நாடகம்] நடந்தது. வட்டமேஜை மகாநாட்டுக்கு காந்தி சென்றும் ஹிந்துமத காங்கிரஸ் பிரபுக்கள் சொல்வதை சர்க்கார் கேட்கவில்லை; இந்நாட்டு எட்டுக்கோடி முஸ்லீமகளுக்கும் 8-கோடி ஆதிதிராவிடர்களுக்கும் சர்க்கார் இரக்கம் காட்டுவதை கண்டித்தும் பயனில்லாதுபோனதால், மீண்டும்சட்டமறுப்புப்போர் தொடங்கப்பட்டது. இதை சட்டைசெய்யாது முதன் மந்திரியின் அறிக்கை வெளிவந்தும் ஆப்பை பிடுங்கிய குரங்கின் கதையை காந்தி அடைந்தார். ஹரிஜனம் பட்டினி என்ற பேரால் பரிதாபத்துக்குறிய ஆதிதிராவிடர்களெனப் பட்டவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். பழிக்கு பயந்து முதன் மந்திரியும் காந்தி உயிரைக் காப்பாற்றிஞர். மிகுதியுள்ள 8கோடி மூஸ்லீம்களை மிரட்ட வழி இல்லை. கிடைத்தவரை கிட்டவிருக்கும் சீர்திருத்தத்தில் முஸ்லீம்கள் வெற்றியடையாதிருக்க வழி என்னவென்று பார்த்தார்கள். இன்றுள்ள நிலைமைக்கு சட்டசபையைக் கைப்பற்றி அதன் பேரால் எதாதுவது செய்து பார்க்கலாமா? என்பது தேசியப் புலிகளின் திட்டமாகும். இப்புரட்டுகளுக்கு ராஜ தந்திர முறையில் காநதியடிகள் தனி சட்ட மறுப்பையும் நிறுத்தி விட்டார் எனபதேயாகும். அகில இந்திய வர்த்தக சம்மேளனத்தில் தலைவர் தோழர் களின ரஞ்சன சர்க்கார் தமது தலைமைப் பிரசங்கத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தைச் சேர்ந்தஒருசாருர் அலசியமாஞல் ஓர் சமுதாய பொருளாதார புரட்சியை ஏற்படுத்தவே, சட்ட மறுப்பை முதல்படியாக உபயோகிக்க முயலுவதாகத் தெரிகிறது, பலாபலன்களை கவனியாது ஒரே பிடிவாதமுள்ள நோக்கம் கொண்டவர்களின் கைக்கு இவ்வியக்கம் மீறிவிட்டால் நாம் என்ன செய்வது என்பது பற்றியே சற்று ஆலோசிக்க வேண்டும்? அவ்வித நிலைமை ஏற்படாது என்று யார்தான் கூற முடியும் என்று கேட்கிருர் என்று கூறியதற்கும், காந்தி சட்ட மறுப்பை நிறுத்தியதற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு

மதன் மோகன மாளவியாவோ, வைசிராய் பிரபுவை மீண்டும் கண்டு சமூகத் தீமைமாற்றவேண்டுமென்று கேட்கப்போகிருர். பயனில்லையாஞல் லண்டனுக்கும் சென்று கிளர்ச்சி செய்யப்போகிருர். நமது காந்தி பாபுவோ அந்தராத்மாகட்டளைப்படி சட்ட மறுப்பை நிறுத்தி விட்டதாக அறிக்கை போட்டு விட்டார். உலக சரித்திரத்தில் எந்த விடுதலை வீரனும் கடவுளுடன் பேச்சு வார்த்தை வைத்துக்கொண்டு அடிக்கடி சம்பாஷித்து நாட்டை காப்பாற்றியதாக நமக்குத் தெரியவில்லை. காந்தி இன்னமும் இந்நாட்டு மக்களை மில்காரர்களின் கொடுமைக்கும், பிர்லாக்களும்,ஐயங்கார்களும், ஆச்சார்யார்களும் ஏமாற்றி மிதித்து கொழுத்து திரிய வழிதேடவே தனது கடவுள் பல்லவியைப் பாடுகிருர். இந் நாட்டு லெக்ஷக்கணக்கான மக்களின் கஷ்டத்தையும், தியாகத்தையும் வியர்த்தமாக்கி, கஷ்டப்பட்டவர்களின், கஷ்டப்படுபவர்களின் பெரும் கூட்டம் அதன் பலனை அனுபவிக்காதபடி செய்வதைக்கண்டு நாம் கவலையடையாவிட்டாலும், இன்னமும் மதத்தின் பேரால் மககளை மூடராக்க எண்ணுவதைப்பார்க்கும்போது வாளாய் இருப்பதற்கில்லை. காந்தி சிஷ்யர்கள் பலவித எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு சட்ட மறுப்பை நிறுத்த மறிக்கையை வரவேற்ற போதிலும், அதற்கு நியாயமற்ற காரணங்கள் காட்டுவதைக் கண்டிக்க தைரியமில்லாத இருந்த போதிலும் தோழர் நரிமன்போன்ற இரண்டொருவர்செய்தி நமக்குஆறுதலைக் கொடுக்கிறது.

சத்தியாக்கிரகமென்பது பரமார்த்திக முறையில் கையாளப்படவேண்டிய ஆயுதமென்றும், சுயராஜ்யத்திற்காக இனியாரும் கையாளக்கூடாதென்று,காந்தி சொல்கிறார். காங்கிரசானது சுயராஜ்யத்திற்காக ஏற்பட்டது. பரமார்த்திகத் துறையில் சில பரீட்சைகள் செய்து பார்ப்பதற்குக் காங்கிரஸ் சபை ஏற்படவில்லை...... காந்தியின் பேச்சுகளும் அறிக்கைகளும் சில சமயங்களில் சரியாக அர்த்தம் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது தமக்குள்ளாகவே சிந்தனைசெய்து பார்த்ததிலும், பகவானைப்பிரார்த்தித்ததின் மூலமும் ஒரு முடிவுக்கு வந்ததாகச் சொல்கிருர்.

தோழர் புலாபாய் தேசாய்:—மகாத்மாவின் எல்லாச் செயல்களுக்கும் ஆத்மார்த்த ஆதாரமிருக்கிறதென்று ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்களுக்கு அறிக்கையின் கருத்தை உணர்ந்துகொள்வது கஷ்டம்.

# உழைப்பவர் விடுதலை.

(தி. அ. வேங்கிடசாமி சு. ம. பாவலர்)

"பகவத்சிங்கைத் தூக்கலாமா" என்றமெட்டு.

உழைக்கும் மக்கள் உடல்இரத்தம்
உறிஞ்சி யுண்ணல் ஞாயம் ஆமா
பிழைக்கமுத லாளிமார்கள்
பேதையுடல் வாடலாமா (உழைக்கும்)

தொகையறு.

காடுவெட்டி மேடுபள்ளம் செப்பனிட்டுப்
பயிர்கள் செய்ய களைகள் போக்கி
வீடுமட்டும் கொண்டுவந்து தானியங்கள்
கொட்டுகின்ற விதங்கள் நோக்கித்
தேடும் அந்தத் தேட்டாளர் சிரமத்திற்
கேற்றபதில் செய்திடாதே
ஓடுபலே எனவிரட்டும் உலுத்தர்புவிக்
கெக்காரும் உதவாக்கோதே

பாட்டு.

பொம்மை போலிருந்துகொண்டு
போக போக்கி யங்கள்உண்டு
நன்மை யேசெய் எளியர் வாட
நாளும் இடர்செய்புர்மூட (உழைக்கும்)

தொகையறு.

குடிசையிலே குடியிருப்பு எசமானன்
கோப அனல் கொலை நெருப்பு
விடியுமுன்னே எழுந்து நடுச்சாமம் வரை
உழைப்பு உணவோ வெறுங்கூழ்உப்பு
அடிமுன் முடிவரையங்கம் அசையா
மூச்சார்ந்த பிணங்களுக்கோமோடி
குடி வகை செய்யாலுணவின் ஓடுமாட
கூடம்உப சாரம கோடி

பாட்டு.

ஏழைபணக் காரன் என்னும்
இந்தவித்தி யாசம்இன்னும்
வாழ்வ தற்கு வழியிலாது
மாற்றும் சம தர்மதாது. (உழைக்கும்)

இத்தகையவர் இரண்டொருவர் இருந்தபோதிலும், எதிர்காலம் சிறிது நம்பிக்கையை தமக்கு ஊட்டுகிறது. முஸ்லீம்கள் தங்களை பின்பற்றுவதாக கூறுவதற்கே வடநாட்டு சத்தியமூர்த்தியான டாக்டர் அன்சாரியை சுயராஜ்பக்கக்ஷிக்காரர்கள் தலைவராகப் பிடித்துப்போட்டு இருக்கிருர்கள். மீண்டும் முஸ்லீம்களுடன் சமாதான உடன்படிக்கை செய்யப்போவதாக தேசியவாதிகள் கூறுகிருர்கள்.

இதில் ஜனுப் ஜின்ஞவோ, அவர் தம் சகாக்களோ-ஏமாறுவார்கள் என்று நாம் கருதவில்லை. அடுத்த மேமீ முதல் தேதியில் அ. இ. கா. கமிட்டி கூடப்போகிறது என்கிருர்கள். அதன் முடிவு என்னவென்பதையும் அதற்குள் அந்தராத்மாக்கள் சொல்லுவதையும் நாம் அலுப்புறாது பார்ப்போமாக!

தேசீயப் புலிகளின் பரிபூரண சுயேச்சைப் புரட்டும், பிரட்டானியம் நீங்கிய சுயவாக்ஷிப் புரட்டும் வெளிப்பட்டுவிட்டது. சட்டசபைப் பிரவேசமே இவர்கள் லெக்ஷியமென்பதாகிவிட்டது. இவர்கள் சட்டசபையில் புகுந்தால் வெட்டி முறிக்கப்போவது என்னவோ. ஆயினும் காங்கிரஸ் தடபுடலில் சிக்காது சர்க்கார் சற்று புத்திசாலித்தனமாக இந்திய சட்டசபைத் தேர்தலை இன்னும் ஓர்ஆண்டு ஒத்திவைத்துவிட்டால் லார்டுவில்லிங்டன் மிகுந்தராஜதந்திரியென்பதுநிருபணமாகிவிடும். காந்தி அந்தராத்மா? தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் பின் சொல்லப்போவது என்ன? ஒத்துழைப்பா? ஒத்துழையாமையா? காந்திதன்சிஷ்யர்கள்கூட ஒத்துழையாமை செய்வதைத்தான் பார்க்கமுடியும்,

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசுத்தப்படுத்தாமல் மனதில் கபடங்களை வைத்துக்கொண்டு தேவ ஆலயமான கட்டிடத்தில் மண்டி போட்டுமென்றாடினால் உங்களது தேவன் மெச்சிக்கொள்வாரோ? ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார். அவருடைய கட்டளைகளை மீறுவதால் ஒரு வேளை கண்டிக்க நேரிட்டாலும் நேரிடலாம்.

"கடவுளை துதிப்பதுபோல் வாய் பாடும்
கண்ணும் கருத்துங் கண்ட இடமெங்கும் ஒடும்
திடமாக சரீரமே கோவிலுக்குள் நாடும்
சிந்தனை வெளியிலேதிரிந்து திண்டாடும்"

என்று வேதநாயகம்பிள்ளை கீர்த்தனையில் பாடியவாறு நீங்கள்கோவிலில் போய் ஜெபம் பண்ணுவதில் பலன் கிட்டி விடுமென கனவு காண வேண்டாம். பைபிள்கூட ஆலயமானது மனிதனுடைய இருதயமென்று தான் கற்பிக்கிறது (புது. ஏற். 421 பக்கம். 1. கொரி. 3-அ. 16&17 வசனம்) "நீங்கள் சர்வேஸ்பரனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் சர்வேஸ்பரனுடைய இஸ்பிரீத்து—சாந்துவானவர் உங்களுக்குள்ளே வாசம் பண்ணுகிறார் என்றும்அறியீர்களோ? ஒருவன்சர்வேஸ்பரனுடைய ஆலயத்தை பங்கப்படுத்தினால் சர்வேஸ்பரன் அவனை நிர்மூலமாக்குவார். சர்வேஸ்பரனுடைய ஆலயம் அர்ச்சிக்கப்பட்டதாயிருக்கின்றது. நீங்களே அந்த ஆலயம்" என்று எழுதப்பட்டிருப்பது இன்னும் சுரீர் என்றுபட வில்லையா? அல்லது கடவுளுடைய அனுக்கிரகத்தை ஜெபத்தாலும், தேவத்திரவிய அநுமானங்களாலும் அடையலாம் என்ற நம்பிக்கை தங்களிடமிருக்குமானால் அவரவர்களின் வீட்டிலிருந்த படியே அந்த பாழும் கடவுளை வணங்கிக் கொள்வதைப்பற்றிய கவலை என் போன்றவர்களுக்கிடையாது. வேதபிரமாணமும் அவ்வாறே கற்பிக்கிறது. அதாவது (புது ஏற். 14பக்கம் மத்தேயு 6அதி. 5&6 வசனம்) "அவ்வண்ணமே நீங்கள் ஜெபம் செய்யும்போது மனிதர்களால் காணப்படும்பொருட்டுஜெப ஆலயங்களிலும் சந்துக் கோடிகளிலும் நின்று கொண்டு ஜெபம் பண்ணப்பிரியப்படுகிற கள்ள ஞானிகளைப்போலிருக்க வேண்டாம். அவர்கள் தங்கள் சம்பாவனையை அடைந்து கொண்டார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். நீயோ வென்றால் ஜெபம் செய்யும்போது உன் அறைக்குள் பிரவேசித்து கதவைச் சாத்தி அந்தரங்கத்தில் உன் பிதாவை பிரார்த்தித்துக் கொள்.அப்போது அந்தரங்கத்தில் காண்கிற உன் பிதா உனக்குப் பலனளிப்பார்" என்று வரையப் பட்டிருந்தும் உஙகளது குளம்பிய மூளையில் படியாத காரணம் தான் என்ன? இப்படியெல்லாம் கத்தோலிக்கர்கள் நடத்த சுயமரியாதை கொண்ட தோழர்கள் பார்க்க சகிப்பார்களா? எப்படியாவது தங்களையும் பிரசிங்கத்தின் மூலம் நல்வழியில் திருத்த பாடுபட்டு வரும் நிரபராதிகளை சில கத்தோலிக்க பெருச்சாளிகள் "தவறி விழுவோர்க்குஊன்றுகோல்என்றும், நாஸ்திகர்கள் மண்டையை உடைக்கும்தண்டாயுதம்" என்றுப் பலவகை மொழிகள் வர்ணித்து புஸ்தகமூலமாக சுயமரியாதை நண்பர்களின் மேல் சீறி விழுந்து பல்லைக் காட்டுவதால் பனங்காட்டு நரி சல சலப்புக்கா அஞ்சப்போகிறது? அது தெரியாமல் இன்னும் உறுமுவீர்களானால்! பகுத்தறிவு என்னும் வாளால் உங்களது குருட்டு நம்பிக்கை யென்றவாலை ஒட்டப்பிடித்து நறுக்கப்படுமென்பது மனதிலிருக்கட்டும் உஜார்!

கத்தோலிக்கர்கள் எல்லாம், பைபிளிலுள்ள கட்டளைகளை எல்லாம் பல அர்த்தங்களை வைத்துக்கொண்டு தான் நடிக்கிறார்களே தவிர உண்மையென்பது எள்ளளவும் கிடையாது. இவர்கள் எப்பேர்பட்ட யோசனையுடையவர்களென்றால், ஒருமனிதன் பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து சிக்கனமுறையை கையாள வேண்டுமென்று சொல்வாரானால் இந்த கத்தோலிக்கக் குஞ்சுகள் என்ன அர்த்தமெடுத்துக் கொள்வார்களென்றால், ஆஸ்பத்திரியிலிருக்கும் அத்தனை ஆயிரம் தினுசான மருந்துகளும் மனிதர்களுடைய அவயவங்களை ததானே சொஸ்தப்படுத்துவதென்றால்; இந்த பொருளாதார நெருக்கடியான காலத்தில் சிக்கன முறையைக் கையாள வேண்டியதால் எல்லா மருந்தையும் ஒரே கண்ணாடி புட்டியில் போட்டு கலக்கி எந்த வியாதிக்கும் ஒவ்வொரு கரண்டி கொடுத்து வந்தால் உலகத்திலுள்ள மனிதர்களின் சிலர் பரலோகம் போய் விட்டு உலகத்திலுள்ளவர்களுக்கு எத்தனையோ சௌகிரியங்களுண்டாகும். எத்தனை டாக்டர்கள் 'நரசுகள்' லஸ்கர்கள், சிப்பந்திகள், அல்மேராக்கள், தளவடஜாமான்கள், கட்டிடங்கள், கண்ணாடி புட்டிகள் பணங்கள் சிக்கனமாகிவிடும் என்ற யோசனையில் நிற்பவர்கள்தான் கத்தோலிக்கர்கள் ஆனதால் எனது பிரிய நண்பர்களே! இனியாவது சுயமரியாதையோடு வாழ முயலுங்கள். மூடநம்பிக்கை யென்ற தூக்கத்தை விட்டெழுந்து சமதர்ம மெனும் சூரியனிடம் அணுகி ஆனந்தமடையுங்கள். கபடமென்னும் உப்புமூட்டையை தூக்கிக்கொண்டு திருச்சபை யென்னும் கயிறுகளால் கட்டி எடுத்துக் கொண்டு பரலோகமென்றபாதையை நாடிப் போவீர்களானால் இடையில் சுயமரியாதை யென்னும் ஒரு நதியை கடக்க நேரிடும். அப்பொழுது அந்த கபடமென்னும் உப்பு மூட்டை சுயமரியாதை ஆற்றின் தண்ணீரில் கரைந்துபோய் உங்களது பாரம் தொலைந்து சுகஜீவியாகஜீவிப்பீர்கள் அப்போது தங்களுக்கு நன்கு விளங்கும். ஆனதால் மடமக்களே! விழியுங்கள்! விழியுங்கள்!! விழியுங்கள்!!! இன்னும் உரங்கவேண்டாம்.

---

## மன்னார்குடி ஹரிஜன சேவா சங்கம்.

---

### பார்பனசூக்ஷியும், பத்திரிகைகள் ஒத்துழைப்பும்.

---

### அங்கத்தினர்கள் ராஜிநாமா.

மன்னார்குடி ஹரிஜன சேவா சங்கத்தார் மாகாண கமிட்டியாரின் உத்திரவு பெற்று இரண்டு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒன்றுக்குப் பார்ப்பனரும், மற்றொன்றுக்கு தாழ்த்தப்பட்டவரும் உபாத்தியாயர்களாகும். இருவரில் பார்ப்பனருக்கு மட்டும் மாதம் 10 ரூ. தவராது வந்துவிடுகிறது. தாழ்த்தப்பட்டவருக்கு சம்பளம் 5 ரூபாயாகவிருந்தும், மேலேகண்ட பள்ளிக்கூடம் ஏற்பட்டு 9-மாதங்களாகியும் இன்றுவரை சம்பளம வரவில்லை. அநேகமுறை மாகாணக் கமிட்டிக்கு எம். ஜி. நடராஜபிள்ளை உள்பட பல தலைவர்கள் எழுதியும் பதிலில்லை.

காந்தியார் சுற்றுப்பிரயாண காலத்தில் பார்ப்பனரல்லாத தோழர்கள் சற்று பாராமுகமாயிருந்ததால் காந்தியார் மன்னார்குடிக்கு வரும் அட்டவணையை மாற்றிவிட்டார்கள். பிறகு நடராஜபிள்ளை உள்பட ஹரிஜன சேவா சங்க கமிட்டி அங்கத்தினர்கள் ரூ. 1000-வரை தருவதாய் தந்திகொடுத்தும், மாற்றமுடியாமையால் வசூலான பணத்தை கொரடாச்சேரியில் கொண்டுபோய் மன்னார்குடி ஹரிஜன சேவா சஙகத்தலைவர் எஸ். கே. மகாலிங்கம் பிள்ளை அவர்களால் கொடுக்கப்பட வேண்டுமென்று அங்கத்தினர்கள் தீர்மானம் செய்திருந்தும், ஷை கமிட்டி அஙகத்தினராயிருக்கும் டாக்டர் முததுகிருஷ்னய்யர் அவர்கள்தன் சொந்தப் பொருப்பில் கொடுப்பதைப்போல் செக்கைக் கொடுத்து விட்டார்.

ஷை சங்கத்தலைவருள்பட அங்கத்தினர்கள் பலரும் முத்துகிஷ்ணய்யர் அவர்கள் சஙகத்தின் சார்பாக வசூல் செய்த பணததை தாங்கள் சொந்தப் பணத்தைபோல் கொடுத்துவந்தற்கு ப்பரிகாரம் கேட்டும் பதிலில்லை.

மாகாணக்கமிட்டியார் ஹரிஜனங்களுககாக செலவழிக்கப்படும் பணத்தில் பாதியை கொடுப்பதாக ஒத்திருந்தும் மன்னார்குடி கமிட்டியார் கணக்குகளை அனுப்பி 8-மாதங்களாகியும் பதிலில்லாமலிருக்கிறது. இதுசம்பந்தமாக பத்திரிக்கைகளுக்கு காரியதரிசி, தலைவர், முதலியவர்கள் எழுதினால் விஷயங்களைப் பிரசுரிக்காமல் பத்திரிகைக்காரர்கள் மாகாண கமிட்டிக்கே அனுப்பிவிடுவதாலும், இப்படிப்பட்ட பார்ப்பன சூக்ஷிகள், நிறைந்த கமிட்டியிலிருந்து வேலைசெய்ய மறந்து கீழ்கண்டவர்கள் அங்கத்தினாகள் பதவியைராஜினாமாசெய்துவிட்டார்கள்.

---

### ராஜினாமாவின் நகல்.

---

தோழர் S. K. மஹாலிங்கம்
பிள்ளை அவர்கள் அக்ராசனாதிபதி
ஹரிஜன சேவா சங்கம்,
மன்னார்குடி.

---

அன்பார்ந்த ஐயா,

மன்னார்குடி தாலூகா கமிட்டியாரிடம் மாகாண கமிட்டியார் நேர்மையற்ற முறைகளில் நடந்து கொண்டமையாலும் கமிட்டி அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராய பேதமிருப்பதாலும் நாங்கள் எங்களுடைய நிர்வாக அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துகொள்ளுகிறோம்.

(Sd) என். பாஷியம் காரியதரிசி, ஏ. எம் ஜி. நாடார் பொக்கிஷதார், அங்கத்தினர்கள், எம். ஜி. நடராஜ பிள்ளை, ஜி. எஸ் சோமசுந்தரம், க. சா. வரதராஜ பிள்ளை, என். ஜி. வெங்கிட்டராமன், வி. நடேசன், செ. ராமய்ப ஆசாரி, எல். சரவணசாமி.

---

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

——:0:——

ஷை மன்றத்தின் வாராந்திரக்கூட்டம் ஒன்று 8-4-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிக்கு தோழர் டி. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் கே. எஸ். நாதன், என். ரங்கநாதன், எம். எஸ். முத்து, என். பிரகாசம் முதலியோர்கள், "மதம் மனித முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை" என்பதுபற்றிப் பேசினார்கள்.

---

### "பிரசண்டமாருதம்" அறிக்கை!

---

இதுவரையில் நமது பத்திரிகை கூலி கொடுத்து அச்சிட்டு வந்தபடியாலும், அதனாலேற்பட்ட கஷ்டநஷ்டங்களாலும் நமக்கென்று ஒரு சொந்த அச்சு யந்திர நிலையம் நிறுவ ஏற்பாடு நடைபெற்று வருவதால் 1-4-34, 1-5-34 சுழல்கள் வெளிவரா! அதநடுத்த சுழல் அழகிய அட்டையுடனும், 'கார்டூன்' படங்களுடனும் வெளிவரும். வெளிவராதசுழல்களுக்கு ஈடாக அதில் அதிக பக்கங்கள் சேர்க்கப்படும். சந்தா நேயர்கள் இத்தாமதத்திற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

அ. இரத்தினசபாபதி
ஆசிரியர் பிரசண்ட மாருதம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவது. பெண்களைத் தாழ்த்துவது. மதத்தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்வது. சுதந்திர வெழுச்சியின் சத்துரு. நாடு பிடிக்கும் நாட்டமுடையது. ஹிம்சையை பின்பற்றுவது. ஏதேச்சாதிகாரத்தை விரும்புவது. இது தழைத்தோங்க மார்க்கமில்லை. இவை இரண்டும் சர்வாதிகாரிகளாக இருந்தாலும் மக்களின், உழைப்பாளிகளின் (Mass, Labourers, DictatorShip) சர்வாதிகாரமாகத் திகழவில்லை. மூன்றாவதாக சமதர்மமோ உண்மையான மக்களின் ஆட்சியாம். ஒழுக்கத்திற்குப் பொக்கம்பேசும் இடாலி, ருஷியாவே ஒழுக்கத்தில் சிறந்தது என பெர்னாட்ஷா சொன்னதை வாசகர்கள் உணரவேண்டும். பாரமார்க்கத்தில் பழமை ஸ்தானம் தனக்கென கொள்ளும் இந்நாடு வேதாந்திகட்கு சமதர்மம் பொருத்தமுற்றதே. எவ்வாறெனில் தனக்கென வாழாது மனித வர்க்கத்தின்பால் அன்பு பூண்டு பிறருக்குத்தொண்டு செய்வதே வேதத்தின் கர்மயோகம் கூறுவதால் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவர்களும் இஸ்லாமியர்களும் சமதர்மத்திற்கு மதவாயிலாக ஆதரவுகொடுக்கத் தொடங்கி விட்டார்கள். ஜெர்மனி, ஆஸ்திரியா, அமெரிக்கா, ஜப்பான், மெக்ஸிகோ, ஸ்பெயின், பிரான்சு, வெஸ்ட் இண்டீஸ், ஈஸ்ட் இண்டீஸ் முதலியவிடங்களில் சமதர்மம் தீவிரமாகப் பரவுகிறது. இதற்கிடையே நமது நாட்டின் நிலை என்ன? ஜவஹர் பாசிஸமும் பொதுவுடமையும் சேர்ந்த ஆட்சி விரும்புவதுடன், பொதுவுடமையே சிறந்ததென்கின்றார். போலோ விவசாயி, தொழிலாளி முதலியோரின் கட்டுப்பாடான ஆட்சி புதுப் பெயருடன் நிறுவ ஆசைப்படுகிறார். ரயில்வே தொழிலாளர் தலைவர்கள் சமதர்மம் வேண்டுமென்கின்றனர். அகில இந்திய வர்த்தகச் சங்கம் காந்தீயம், காங்கிரஸ் முதலாளி ஸ்தாபனமெனச் சொல்லி விட்டனர். இங்கிலையில் காங்கிரஸ் சோர்வற்றுக் கிடக்கிறது. தோழர் காந்தி எல்லாவற்றிற்கும் ஆமாம்போடுசாமி என்கிறார். தென்னாட்டுச் சுயமரியாதை சமதர்மிகள், சமதர்மமே தமது லக்ஷியம் பொதுவுடமையே ஜீவனு, காங்கிரஸ் மக்களின் ஸ்தாபனமல்ல. விவசாயிகளின் நிறைந்த இந்நாட்டிற்கு விவசாயிகளின் ஆட்சியே தேவை. பல மதவாதிகளையுடைய இந்நாட்டிற்குப் பாசிஸம் உதவா. இங்கு நடைபெறும் ஆட்சி மேல் வகுப்பாரையும் நடுத்தர வகுப்பாரை ஒழிக்க வேண்டுவதுடன் மதமற்று இயற்கைச் சட்டத்தை (Impersonal Natural Laws) அமுல் நடத்துவதாக இருக்கவேண்டுமென்று கூறுகின்றனர். இவ்வித ஆட்சியால் சிறுபான்மை பிரச்சினையும் (Minority Problem) வகுப்பு பாஷை பல கொள்கை இவைகளும் (racial linguistic barriers with different creeds) மறைந்துபோம் என்கின்றனர்.

உலக யுத்தத்திற்கு வழியில்லை. ஆயுத பரிகரண மகாநாடு தேவையில்லை. சர்வதேச சங்கத்தின் முதலாளித்துவம் சிதறிப்போடும். உலக சகோதரத்துவம் பொங்கியெழும் (Universal brother hood) என்கின்றனர். ஆகவே தோழர்காள்! சமதர்மத்தை உலகுய்ய போற்றுங்கள்.

---

(4ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்தி என் தாங்கள் ஒரு புது புத்தகத்தை வெளியிடலாகாது?

நிற்க நம் நணபரின் மூன்றாவது கேள்விக்கு ஆரிய சமாஜத்தை சார்ந்தவர்களைக் கேட்க வேண்டும். மாட்டிறைச்சி, சாராயம் முதலிய மதுவகைகள சாப்பிடுவதில்லை என ஆதி இந்துக்கள் செய்யும் பிரதிக்ஞையை பலப்படுத்துவதற்கு 'சுத்தி சடங்கு' செய்வதை நான் பார்த்திருக்கிறேன் என்பவைகளுமாகும். இதை நாம் ஆராயும்போது ஒரு சாதாரண விஷயத்திற்கு, ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து அறிய 'பகுத்தறிவு' அமைந்துள்ள மக்களுக்கு தீண்டாமையை போக்க 'சுத்தி' அவசியமா என்ற வினா எளிதில் பதிலளிக்கக் கூடியதாகும். இதற்கு ஆரிய சமாஜத்தையோ, மற்றும் எந்த கோஷ்டியாரையோ விசேஷமாகக் கேட்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. மாட்டிறைச்சி, சாராயம் முதலியவைகள் அருந்துவதில்லை என்ற பிரதிக்ஞையைப் பலப்படுத்துவதே 'சுத்தி' செய்வதென்றால் இவைகளை ஆதிதிராவிடர்கள்தான் அருந்துகின்றனரா? மற்று உயரிய வகுப்பினரெனப்படுவோர் ஒவ்வொரு நவநாகரீக சிற்றுண்டி சாலைகளில் விஸ்கி பீர் குடிப்பதும், பெரிய பெரிய கூட்டாலோசனை கமிட்டிகளில் மாட்டிறைச்சியையும் அருந்தி வருகின்றனரென்றால் இவர்களுக்கு என்ன பிராயசசித்தம் செய்யப்படுகின்றது? இதுவும் முற்றிலும் ஒரு மூட நம்பிக்கையல்லவா? உண்மை இந்து எனக்கூறுவதின் கருத்தென்ன? யார் யார் உண்மை இந்துக்கள் மாட்டிறைச்சியையும், சாராயத்தையும் அருந்துபவர்கள் உண்மை இந்துக்களல்லாவிடில் இவர்களையும் 'சுத்தப்' செய்ய வேண்டாமா?

---

## மாதர்கள் அமைத்த பாதை

குவாங்ஸி என்ற சீனமாகாணத்தில் ஒரு ரஸ்தாவை அமைக்கும் பொருட்டு 5000 பெண்களை அதிகாரிகள் நியமித்துள்ளனர். இந்த ஏற்பாட்டில் ஆடவர் சம்மந்தமே கிடையாது வேலையற்ற ஏழைப் பெண்களுக்கவே இந்த ஏற்பாடு.

---

## தூத்துக்குடி.

மாடசாமிபுரம் ஆதி திராவிட தோண்டர்படை கூட்டம் 2-4-34 திங்கள் கிழமை மாலை 6-30 மணிக்கு ஷை சங்க வாராந்திர கூட்டம் முனிசிபல் கௌன்சிலர் எல். மாடசாமி அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் பள்ளிக்கூடத்து மாணவர்களால் தமிழ்பாடல்களும், இங்கிலீஷ் பாடல்களும், சிறு கதைகளும், வெகு சிறப்பாக பாடப்பெற்றது. பின்னர் தோழர்கள் துரைசாமி, "சமதர்மம்" என்பதுபற்றியும், எஸ். ரோசரி "நமது கடமை" என்பது பற்றியும், எஸ். எம். சாமி, "கல்வி" என்பதுபற்றியும், பி. கே. ஜேசுதாசன், ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதுபற்றியும், ஏ. ஆர். ஆரோக்கியசாமி அவர்கள் "ஒற்றுமை" என்னும் பொருளைப் பற்றியும் பேசினார்கள். கடைசியாக சங்கத்தின் பிரசிடெண்டு கனம் ஜோசப் அலெக்சாண்டர் அவர்களால் தலைவருக்குப் பூமாலை சூட்டி சுமார் 10-மணி அளவில் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## மதுரை நாடார் மஹாஜன சங்கம்.

### ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் 3-வது லாட்டரி.

### தலைவர்களின் சுற்றுப்பிரயாணம்.

நமது சங்கம் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் 3-வது லாட்டரி டிக்கெட் புஸ்தகங்களை பல பாகங்களிலுமுள்ள அபிமானிகள் முயற்சியுடன் விற்பனைசெய்து ஷை டிக்கட் புஸ்தகங்களையும் தொகைகளையும் அனுப்பிக் கொண்டுவருகிறார்கள்.

லாட்டரி பிரைஸ் எடுப்பதென குறிப்பிட்டுள்ள 10-6-34உ க்குள் கோரியதுகை விற்பனையாக்கப்பற்று வெற்றியுடன் முடிவுக்கு கொண்டுவருவதற்காக காரியதரிசிகளுடன் லாட்டரி கமிட்டி மெம்பர்கள் தீவிர முயற்சி எடுத்துவருவது போற்றத்தக்கது. லாட்டரி டிக்கெட் விற்பனை சுற்றுப்பிரயாணத்திற்கெனவே டாஜ்பிளஷர்கார் ஒன்றும் வாங்கப் பெற்றிருக்கிறது.

நாளது 16-4-34உயில் மதுரையிலிருந்து மோட்டார் மூலம் சங்கம் வைஸ்பிரசிடெண்டுகளான ராவ்சாகிப் மு. ச. பெ. செந்தில்குமார் நாடார் அவர்களும், தோழர் உ. பு. ஆ. சௌந்திரபாண்டிய நாடார் எம். எல். சி. அவர்களும், பொதுக்காரியதரிசிகளான தோழர்கள் பெ. சி. சிதம்பர நாடார், ஆ. அ. ஆறுமுகநாடார் அவர்களும், இராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பரும், சங்கம் மாஜி காரியதரிசியுமான, மதுரை தோழர் பா. ம. பாண்டிய நாடார் அவர்களும், நேஷனல் இன்டியன் லைப் இன்சூரன்ஸ் கம்பெனியின் முக்கிய ஏஜெண்ட் தூத்துக்குடி தோழர் ஏ. எம். எஸ். அண்ணாமலை நாடார் அவர்களும், லாட்டரியின் டிக்கெட் விற்பனை பிரசாரத்திற்காக மதுரை ஜில்லா வட்டகையில் ஒவ்வொரு ஊர்களுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

அன்றியும் டிராவலிங் ஏஜண்டுகளையும், பிரசாரகர்களையும் பல வட்டகைகளுக்கும் அனுப்பிவைப்பதாகவும் தீர்மானித்திருக்கிறது.

ஆங்காங்குள்ள அபிமானிகள் அவர்களை அன்புடன் வரவேற்று டிக்கெட் புஸ்தகங்களை விற்பனை செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் என பொதுக்காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

---

## சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர் ம. சிங்காரவேலு பி,ஏ.,பி.எல்.,)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றும் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசியமும் மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்ம லக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசிய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம், சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை அணா 3.

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

(3-ம்பக்கத் தொடர்ச்சி.)

ந்தைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு அலௌவன்ஸ் என்று மொத்த வருமானத்திலிருந்து சிறு தொகைகள் கழிக்கப்பட்டு பின்புதான் வரி போடப்படுகிறது. ஒரு குடும்பத்தை சம்ரக்ஷிக்காதவன் பேரில் சற்று உயர்ந்த வரி போடுவதும் நியாயம்தான். ஆனால் இவ்வலௌன்சுகளால் பெரும்வித்தியாசங்கள் ஏற்படுமாயின் பலர் கலியாணம் செய்து கொண்டு பிள்ளை பெருக்கை அதிகரிப்பதுதான் தனக்கு லாபமெனக் கருதக்கூடும். தற்கால பிரான்சு போல் தேசத்தில் மிகவும் அசட்டுத்தனமான கர்ப்பத்தடை இருந்தால்தான் பெரும் வித்தியாசமிருக்கும்படி அலௌவன்ஸுகள் ஏற்படுத்தலாமேயன்றி நம் தேசத்தைப் போல் ஜனப்பெருக்கு அதிகமாக இருந்தால் பிரம்மசாரிக்கு ஓர் சம்ரக்ஷணை அலௌவன்ஸ் கொடுக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது.

இன்னும் மற்ற தேசங்களில் புருடன் வருமானத்தையும், பெண்ஜாதியின் வருமானத்தையும் சேர்த்துக்கணக்கிடுகின்றனர். இதுதான் நியாயமென்பதில் சந்தேகமில்லை. தற்பொழுதுபோல் பெண்களுக்குச் சொத்தும், வருமானமுமில்லாமல் நெடுநாளிருக்கப்போவதில்லை. ஆகையால் இவ்விரண்டையும் சேர்த்துக் கணக்குப்பார்ப்பதுதான் நியாயம்.

இங்கிலாந்தில் வருமானத்திலிருந்து ஒரு பாகத்தைச் செலவிடாமல் புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு முதலாகக் கொடுத்தால் அப்படிச் சேர்த்து வைக்கப்படும் முதலை வருமான வரி போடுவதற்கு முன் கழிப்பதுதான் நியாயமென்று கருதப்படுகிறது. இப்படிச் சேர்த்து வைக்கப்படும் முதலின்மீது வரிச் சுமையைக் குறைப்பதால் பலர் பணத்தைச் சேர்த்து வைக்கப் பிரயத்தனப்படுவர் என்ற எண்ணமே இதற்குக்காரணம், முதல் குறைதலாயிருக்கும் இந்தியாவில் இந்த நியாயத்தைக் கையாள வேண்டியது அவசியமெனத்தோன்றுகிறது. ஆனால் குறைந்த வருமானத்தை உடையவர்களின் முதலைத்தானிப்படி வரிச்சுமையில்லாமல் விடவேண்டுமென்று என்போன்ற சிலரின் கக்ஷி. பணக்காரர்களுக்கு முதலைச் சேர்க்கவேண்டுமென்ற புத்தியும் அதனால்தான் தேசத்துக்கும், தங்களுக்கும் நன்மை ஏற்படுமென்ற புத்தியும் தானாகவே ஏற்பட்டிருக்கிறது. ஏழைகளுக்குத்தான் அந்தப் புத்தி ஏற்படவில்லை. அதைத்தான் நாம் தூண்டவேண்டுமேயன்றி எல்லா முதலையும் வரிபோடாமல் விடுவது நியாயமாகத் தோன்றவில்லை.

வருமான வரியை வருடா வருடமா கணக்கிடுவது? அல்லது மூன்றோ அல்லது நான்கு வருடங்களுக்கா கணக்கிடுவது என்று பலர் கேட்கின்றனர். சாதாரணமாகப் பல வியாபாரங்களிலும் தொழில்களிலும் ஒருவருடம் அதிக வருமானமும் இரண்டாவது வருடம் குறைந்த வருமானமும், மூன்றாவது வருடம் நஷ்டமும், நான்காவது வருடம் மறுபடியும் அதிக வருமானமும் ஏற்படலாம். தற்பொழுதுபோல் ஒரு வியாபாரச் சுணக்கம் உயர்ந்த விலைகளும், அதிக லாபமும் ஏற்பட்டுக்கொண்டிருந்த சொற்ப காலத்திற்குப் பின்பு வந்தால் அநேக வியாபாரிகள் லாபம் வந்த காலங்களில் மட்டும் அதிக வரியைக் கொடுக்க சம்மதிக்கச் செய்வது பலாத்காரந்தானென்று கருதப்படுகிறது. சாதாரணமாக மழையில்லாததாலும், நல்லபருவங்களாலும் விவசாயத்தில் பெரிய நஷ்டமும், பெரிய லாபமும் அடுத்தடுத்தாற்போல் உண்டாகக்கூடும். இதற்காக ஆஸ்திரேலியாவில் நான்கு வருடக் கணக்கைப் பரிசோதித்து வரி விதிக்கப்படுகின்றது. இந்தியாவைப் போல் பெரும்பாலும் நல்ல மழையிலும், பருவங்களிலுமே வியாபாரப் பெருக்கேற்படும். தேசத்தில் இந்த தத்வம் ஒப்புக்கொள்ளப்படவேண்டுமென்று தோன்றுகின்றது.

இதுகாறும் வருமானவரி தத்துவங்களைப்பற்றி ஆராய்ந்தோம். இனி இங்கிலாந்தில் வருமானவரியின் சரித்திரத்தையும் அது தற்பொழுது விதிக்கப்படும் விகிதங்களையும்பற்றியும் விசாரிப்போம். வருமான வரி இங்கிலாந்தில் முதலில் விதிக்கப்பட்டபொழுது பவுனுக்கு 6-பென்சுதான் மிகவும் அதிகமான ரேட். அத்தகையகுறைந்த வருமான வரிக்கே பெருங்கூக்குரல் ஏற்பட்டது. பணக்காரர்களும், முதலாளிகளும் சொத்தைப் பறிமுதல் செய்யும் சட்டமென்ற அழுளி செய்தனர். க்லாட்சடன் [Gladstone] மிகவும் வருத்தத்துடன் அவ்வரியை விதித்ததாக காமன்ஸ் சபையில் பேசினார். பின்பு சமயம் வந்தவுடன் அவ்வரியை பவுனுக்கு இரண்டு பென்சாகக் குறைத்துவிட்டார்.

ஆனால் க்லாட்சடன் காலத்துக்குப் பின்பு வரி வசூலிக்கும் தத்துவங்களே மாறிவிட்டன. வரிகள் மேலும் மேலும் ஜனசமூகத்தில் வருமான வித்தியாசத்தைக் குறைப்பதையேகுறியாக வைத்துவிதிக்கப்பட வேண்டுமென்று தொழிற்கக்ஷிக்காரர்கள் ஆரவாரம் செய்கின்றனர். பல பிரபல நிபுணர்களும் அவ்வாறே எண்ணத்தையுடையவர்களாயிருக்கின்றனர். மகாயுத்தம் முடிந்தவுடன் 1920 ம் வருடத்தில் வருமான வரி பவுனுக்கு 6.ஷில்லிங் விதிக்கப்பட்டது. 2000 பவுனுக்கு மேல் வருமானமுள்ளவர்கள் மீது உயர்ந்த வருமான வரி சாதாரண வருமான வரிக்குமேல் விதிக்கப்பட்டது. தவிரவும் சண்டையால் ஏற்பட்ட உயர்ந்த விலைவாசிகளால் லாபமடைந்தவர்கள்மீது அதிக லாபவரியென்ற ஓர் வரி விதிக்கப்பட்டது. இப்பொழுது இங்கிலாந்தில் வருமானவரி எல்லாவருமானத்திற்கு மேலுள்ள வருமானத்தின்மீது பவுனுக்கு 5-ஷில்லிங். இத்தகைய வரியினால் தேச பொக்கிஷத்துக்கு 1925ல் 26 கோடி பவுனும், 1926 ல் $23\frac{1}{2}$ கோடி பவுனும் 1927 ல் 25 கோடி பவுனும் வசூலிக்கப்பட்டது. அதிக வருமான வரியால் 1925 ல் $6\frac{3}{4}$ கோடி பவுனும், 1926 ல் $6\frac{1}{2}$ கோடி பவுனும், 1927-ல் 6 கோடி பவுனும், வசூலிக்கப்பட்டது. அதிக லாப வரியால் 1925 ல் $\frac{1}{4}$ கோடி பவுனும், 1926ல் $\frac{1}{2}$ கோடி பவுனும் வசூலிக்கப்பட்டது.

இங்கிலாந்தில் வருமானவரி விதிப்பதை ஐந்துவிதமாகப் பிரித்திருக்கின்றனர். முதலாவது பூமியையும், வீடுகளையும் சொந்தமாக வைத்திருப்பதால் வரும் வருமானத்தின்மீது ஏற்படும் வரி. இரண்டாவது பூமிகளை உழுது சம்பாதிப்பதால் ஏற்படும் வருமானத்தின்மீது வரி. மூன்றாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கோ, குடியேற்ற நாடுகளுக்கோ கடன் கொடுத்திருப்பதால் ஏற்படும் வருமானத்திற்கு வரி. நான்காவது வியாபாரத்திலும், வேலைகளிலும் சில ஷேர்களிலும் வரும் வருமானத்தின்மீதும் வரி. ஐந்தாவது கவர்ன்மெண்ட் உத்தியோகத்திலும், கம்பெனி உத்தியோகத்திலும், வாரச் சம்பளம் வாங்கும் தொழிலாளிகளின்மீதும் வரி. இங்கிலாந்தில் வருமானவரி கொடுக்கும் நபர்களின மொத்த வருமானம் $237\frac{1}{2}$ கோடிபவுனென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வருமான வரி உயர தேச வருமானம் குறைவதாகக் காணோம். இதிலிருந்து வசூலிக்கப்படும் வருமான வரி $23\frac{1}{2}$ கோடி பவுன்தான். அதிக வருமானவரி போடுவதால் தேச வருமானம் வேகமாகக் குறையும் என்று பயப்பட்ட பயங்கொள்ளிகளின் எண்ணம் பொய்யாக இவ்வருமானம் அதிகப்பட்டுக்கொண்டே போகின்றது. தவிரவும் இவ்வருமானத்தை உடையவர்களுடைய எண்மட்டும் குறைந்துகொண்டே போகின்றது. பணக்காரர்கள் தற்காலத்தில் அதிகப் பணக்காரர்களாகின்றார்களென்பதும், வருமானவரி மேலும் மேலும் குறையும் நபர்கள் கொடுத்த போதிலும் மொத்தத் தொகை அதிகமாகின்றது என்னும் காக்ஷி தொழிற்கக்ஷிக்காரர்களின் தத்துவங்களை நிலை நாட்டுகின்றது என்பதற்குச் சந்தேகமில்லை.

நியாயமாக அதிக வருமான வரியையும், வருமானவரியைப்பற்றி நாம் பேசுங்கால் நாம் கருதவேண்டும். ஏனெனில் அதிக வருமானவரி வருமானவரியேதானே ஒழிய வேறில்லை. மிக உயர்ந்த வருமானங்கள் மீது அதிகவரி போடுவதில் நியாயத்துக்கு விரோதமாக ஒன்றுமில்லை. தற்காலத்தில் அதிக வருமானங்களெல்லாம் மிகக்கஷ்டப்பட்டு சம்பாதிக்கப்பட்டவையல்ல. லண்டன் பட்டணத்து வளர்ச்சியால் உபயோகமற்ற பூமியின் சொந்தக்காரரான ஒரு டியூக் தற்காலத்தில் பெரிய கோடீஸ்வரராகி விட்டார். கவர்ன்மெண்ட் ரயில் போடுவதாலும், ரோட்டுகள் ஏற்படுத்துவதாலும், பெரும் விளையாடுமிடங்களும் சோலைகளையும் அமைப்பதாலும், குறைந்த விலைக்கு மின்சாரத்தை விலக்கு விற்பதாலும் சுற்றி இருக்கும் பூமிகளும், குடியிருக்கத் தகுந்தவிடங்களும் விலை உயர்கின்றன. சற்றும் பூமியை திருத்தாமலும், ஓர் வசதியும் ஏற்படுத்தாத இம்பிரபுதாரர்கள் கவர்ன்மெண்ட் ஏதேச்சையாகச் செய்யும் காரியங்களால் பணக்காரர்களாகின்றனர். இது போலவே ஐரோப்பாவில் மகாயுத்தமாரம்பித்த பொழுது பலநாட்டுவியாபாரிகள் அதிக லாபத்தை அடைந்தனர். அந்த லாபத்தை ஒருவாறு ஜனங்களுடைய அதிக லாபவரியும், அதிகவருமானவரியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஜன சமூக முன்னேற்றத்தால் தான் இந்த லாபங்கள் ஏற்படுன்றது. ஆகையால் சமூகமிந்த லாபத்தில் பெரும்பான்மையை வரி மூலமாக வசூலிப்பது நியாயமாகத்தான் தோன்றுகிறது.

றது.

இந்திய வருமானவரி பல விசங்களில் மேற்சொன்ன தத்துவங்களுக்கு விரோதமாக விடுகின்றது. முதலில் எல்லா வருமானங்களின் மீதும் இந்திய வருமான வரி போடப்படவில்லை. விவசாயம் செய்து ஏற்படும் வருமானத்தின் மீது இந்திய வருமானவரி போடப்படாமலிருக்கின்றது. நிபுணர்களும், பல கமிஷன்களும் விவசாய வருமானத்தின்மீது வருமானவரி போடாமலிருப்பது நியாய விரோதமென்று சொல்லியிருக்கின்றனர். இங்கிலாந்தில் ஷெடூல் A-யிலும் B-யிலும் விவசாய வருமானத்தின்மீது வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. முதலாவது தேசத்துக்கு பெரும் நஷ்டம். இவ்வரியை விதிப்பதால் சுமார் 2 கோடி ரூபாய் வசூலிக்கப்படுமென்று கணக்கிடப்படுகிறது. இரண்டாவதாக தற்பொழுது போடப்பட்டிருக்கும் உயர்ந்த தீர்வை ஏழைகளை மிகவும் பாதித்து, பணக்காரர்களை இலேசுவாக விட்டு விடுகின்றது. மூன்றாவதாக ராஜதானி கவர்ன்மெண்டுகள் இவ்வரிகளை வசூலித்துக்கொள்வதால் ஸ்தலஸ்தாபனங்களுக்கு வருமானமேயில்லாமல் போய் விடுகிறது. வரி விசாரணைக் கமிட்டியாரும் இதே மாதிரியாக அபிப்பிராயப்படுகின்றனர். நான்காவதாக உயர்ந்த வருமான வரியிலிருந்து தப்பிப்பதற்காக தனவந்தார்கள் பூமியை வாங்க போட்டி போடுகின்றனர். எல்லா தேசங்களிலும் தனவந்தர்கள் தங்கள் மூலதனத்தைக் கைத்தொழில்களை விருத்தி செய்ய முயன்றுகொண்டிருக்கும் பொழுது நம் தேசத்தில் தனவந்தர்கள் பணத்தை பூமியின் விலையை உயர்த்துவதில் அசட்டுத்தனமாக செலவழிக்கின்றனர். பூமியிலிருந்துவரும் வருமானத்துக்கு வரியில்லாமலிருப்பதுதான் காரணம். இக்காரணத்தால்தான் கொஞ்ச பூமியை உடைய சிறிய விவசாயிகள் கிராமங்களிலிருந்து துரத்தப்படுகின்றனர். [illegible]தத்தை வாங்கிக்கொண்டு பட்டணங்களில் வசிக்கும் ஸ்வான்தார்கள் அதிகமாவது இதனால்தானென்று பலர் ஊகிக்கின்றனர்.

தவிரவும் இந்திய வருமானவரி பெண்ஜாதி, குழந்தைகளுக்குஒரு அலொவன்ஸ் கொடுக்கப்படாமல் விதிக்கப்படுகின்றது. இதனால் ஏழைகளுக்கும், அதிக குழந்தைகளை சம்ரக்ஷிப்பவர்களுக்கும் கஷ்டம் என்று சொல்லவும் வேண்டுமா? முதலுக்காக சேர்க்கப்படும் தனத்தின்மீதும் வரி போடப்படுவதால் முதலில்லாத இந்த நாட்டில் முதல் சேர்க்க ஓர் தூண்டுகோலில்லை என்று சொல்லவேண்டும். கஷ்டப்பட்டு வேலை செய்து சம்பாதித்த பணமென்றும், கஷ்டப்படாமல் சம்பாதித்த பணமென்றும் பிரிவினை செய்யப்படாததால் வட்டி வாங்கிப் பிழைப்பவர்களையும், பல வேலைகள் செய்து சம்பாதிப்போரையும் ஒரே மாதிரியாக நடத்தப்படுகின்றது. மேலும் இங்கிலாந்தைப்போல் வரி கொடுக்கும் நபரின் அத்யாவசியமான செலவுகளைக் கழித்துக்கொள்ளாமல் எல்லா வற்றின்மீதும் வரி சுமத்தப்படுகின்றது. ஆஸ்ட்ரேலியாவில்போல் நான்கு வருட வருமானத்தைக் கணக்கெடுத்து அவற்றில் சராசரி வருமானத்தின் மீதும் வரி போடப்படவில்லை.

இந்திய வருமானவரி போகப்போக வேகமாக உயராதது பெரும் தவறாகும். தற்பொழுதிருக்கும் வரியின்படி 1000 ரூபாய் வருமானத்தை உடையவர் ரூபாய் 20—13—0வும், 2000 ரூபாய் வருமானத்தை உடையவர் ரூ. 41—10—0வும், 3000 ரூபாய் வருமானத்தை உடையவர் ரூ. 93—12—0வும், 4000 ரூபாய் வருமானத்தை உடையவர் 125 ரூபாயும், 5000 ரூ. வருமானத்தை உடையவர் ரூ. 155-4-0வும், 6000 ரூ. வருமானத்தை உடையவர் 270 ரூபாயும், 7000 ரூபாய் வருமானத்தை உடையவர் 327-8-0வும், 8000 ரூபாய் வருமானத்தை உடையவர் 375 ரூபாயும், 9000 ரூபாய் வருமானத்தை உடையவர் ரூ. 427—8—0வும், 10000 ரூபாய் வருமானத்தை உடையவர் ரூ 625-ம் கொடுக்கின்றனர். வருடம் 40000 ரூபாய் வருமானமுள்ளவர்கள் ரூ. 2292, வருடம் 100,000 வருமானமுள்ளவர்கள் ரூ. 11980 தான் கொடுக்கின்றனர். இங்கிலாந்தில் வருடம் 150 பவுனுக்கு மேல் பவுனுக்கு 4 பென்சில் ஆரம்பித்து போகப்போக வெகு வேகமாக உயர்ந்து பவுனுக்கு 5 ஷில்லிங்கு வருகையில், இந்தியாவில் வெகு மெதுவாகத்தான் வருமானவரி ஏறுகின்றதென்றே சொல்லவேண்டும்.

இந்தியாவில் வருடத்தில் வருமானவரியிலிருந்து சுமார் 15 கோடிதான் வசூலிக்கப்படுகிறது. துறைமுக வரிகளில் சுமார் 40 முதல் 50 கோடிகள் வரையில் வசூலிக்கப்படுகின்றன. துறைமுக வரிகள் ஏழைகள் மீது வரிகள். ஆகையால் மேலும் மேலும் வருமானவரியை உயர்த்த வேண்டுமேயல்லாது துறைமுக வரிகளால் கவர்ன்மெண்டை நடத்துவது நாகரீகமான ஆட்சியல்ல.

---


## தேவை.

தக்க டிபாசிட் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு

உரிகம்

காரைக்குடி.

ஆகிய இரண்டிடங்களுக்கும் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

மானேஜர் "புரட்சி" ஈரோடு.

# The Right of Temple Entry.

By.


*P Chidambaram* B.A.,B.L.,M.L.A.

**Price Re. 1. Only.**

*Copies can be had of:-*

"Kudi Arasu" Publishing House, Erode.

R. B. P. Society Ltd., Erode.




## 'சுந்தரி ஸ்னே.'


ஒரு சுந்தரிஸ்னே வாங்குவோருக்கு ஒரு கைக்குட்டை இனும்.

சுந்தரி ஸ்னே தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட் :- A. V. R. A.

அடைக்கப்ப செட்டியார்,

52-பந்தர் தெரு, சென்னை.




# "பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினால் தயார்செய்யப்படுவது. வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,

52, பந்தர் தெரு, சென்னை.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.
விலை அணு 8.

## லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணு 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.
விலை அணு 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணு 4.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.
விலை அணு 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.
பாலகாண்டம் அணு 4.
அயோத்தியாகாண்டம் அணு 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணு 4.

## தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணு 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.
விலை அணு 3.

## பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு 4.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# பகுத்தறிவு வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுகட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துககாட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.
விலை அணு 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.
விலை அணு 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற
முடிவு தேதி 15-5-34



முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

டெர்பி

6—6—34.

## ஓர் முக்கிய பத்திரிகையில் வெளியான விஷயம். (மொழிபெயர்ப்பு)

ஈவினிங் நியூஸ்.

லண்டன் செவ்வாய் 18—3—1931.

லண்டன் பட்டணத்தில் அதிர்ஷ்டப்பெண்.

தன்னுடைய வேலையை விட்டு வெற்றிகாணச் சென்றார்.

**9,000 பவனுடன் ஒரு புருஷன்.**

அடியிற்கண்டது லண்டன்மா நகரத்தைச் சேர்ந்த கிளாப்பம் ஹாமன் தெற்கு பாகத்தில் வசிக்கும் "மிஸ். ரோசினு கத்திலீடவுட்" என்ற அதிர்ஷ்டப் பெண்ணின் சரித்திரம்:—

சுமார் 3-வருடத்திற்கு முன் லண்டனில் மேற்கண்ட மாது வேலைக்காரியாகவிருந்தார். பிறகு உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் தன் வேலையை விட்டு தென்னுப்பிரிக்காவுக்குச் சென்றார். செல்லும்போது கையில் 50-பவுன் முதலுடன் சென்றார். சென்றதும் அங்கு ஓர் வேலை கிடைத்தது. பிறகு அங்கு வசிக்கும் போது ருடீசியா தேசத்தில் சாலிஸ்பரி பட்டணத்தில் வசிக்கும் ஓர் கணக்குவேலை பார்ப்பவர்மீது காதல் கொண்டு அவரை மணக்க நிச்சயித்தார் மணம் செய்து கொள்வதற்குமுன் பெற்றோர்களைப் பார்த்துவர லண்டன் திரும்பினர். அப்போது அவர் கையிலோ 3 பவுன்தானிருந்தது ஆனல் கப்பலைவிட்டிறங்கியவுடன் ஓர் மகிழ்ச்சி தரும் விஷயம் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தது. எப்படியென்றால் ஆப்பிரிக்காவிலிருக்கும்போது மியூட்சுவல் கிளப் லிமிடெட் "மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிஹேப்" குதிரைப் பந்தய லாட்டரியில் ஓர் டிக்கட் வாங்கியிருந்தாள். அந்த டிக்கட்டிற்கு முதல் பிரைஸ் கிடைத்தது 9,000 பவுன் தனக்குக் கிடைக்கப்போகும் விஷயத்தை அறிந்து மகிழ்ச்சியடைந்தார். அவரை மணக்கப்போகும் புருஷனும் அதிர்ஷ்டசாலிதான். அவர்தான் டிக்கட் வாங்கிக்கொடுத்தவர். அவர் வாங்கிக் கொடுத்த டிக்கட் முதல் பிரைஸ் வந்ததால் அவருக்கும் 800 பவுன் கிடைத்தது. பிறகு மிஸ். டவுட் கலியாணம் செய்து கொண்டு ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்ய எத்தனித்துவிட்டார். அவர் புருஷனும், இங்கிலாந்து தேசத்தையே கண்டிராததாலினுல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்பியைக்காண ஆவலாயினர்.

இந்தியாவிற்கு 1-வது, 2-வது, 3-வது பிரைஸ்கள் கிடைத்திருப்பதோடுகூட
ஒவ்வொரு முறையும் பல குதிரைகளும் கிடைத்து வருகிறது.



கூப்பன்களை ஆடிட்டர்களால் தணிக்கை செய்யும் காட்சி

### பிரைஸ் கொடுத்தல்.

நாங்கள் ம்யூட்சுவல் கிளப் லிமிட்டெட் வெளியிட்டுள்ள பிரைஸ்லிஸ்டுகள் எமது கவர்ன்மெண்ட் பிரதிநிதியால் சம்பந்தப்பட்ட லாட்டரிகளில் குறித்துக் கொள்ளப்பட்ட விபரங்களுடன் ஒத்துப்பார்த்ததில் சரியாக இருக்கிறதென்பதையும் பிரைஸ் தொகைகள் உரியவர்களுக்கு அவர்கள் கேட்டமேல் கொடுக்கப்பட்டதற்கு உள்ள ஆதாரங்கள் எமக்குக்காட்டப்பட்டன என்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டுக்காக,

[ஒப்பம்] FERDINAND NIGG,

காரியதரிசி.

வடூஸ், 1930 செப்டம்பர் 3.

எல்லா விடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

**S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.